REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஓகஸ்ட் 12 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 191 | Monday 12, August, 2024 | 20பக்கங்கள் | 50/-


## தேசிய சிறந்த வர்த்தக நாமங்கள் விருது வழங்கும் விழா விரைவில்

### கைத்தொழில் அபிவிருத்தி சபை ஏற்பாடு

கைத்தொழில் அமைச்சும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையும் இணைந்து இலங்கையில் முதன்முறையாக அரச அனுசரணையுடன், தேசிய சிறப்பு வர்த்தக நாமங்களுக்கான

06

### நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக

# லயன்களில் வாழ்வோருக்கு கிராமத்தில் வாழும் உரிமை



### குத்தகையை இரத்துச் செய்து அதற்கான காணிகளை அரசு மீள சுவீகரிக்கும்



### மலையக தமிழ் மக்களுக்கு சமூக நீதியை நிலைநாட்ட 2025 இல் மாநாடு

### நுவரெலியா மாவட்ட வர்த்தக சமூகம், கல்விசார் நிபுணர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

லயன் அறைகளில் வாழும் மக்களுக்கு முதல் தடவையாக கிராமங்களில் வாழ்வதற்கான உரிமை வழங்கப்படுமெனவும், இதற்காக லயன் காணிகளின் குத்தைகளை இரத்துச் செய்து அரசாங்கம் பொறுப்பேற்க உள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நுவரெலியா மாவட்ட வர்த்தகர்களுடன் நடத்திய சந்திப்பிலேயே (10) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

06

## தேர்தல் கண்காணிப்பு: ஐ.யூனியன் பொதுநலவாய நாடுகளுக்கு அனுமதி

### தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை

06

## விஜயமுனி, விமலவீர, சுரேஷ் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க மேலும் மூவர் உறுதியளித்துள்ளனர். அவர்களில் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் முன்னாள் அமைச்சரும் உள்ளடங்குகின்றனர்.

கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா, ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் பதுளையில் போட்டியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் அம்பாறை மாவட்ட பொதுஜன பெரமுன எம்பி விமலவீர திஸாநாயக்க ஆகியோரே இவ்வாறு உறுதியளித்துள்ளனர்.

06

## எகிப்து, இலங்கைக்கிடையில் இராஜதந்திர பயிற்சி ஒப்பந்தம்



பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனத்துக்கும் எகிப்தின் வெளிவிவகார இராஜதந்திர நிறுவனத்துக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. எகிப்துக்கு உத்தியோகபூர்வ விஜயம்மேற்கொண்ட வெளிநாட்டமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியும் எகிப்தின் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி

06

## சர்வதேச முத்தமிழ் முருகன் மாநாடு 24, 25களில் பழனியில்

### சிறப்பு விருந்தினராக ஆளுநர் செந்திலுக்கு அழைப்பு





இந்தியாவின் பழனி முருகன் ஆலயத்தில் இவ்வருடம் நடைபெறவிருக்கும் சர்வதேச முத்தமிழ் முருகன் மாநாட்டுக்கு, சிறப்பு விருந்தினராக கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானுக்கு

06

### தேர்தல் செலவுகளுக்கு ரூ 1,000 கோடி

## மேலதிக வேட்பாளர் ஒருவருக்கு ரூ. 200 மில்லியன் செலவாகலாம்

### தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்க

**லோரன்ஸ் செல்வநாயகம்**




இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. அதிகரிக்கும் ஒரு வேட்பாளருக்காக மேலதிகமாக 200 மில்லியன் ரூபா

06

## சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே MP ஐ.ம.ச. தலைவர் சஜித்துக்கு ஆதரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிப்பதாக

06

## நாகபட்டினம்–காங்கேசன்துறை பயணிகள் சேவை 15 இல் ஆரம்பம்

### ஆசன முன்பதிவுகள் செய்யலாம்

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



நாகப்பட்டினம் - காங்கேசன்துறை கப்பல் போக்குவரத்து சேவையை எதிர்வரும் 15 முதல் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான வௌ்ளோட்டம் சனிக்கிழமை (10) நடத்தப்பட்டதுடன் ஆசன முன்பதிவுகள் ஆரம்பிக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவிய மோசமான வானிலையால், (08) நடைபெறவிருந்த வெள்ளோட்டம் இரண்டு நாட்கள் தாமதித்து (10) நடத்தப்பட்டது. வெள்ளோட்டம் நிறைவடைந்துள்ளதால், பயணிகளுக்கான ஆசன முன்பதிவு விரைவில் ஆரம்பிக்கப்படுமென நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

'சிவகங்கை' கப்பலில் சாதாரண வகுப்பில் 133 இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு நபருக்கு (இந்திய ரூபாவில்) 05 ஆயிரம் ரூபா கட்டணமும், பிரீமியம் வகுப்பில் 27 இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன.

06

## தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பு இன்று ஜனாதிபதியுடன் சந்திப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுக்கும் தமிழ் தேசிய பொது கட்டமைப்பு இன்று ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளது.

இச்சந்திப்பு கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறுவதற்கான அழைப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ளார்.

06

## பிரதான வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த தீர்மானம்

### அரியநேத்திரனிடமும் விளக்கம் கோரப்படும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களுடன் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு இலங்கை தமிழரசு கட்சி தீர்மானித்துள்ளது.

நேற்று நடைபெற்றுள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டத்தின் போது, இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அந்த கட்சியின் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

06




03

### அடுத்த சில நாட்களில் இடியுடன் கூடிய மழை

வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு



03

### அ.இ.ம.காங்கிரஸின் முடிவு புதன்கிழமை அறிவிக்கப்படும்

எமது வேட்பாளருக்கே வெற்றி

## இராஜகிரிய பகுதி வீட்டுக்குள் ஆயுதக் கிடங்கு கண்டுபிடிப்பு



### 'கொதா அசங்க'வின் ஆயுதங்கள் என தகவல்

இராஜகிரிய பகுதியில் வீட்டின் நிலத்தடியில் வைக்கப்பட்டிருந்த ஆயுதக்கிடங்கு கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. வெளிநாட்டிலுள்ள போதைப்பொருள் கடத்தல்காரரான 'கொதா அசங்க' என்ற நபருக்குச் சொந்தமான ஆயுதங்கள் இவை எனத் தெரிய வந்துள்ளது. இந்த துப்பாக்கிகளை மறைத்து வைத்திருந்த சிறைச்சாலை அதிகாரி ஒருவர் இராஜகிரிய, மதின்னாகொடவில் வீடொன்றில் வைத்து கைது செய்யப்பட்டார். T 56 துப்பாக்கி, T 56 ரக துப்பாக்கி தோட்டாக்கள் 300, ஒன்பது

06

## சிறிய ரக லொறி–முச்சக்கர வண்டி மோதி கோர விபத்து; இருவர் பலி

### இருவர் படுகாயம்; மஸ்கெலியாவில் சம்பவம்

**ஹற்றன் சுழற்சி நிருபர்**



மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் முச்சக்கர வண்டியும், சிறிய ரக லொறியும் நேருக்கு நேர் மோதியதில், முச்சக்கரவண்டியில் பயணித்த இருவர் உயிரிழந்தனர்.மேலும், இருவர்

06

## துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த கொள்கலன் கப்பலில் திடீர் தீ

### நிலைமை முழுமையான கட்டுப்பாட்டில்



கொழும்பு துறைமுகத்தின் ஜேசிடி 04 முனையத்தில் நங்கூரமிட்டிருந்த கப்பலில், நேற்றுக் காலை திடீரென தீ விபத்து ஏற்பட்டது. துறைமுகத்தின் தீயணைப்புத் துறையினர், தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து முற்றாக அனைத்தனர். சிங்கப்பூர் துறைமுகத்திலிருந்து கொழும்பு

06



# வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை இரு வருடங்களில் கட்டியெழுப்ப இலங்கையினால் மட்டுமே முடிந்தது

## மீன்பிடித் தொழிலாளர்கள் முன்னிலையில் ஜனாதிபதி தெரிவிப்பு

ஒரு நாடு என்ற வகையில் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்திற்குள் கட்டியெழுப்பி ஸ்திரமான நிலைக்கு கொண்டு வர இலங்கையினால் மாத்திரமே முடிந்ததென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தில் கடந்த 9 ஆம் திகதி 'தியவர திரிய' என்ற பெயரில் நடைபெற்ற தேசிய மீனவர் மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில், நாடளாவிய ரீதியில் உள்ள பிரதான மீனவ சங்கங்கள் மற்றும் கிளைச் சங்கங்களின் தலைவர்கள் உட்பட பெருந்தொகையான பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த மற்றும் தேசிய மீனவர் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கடற்றொழில் பிரகடனத்தை ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

இங்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

"ஒரு நாடாக நாம் எரிபொருள், மருந்து மற்றும் உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்டோம். இரண்டு வருடங்களின் பின்னர் இன்று நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடிந்துள்ளது. ஆனால் எமக்கு இன்னும் பொருளாதாரப் பிரச்சினைகள் உள்ளன.

இரண்டு வருடங்கள் நெருக்கடியான காலக்கட்டத்தில் சுமைகளை சுமந்த அனைவருக்கும் நான் நன்றி சொல்ல வேண்டும். நாம் வீழ்ந்தால் நாடு அழிந்துவிடும். ஆனால் நாம் முன்னேற முடியும் என்று நான் நம்பினேன். இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்தில் இலங்கையின் பொருளாதாரத்தை நிலைப்படுத்த முடியும்.

கடன் வாங்குவதைக் மட்டுப்படுத்தும் அதே நரம் வருமானத்தை அதிகரித்துகொள்ள வேண்டும் என்பது சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடுகளில் ஒன்றாகும். அதற்கான கடினமான சில முடிவுகளை நாம் எடுக்க வேண்டியிருந்தது. VAT வரியை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் சிறிது காலம் மக்களுக்கு சுமையாக இருக்கும் என்பதால், தற்போது அந்தப் பிரச்சினைகளுக்கு படிப்படியாக தீர்வு காண்கிறோம்.

அதன்படி நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம். கடன் சுமையிலிருந்து விடுபட வேண்டுமாயின் இன்னும் 4_5 வருடங்கள் இந்தப் பயணத்தைத் தொடர வேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடன் நாம் எட்டிய உடன்பாடுகளை மற்றைய நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளன. அந்த நிபந்தனைகளை மீறினால், எமக்கு எந்த உதவியும் கிடைக்காது.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தங்களை 16 முறை மீறியதால் எம் மீதான நம்பிக்கையை இழந்துவிட்டனர். இம்முறை நாம் செய்து கொண்ட ஒப்பந்தம் வலுவானது. அதன்படி அடுத்த 04, 05 வருடங்களுக்கு நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டுமா அல்லது நிபந்தனைகளை உடைத்து கிடைக்கும் சலுகைகளை இழந்து நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சியடைய அடையச் செய்வதா என்பதை தீர்மானிக்க வேண்டும்.





மீனவர்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுக்க வேண்டும். மேலும், மீனவர்களின் பிள்ளைகளுக்கு நல்ல கல்வி கிடைக்க வேண்டும். இந்த நடவடிக்கைகளுக்காக புதிய நலத்திட்டங்களை செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். எரிபொருளுக்கு வழங்கப்படக்கூடிய சலுகைகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கடற்றொழில் அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்.

மேலும், மீன்பிடி துறைமுகங்களை மேம்படுத்த வேண்டும். அதற்காக விவசாய நவீனமயமாக்கல் திட்டத்துடன், மீன்பிடித்துறையை நவீனமயமாக்கும் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. தாய்லாந்து, வியட்நாம் உள்ளிட்ட நாடுகளைப் போன்று மீன்பிடித் தொழிலை நம் நாட்டிலும் வலுவூட்ட வேண்டும். அதற்காக இடைக்கால மற்றும் நீண்டகால திட்டங்களை செயற்படுத்த வேண்டும்."

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

"ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டு மக்களின் பொருளாதாரத்தை பலப்படுத்தி வருகிறார். இன்று இலங்கை ஆசியாவின் அதிசயமாக மாறி வருகிறது.

ஜனாதிபதி உலகின் சக்திவாய்ந்த தலைவர் என்பதைக் கூற வேண்டும். அரசியலில் மட்டுமின்றி அறிவாற்றலும் உடைய அவர் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்கிறார். அன்று மக்களுக்கு எதிர்காலம் தொடர்பில் நம்பிக்கை இருக்கவில்லை.

அந்த இருண்ட காலத்தை நினைத்துப் பாருங்கள். அவ்வாறான சூழ்நிலையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் இந்த நாட்டைப் பொறுப்பேற்காத நிலையில், நாட்டைக் கட்டியெழுப்பும் சவாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க துணிச்சலுடன் ஏற்றுக்கொண்டார்.

நம்பிக்கையின் தீபமாக நாட்டுக்கும் மக்களும் வாழக்கூடிய சூழலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உருவாக்கினார். எதிர்காலத்திலும் சரியான வழிகாட்டுதல்களைத் தொடர்ந்து வழங்கும் ஒரு தலைமை நாட்டிற்குத் தேவை.

அதற்காக அவருடைய கரங்களைப் பலப்படுத்த நாம் செயற்பட வேண்டும். அத்துடன், நீண்டகாலமாக நிலவி வரும் மீனவ மக்களின் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் தீர்வு காண்பார் என நாம் எதிர்பார்க்கின்றோம்".

கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த, இந்த நாடு பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் மிக மோசமான நெருக்கடியை எதிர்கொண்ட போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றதுடன், தூரநோக்கத்துடன் செயற்பட்டு இன்று இந்த நிலைக்கு நாட்டைக் கொண்டு வந்துள்ளார். இல்லையேல் இன்னும் நாம் வரிசைகளில் நின்று கொண்டிருப்போம் என்பதைக் குறிப்பிட வேண்டும். இப்போது உங்கள் எதிர்காலப் பாதை தெளிவாக உள்ளது.

நாம் மீனவ மக்களுக்காக, எரிபொருள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கான சலுகைகளை வழங்குதல், மீனவர் வீடுகள் வழங்குதல், மீனவப் பெண்களை வலுவூட்டுதல் போன்றவற்றுக்கு மேலதிகமாக தற்போது மீன்பிடித் துறைமுக அபிவிருத்திப் பணிகளும் எமது மீனவர்களுக்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும், மீனவர் காப்புறுதி மற்றும் ஓய்வூதிய முறை, மீனவ சமூகத்தின் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல், மீனவர்களின் பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்துதல், மீன்பிடி தொழிலுக்கு புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல், மீன் அறுவடைக்குப் பின்னரான சேதம் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் துரித நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன. பொருளாதாரத்தை வலுப்படுத்தும் ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தின்படி இவை கடினமான விடயங்கள் அல்ல".

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார பேசுகையில், "இன்று பங்களாதேஷில் நடப்பது ஊடகங்களில் பார்க்கப்படுகிறது. தெருக்களில் பெண்கள் தாக்கப்படுகிறார்கள், மக்கள் கொல்லப்படுகிறார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இல்லாவிட்டால் இலங்கையில் இவ்வாறானதொரு நிலைதான் ஏற்பட்டிருக்கும்.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார யுத்தத்தில் இருந்து மக்களைக் காப்பாற்ற ஜனாதிபதி செயற்பட்டு வருகின்றார். எவ்வளவு சிரமம் இருந்தாலும் மீன்பிடி நடவடிக்கைகளுக்குத் தேவையான எரிபொருளுக்கான சலுகைகளை வழங்க அரசாங்கம் செயற்பட்டுள்ளது. உங்கள் தொழிலுக்குத் தேவையான தொழில்நுட்பம் மற்றும் பிற வசதிகளை வழங்கவும் நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

எதிர்காலத்தில் மீன் அறுவடையை அதிகரிப்பதற்கான ஊக்குவிப்புகாக மண்ணெண்ணெய் விலைக்கு நிவாரணம் வழங்கப்படும் என்பதைக் கூற வேண்டும். கடற்றொழில் அமைச்சர்கள் கோரிக்கை விடுத்ததன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

மேலும், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள உங்களை வலுப்படுத்த நடைமுறைப்படுத்த வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் செப்டம்பர் 21ஆம் திகதிக்குப் பிறகு தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்பதைக் கூற வேண்டும்".

தேசிய மீனவர் சம்மேளனத்தின் பிரதம செயலாளர் நெல்சன் எதிரிசிங்க பேசுகையில்,"1500 இற்கும் மேற்பட்ட கிராமப்புற மீனவ அமைப்புகள் உள்ளன. 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் படி, மீன்பிடி அமைச்சு தேசிய மீன்பிடி கூட்டமைப்பை நிறுவியுள்ளது. 100,000 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் அதில் உள்ளனர் என்பதைக் கூற வேண்டும்.



மீனவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவது அவசியம். அதற்காக 28 வருடங்களுக்கு மேலாக நிலவி வரும் மீனவர்களைப் பாதிக்கும் சட்டங்களைத் திருத்துமாறு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு தற்போதைய அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். அந்த விதிமுறைகள் அடங்கிய வரைவை ஜனாதிபதியிடம் கையளிக்க எதிர்பார்க்கின்றோம்" என்றார்.

# இலங்கை புதிய பொருளாதார யுகத்தினுள் பிரவேசிக்கின்றது

## கண்டி வர்த்தக சங்க பிரதிநிதிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

இலங்கை தற்போது புதிய பொருளாதார யுகத்திற்குள் நுழைந்துள்ளது. எனவே அடுத்த வருடத்தின் நடுப்பகுதிக்குள் நாட்டின் பொருளாதாரம் இதை விட முன்னேற்றம் அடையும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கண்டி மாவட்ட வர்த்தக சங்கப் பிரதிநிதிகளுடன் நேற்றுமுன்தினம் (10) கண்டியில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

வர்த்தகங்களை பாதித்துள்ள பல சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் தளர்த்தப்பட்டு, வர்த்தகர்களின் பணிகளை இலகுவாக்கும் வகையில் புதிய நிறுவனக் கட்டமைப்பு உருவாக்கப்படும் எனத் தெரிவித்த ஜனாதிபதி, மாகாணங்களின் பொருளாதார அதிகாரத்தை பரவலாக்குவதற்கு மாகாண பொருளாதார அபிவிருத்தி சபைகளை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

கண்டியை இலங்கையின் பிரதான பொருளாதார மையமாக கட்டியெழுப்புவதற்கான திட்டங்கள் குறித்து விளக்கமளித்த ஜனாதிபதி, அந்த வேலைத்திட்டங்கள் அடுத்த வருடம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

கண்டி ஐக்கிய வர்த்தக முன்னணி ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் கண்டியில் உள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.





**வர்த்தகங்களைப் பாதித்த பெரும்பாலான சட்ட விதிமுறைகள் தளர்த்தப்பட்டு வர்த்தத்திற்குப் பொருத்தமான பின்புலம் உருவாக்கப்படும்**

பிரதிநிதிகள் தமது வர்த்தக பிரச்சினைகளை ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதுடன், அவர்களின் பரிந்துரைகளும் கையளிக்கப்பட்டன.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "நாட்டின் பொருளாதார நிலை குறித்து இன்று நீண்ட விளக்கம் அளிக்கப்பட்டது. நாம் இப்போது ஒரு நாடாக ஒரு புதிய பொருளாதார யுகத்தில் நுழைகிறோம். முதன்முறையாக தேசிய கடன்கள் பெற்றுக்கொள்வதை அரசாங்கம் நிறுத்தியுள்ளது.

VAT வரி அதிகரிப்பால் 2023 ஆம் ஆண்டு மற்றும் 2024 ஆம் ஆண்டின் ஆரம்பம் அனைவருக்கும் கடினமான காலமாக மாறியது. ஆனால் இப்போது பொருளாதாரம் படிப்படியாக முன்னேறி வருகிறது. முதன்மை வரவுசெலவுத்திட்டத்தில் மேலதிக நிலையை எம்மால் அடைய முடிந்ததுள்ளது. அது ஒரு சிறந்த நிலைமையாகும் என்பதைக் குறிப்பிட வேண்டும். இது தனியார் துறையையும் பாதிக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்துடன் மாதம் ஒருமுறை கலந்துரையாடல்களை நடத்துகிறோம். நாம் செய்த முன்னேற்றத்தை அதன்போது கண்டுகொள்ள முடிகிறது.

அவ்வாறு, நாட்டின் பொருளாதாரம் இன்று வளர்ச்சியடைந்து வருகிறது. தற்போது இந்த நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பின் அளவு அதிகரித்துள்ளது. ஆனால், அடுத்த ஆண்டு, வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படுவதன் மூலம், அந்த வெளிநாட்டுக் கையிருப்பின் அளவு குறையலாம். ஆனால் வாகனங்களை இறக்குமதி செய்யாமல் இருக்கவும் முடியாது. குறுகிய காலத்தில் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியுள்ளது.

மொத்தமாக பார்க்கும்போது, நாட்டின் பொருளாதாரம் இன்று வளர்ச்சியடைந்து வருகிறது. அரச வருமானத்தை நாம் அதிகரிக்க வேண்டும். அதற்காக வருமான அதிகார சபையை அமைத்து இப்பணியை மேற்கொள்ள வேண்டும். மேலும், அந்த அதிகாரிகளுக்கு தேவையான பயிற்சி அளிக்கவும் வேண்டும். நாட்டின் வருமானம் அதிகரித்து, பொருளாதாரம் வளர்ச்சியடையும் போது, அதற்கேற்ப வரிவிதிப்பை திருத்தவும் எதிர்பார்க்கின்றோம். அந்தச் சலுகைகளை வழங்குவது குறித்தும் நாம் சர்வதேச நாணய நிதியத்துடனும் ஆலோசித்து வருகிறோம்.

மேலும், வங்கிகள் தொடர்பான புதிய சட்டம் கொண்டுவரப்படும். அதன்போது, கடன் மறுசீரமைப்பு செய்பவர்கள் அந்தப் பணியைத் தொடரலாம். மேலும், வங்கிகளில் உள்ள அறவிட முடியாக் கடன்களை நீக்க வேண்டும். புதிய மூலதனமும் பெற வேண்டும். அடுத்த வருடத்தில் அந்தச் செயற்பாடுகளை முடிக்க எதிர்பார்க்கிறோம். எப்படியாவது உள்நாட்டுக் கடனைக் குறைத்து முன்னோக்கிச் செல்லக் கூடிய நிலையை நாம் அடைந்துள்ளோம்.

வர்த்தகர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் குறித்தும் எனக்கு நல்ல புரிதல் உள்ளது. நாம் இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து, முறையாக நாம் முன்னேற வேண்டும். அடுத்த வருடத்தின் நடுப்பகுதிக்குள் நாட்டின் பொருளாதாரத்தில் சிறந்த அபிவிருத்தியைப் பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படும் என நான் நம்புகிறேன்.



அதேபோன்று, வர்த்தகங்களை புதிய சட்டங்களில் சேர்ப்பதற்கும், தற்போதுள்ள பல சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைக் குறைக்கவும் நான் எதிர்பார்க்கிறேன். இந்த புதிய பொறிமுறையை அனைவரும் கலந்தாலோசித்து தயார் செய்வோம். பொருளாதார ஆணைக்குழுவை நிறுவுவதற்கும் நாங்கள் செயற்பட்டு வருகிறோம்.

உள்நாட்டு வர்த்தகர்கள் ஒரே இடத்தில் தமது பணிகளை மேற்கொள்ளும் வகையில் தற்போதுள்ள நிறுவனங்களை இணைத்து எண்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா என்ற புதிய நிறுவனம் உருவாக்கப்படும். அதன்போது, பிராந்திய வர்த்தக சபைகள் பலப்படுத்தப்பட வேண்டும்.

பொருளாதாரத்தை பரவலாக்கும் போது அது அவசியம். மாகாண அபிவிருத்திச் சபைகளை ஸ்தாபிப்பதற்கும் நான் முன்மொழிந்துள்ளதுடன் அதற்கு ஏனைய கட்சிகளும் தமது உடன்பாட்டை வெளிப்படுத்தியுள்ளன.

கண்டி நகர அபிவிருத்தித் திட்டத்தை அடுத்த வருடம் முதல் நடைமுறைப்படுத்த ஜப்பானுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். கண்டியை மையமாக கொண்டு மத்திய மாகாணத்தின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப திட்டமிட்டுள்ளோம்.

அத்தோடு சுற்றுலாவை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் ஒரு சுற்றுலாப்பயணி கண்டியில் குறைந்தது 03 இரவுகளையாவது கழிக்கும் வகையில் சுற்றுலா ஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். பல முக்கிய ஹோட்டல்கள் இங்கு நிறுவப்பட்டுள்ளன. மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர், இந்தப் பகுதி பாரிய வளர்ச்சியை எட்டும்.

அத்துடன் இந்தப் பகுதியில் உள்ள உடவத்த வனப்பகுதியை சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டும். இப்பிரதேசத்தில் பௌத்த நாகரீக மையத்தை நிறுவவும் எதிர்பார்க்கிறோம். ஒவ்வொரு பௌத்த நாட்டிலும் உள்ள விகாரைகளின் மாதிரியை இங்கு அமைக்க திட்டமிட்டுள்ளோம். நுவரெலியாவின் அபிவிருத்திக்காக பல புதிய வேலைத் திட்டங்களையும் திட்டமிட்டுள்ளோம்.

இந்தத் திட்டங்களின் மூலம் மத்திய மாகாணம் சுற்றுலாவின் முக்கிய மையமாக மாறி வருகிறது. கண்டியை தொழில்நுட்ப மையமாக உருவாக்கவும் எதிர்பார்க்கிறோம். மேலும் இந்த மாகாணத்திற்கு பல புதிய பல்கலைக்கழகங்களை நிறுவ வேண்டும். மத்திய மாகாணத்தில் விவசாய நவீனமயமாக்கல் செயற்பாடுகள் பரந்தளவில் செயற்படுத்தப்பட வேண்டும். அதேபோல் மத்திய மாகாணம் ஏற்றுமதி பொருளாதாரத்திற்கும் தயாராக வேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தின் பிரதான மையமாக கண்டியை கட்டியெழுப்பும் திட்டங்கள் அடுத்த வருடம் முதல் நடைமுறைப்படுத்தப்படும். எதிர்வரும் ஜனவரி மாதம் இது தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தவும் எதிர்பார்க்கிறேன்" என்றார்.

கண்டி சிங்கள வர்த்தக சங்கத்தின் தலைவர் யாசஸ் சந்திரசேகர, செயலாளர் நாடிச் வீரரத்ன, கண்டி தமிழ் வர்த்தக சங்க தலைவர் எம். குமாரதாச, கண்டி முஸ்லிம் வர்த்தகர் சங்கத்தின் தலைவர் சலீம் தீப் மற்றும் ஏனைய பிரதிநிதிகள் குழுவினர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஓகஸ்ட் 12 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

சுபஹ் - 04.45
லுஹர் - 12.17
அஸர் - 03.35
மஃரிப் - 06.27
இஷா - 07.40

**இன்றைய சுபதினம்**

குரோதி வருடம் ஆடி 27

ராகுகாலம் : காலை : 7.34 - 9.04வரை
சுபநேரம் : பகல் : 12.04 - 01.34வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

அனைத்து தொகுதிகளையும் உள்ளடக்கி

# கம்பஹா மாவட்டத்தில் ஜனாதிபதி ரணிலின் வெற்றிக்காக கூட்டுக்குழு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக கம்பஹா மாவட்டத்திலுள்ள அனைத்து தொகுதிகளையும் உள்ளடக்கிய வகையில், ஜனாதிபதி தேர்தல் கூட்டு நடவடிக்கை குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் தலைமையில் இந்தக் குழுக்கள் நியமிக்கப்பட்டன.

இந்தக் குழுக்களை ஸ்தாபிப்பதில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட ஜனாதிபதிக்கு ஆதரவான அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும் உழைத்துள்ளனர். வீடு வீடாகச் செல்லுதல், வாக்கெடுப்பு நிலையங்களில் முகவர்களை நியமித்தல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களை ஒழுங்கமைத்தல், சம்பந்தப்பட்ட தொகுதி மட்டத்தில் ஒழுங்கமைத்தல் மற்றும் வழிநடத்துதல் ஆகியன இந்தத் தொகுதிகளின் கூட்டுக்

06




## அடுத்த சில நாட்களில் இடியுடன் கூடிய மழை

நாட்டில் அடுத்த சில நாட்களில் மாலையில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாதகமான வளிமண்டல நிலைமை நிலவுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று (11) தெரிவித்தது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மாலை அல்லது இரவில் மழை

06



இலங்கை சாரணர் சங்கத்தினால் நடத்தப்பட்ட மாவட்ட உதவி ஆணையாளர்களின் வருடாந்த கூட்டம் தேசிய சாரணர் தலைமையகத்தில் நேற்று (11) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பங்குபற்றிய மொரட்டுவ பிலியந்தலை சாரணர் பிரிவு கிளையின் 2024/2025 மாவட்ட முகாமைத்துவ சபையினர் மாவட்ட ஆணையாளர் புஷ்பகுமார மஹகம்முல்லகேயுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதம ஆணையாளர் சட்டத்தரணி லோகேபிரித் பெர்னாண்டோ மற்றும் பிரதம பிரதி ஆணையாளர் எம்.எப்.எஸ்.முஹீட் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## திருமலை முதல் புல்மோட்டை வரை இறந்து கரையொதுங்கும் நண்டுகள்

### காரணம் புரியாமல் மக்கள் அதிர்ச்சியில்

திருகோணமலை முதல் புல்மோட்டை வரையிலான கடற்கரையில் ஆயிரக்கணக்கான சிவப்பு நண்டுகள் இறந்து கரை ஒதுங்கியுள்ளன.

சில இடங்களில் சுமார் மூன்று கிலோமீற்றர் வரை இறந்த நண்டு குஞ்சுகள் காணப்படுவதாக கூறப்படுகிறது. சிவப்பு நண்டு குஞ்சுகள் திடீரென இறந்ததற்கான சரியான காரணத்தை கண்டறிய முடியவில்லையென மீன்வள ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்த பிரதேசத்தில் சுமார் ஒரு மில்லியன் சிவப்பு நண்டு குஞ்சுகள் உயிரிழந்துள்ளதாகவும், இந்த நிலை படிப்படியாக முல்லைத்தீவு கடற்கரை பகுதிக்கும் வரலாமெனவும், இதனால் இந்த சம்பவம் கடற்றொழில் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது .

இது தொடர்பாக ஆய்வு நடத்துவதற்காக நாரா நிறுவன ஆய்வாளர்கள் சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## அ.இ.ம.காங்கிரஸின் முடிவு புதன்கிழமை அறிவிக்கப்படும்

*கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்*



ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பதென்ற தீர்மானம் எதிர்வரும் (14) அறிவிக்கப்படுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அறிவித்துள்ளது. தமது கட்சி ஆதரிக்கும் வேட்டபாளரே வெற்றி பெறுவார் என்று, கட்சியின் தலைவர் ரிஷாட்பதியுதீன் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் போது யாரை ஆதரிப்பது என்பது குறித்து புத்தளம் மாவட்ட ஆதரவாளர்களுடனான சந்திப்பு (10) இரவு புத்தளம் தில்லையடி பகுதியில் நடைபெற்றது.

இந்த சந்திப்பில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான என். டி.எம்.தாகார், எஸ்.ஏ.எஹியா,

06

தினகரன்
THINAKARAN
තිනකරන්

# 92

வருடங்களுக்கு முன்
## தினகரன்
இன்று 12 ஓகஸ்ட் 1932



அரசாங்க சபைக் கூட்டம்

மொத்தப் பென்ஷன் தீர்மானம் நிறைவேறியது

பொக்கிஷ காரியதரிசியின் போக்கு

கொழும்பு, ஆகஸ்டு, 11—

இன்று அரசாங்கசபைக் கூட்டத்தில் ஸர். ஹென்றி டி. மெல்., மொத்தப் பென்ஷன் கொடுப்பது நிறுத்தப்பட வேண்டு மென்று கொண்டுவந்த தீர்மானம் விவாதிக்கப்பட்டது, உள்நாட்டு மந்திரி ஸர். டி. பி. ஜெயதிலகா தீர்மானத்தை ஆதரித்துப் பேசி, மந்திரி சபையினர் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய உதவிகள் புரிவதாகவும் அவர் கூறினர்.

### அரசாங்க சபைக் கூட்டம்

### மொத்தப் பென்ஷன் தீர்மானம் நிறைவேறியது

### பொக்கிஷ காரியதரிசியின் போக்கு

இன்று அரசாங்கசபைக் கூட்டத்தில் ஸர். ஹென்றி டி. மெல்., மொத்தப் பென்ஷன் கொடுப்பது நிறுத்தப்பட வேண்டுமென்று கொண்டுவந்த தீர்மானம் விவாதிக்கப்பட்டது, உள்நாட்டு மந்திரி ஸர். டி. பி. ஜெயதிலகா தீர்மானத்தை ஆதரித்துப் பேசி, மந்திரி சபையினர் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய உதவிகள் புரிவதாகவும் அவர் கூறினார்.

*(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)*





දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
Inland Revenue Department

# வரிசெலுத்துநர்களுக்கான அறிவித்தல்

செலுத்தப்படற்பாலதான மதிப்பிடப்பட்ட வரிக் கூற்று (SET) கோப்பிடுதலுக்கு

**"இ – சேவைகள்" செயற்பாட்டிலுள்ளது**

2024/2025 ஆம் வரி மதிப்பீட்டாண்டு

தனிநபர்கள், பங்குடமைகள், கம்பனிகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அனைத்து ஆட்களும்,

**2024 ஆகஸ்ட் 15 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ**

கூற்றினை கோப்பிடவும்

கூற்றினை கோப்பிடுவதற்கு முன்னர் வழிகாட்டியினைப் பார்க்கவும்.

www.ird.gov.lk ----> தரவிறக்கம் ----> படிவங்கள் மற்றும் விபரத்திரட்டுகள் ----> விபரத்திரட்டுகள் ----> மதிப்பீடுகள் ----> மதிப்பிடப்பட்ட செலுத்தத்தக்க வருமான வரிக் கூற்று – வரி மதிப்பீட்டாண்டு 2024/2025

கீழ்வரும் வரி கொடுப்பனவுகளை 2024,ஆகஸ்ட் 15 அன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தவும்

| வரி வகை | | வரி வகை குறியீடு | கொடுப்பனவு காலப்பகுதி குறியீடு |
|---|---|---|---|
| 1ஆம் காலாண்டு தவணை | கூட்டிணைந்த வருமான வரி (CIT) | 02 | 24251 |
| | தனிநபர் வருமான வரி (IIT) | 05 | 24251 |
| | பங்குடமை வருமான வரி (PIT) | 09 | 24251 |
| ஜூலை மாதத்தில் நிறுத்தி வைக்கப்பட்டவை | வட்டி மீதான முற்பண வருமான வரி (AIT)/நிறுத்தி வைத்தல் வரி (WHT) | 43 | 24070 |
| | கட்டணம் மற்றும் ஏனையவற்றின் மீதான முற்பண வருமான வரி (AIT) / நிறுத்தி வைத்தல் வரி (WHT) | 44 | 24070 |
| | முற்பண தனிநபர் வருமான வரி (APIT) | 03 | 24070 |
| கொடுப்பனவு வகை | | 5 | |

வரிசெலுத்துனர் இ-கோப்பிடுவதற்கு தனிப்பட்ட அடையாள இலக்கத்தை (PIN) கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் இ-கோப்பிடலுக்கு கம்பனி அல்லது பங்குடமை SSID இலக்கங்களை கொண்டிருத்தல் வேண்டும்.

PIN / SSID இல்லை எனில், PIN/ SSID இணைப் பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர்

1. இ-சேவையினூடாக அல்லது
2. உள்நாட்டு இறைவரித் திணைக்கள தலைமைக்காரியாலயத்திற்கு அல்லது பிராந்திய அலுவலகத்திற்கு வருகை தந்து பெற்றுக் கொள்ளலாம்.

- வருமான வரிக் கொடுப்பனவை செலுத்தாது விடுதல் அல்லது தாமதமாக செலுத்துதல் மீதான வட்டி மற்றும் தண்டம் மற்றும் கூற்றினை உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கத் தவறுகையில் உள்ள தண்டம் தள்ளுபடி செய்யவோ அல்லது குறைக்கப்படவோ மாட்டாது என்பதனை அறிந்துகொள்ளவும்.
- ஏதேனும் உதவி அல்லது தகவல்களுக்கு, அழைப்பு நிலைய இலக்கம் 1944 இற்கு தொடர்பு கொள்ளவும்.
- இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை அறிந்து கொள்ள உள்நாட்டு இறைவரி திணைக்கள வலைத்தளத்தை பார்வையிடவும்.

**உள்நாட்டு இறைவரி ஆணையாளர்**

IRD 1944

வரிகள் - வளமான எதிர்காலத்திற்காக

வலைத்தளம் : www.ird.gov.lk https:www.facebook.com/irdcolsl

தினகரன் THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834

தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279

பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 27ஆம் நாள் திங்கட்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1446 ஸபர் பிறை 06

**குறள் தரும் சிந்தனை**

அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு

பொறாமையுடையவனுக்கும், நல்லொழுக்க மில்லாதவனுக்கும் அமையும் வாழ்வு, உயர் வான வாழ்வாகக் கருதப்பட மாட்டாது

# வரவேற்பை பெற்றுள்ள நிதியுதவி நடவடிக்கை

பலஸ்தீனின் காஸா மீது இஸ்ரேல் சுமார் பத்து மாதங்களாக யுத்தத்தை முன்னெடுத்து வருகின்றது. 23 இலட்சம் மக்களைக் கொண்ட காஸா கடல், ஆகாயம், தரை என அனைத்தும் சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் இடம்பெற்றுவரும் இந்த யுத்தம் காரணமாக காஸாவில் இற்றைவரையும் 39 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சிறுவர்களாவர். அத்தோடு இந்த யுத்தத்தினால் காஸாவில் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த யுத்தம் காரணமாக சிறுவர்கள், வளர்ந்தவர்கள் என எல்லா மட்டத்தினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அடிப்படை வசதிகள் அடங்கலாக இருப்பிடங்களையும் இழந்துள்ளனர். காஸாவில் யுத்தம் ஏற்படுத்தியுள்ள மனிதாபிமான நெருக்கடிகள் உலகின் கவனத்தை பெரிதும் ஈர்த்துள்ளன.

இந்த யுத்தத்தை நிறுத்துவதற்கான இராஜதந்திர முயற்சிகளும் பரந்த அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இருந்தும் இன்னும் யுத்தம் நிறுத்தப்பட்டதாக இல்லை. கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த யுத்தம் சுமார் பத்து மாதங்களாக நீடித்து வருகிறது. இதன் விளைவாக காஸா மக்கள் முகம்கொடுத்துள்ள கஷ்டங்களும் துன்பங்களும் குறைந்ததாக இல்லை.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காஸாவின் சிறுவர்கள் முகம்கொடுத்துள்ள நெருக்கடிகள், தேவைகள் குறித்து இவ்வருடத்தின் ஆரம்பப் பகுதியில் விஷேட கவனம் செலுத்தினார். அதனடிப்படையில் காஸா பிள்ளைகளின் அவசரத் தேவைகளுக்கு உதவும் வகையில் ஒரு மில்லியன் டொலர் நிதியை ஒரு மாதத்திற்குள் திரட்டித் தருவதாக அவர் அறிவித்தார். இது தொடர்பிலான யோசனையை அவர் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தார். அந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்ததோடு அதற்கு ஏற்ப இவ்வருடத்தின் மார்ச் மாதத்தின் ஆரம்பப் பகுதியில் காஸா பிள்ளைகளுக்கென விஷேட நிதியமொன்றை ஸ்தாபித்தார். இதற்கென தனியான வங்கிக் கணக்கொன்றையும் ஜனாதிபதி செயலகம் அறிவித்தது.

காஸாவில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பிள்ளைகளுக்கு உதவும் இத்திட்டத்தின் கீழ், இவ்வருடம் அரச நிறுவனங்களில் நோன்பு துறக்கும் இப்தார் நிகழ்ச்சிகளுக்காக செலவிடப்படவிருந்த நிதியை இந்நிதியத்திற்கு திரட்ட பிரதானமாக எதிர்பார்க்கப்பட்டது. அதற்கேற்ப அரச நிறுவனங்கள் மாத்திரமல்லாமல் தனியார் நிறுவனங்களும் ஜனாதிபதியின் இம்முயற்சிக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கத் தொடங்கின. அதன் பயனாக ஜனாதிபதி அளித்த வாக்குறுதிக்கு அமைய ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒரு மாத காலத்திற்குள் கையளிக்க முடிந்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி முன்னிலையில் பலஸ்தீனுக்கான இலங்கைத் தூதுவர் சுஹைர் ஹமிதல்லாவிடம் ஜனாதிபதி தலைமையில் இந்நிதி கையளிக்கப்பட்டது. இந்நிதியத்திற்குப் பங்களிக்க சந்தர்ப்பம் வழங்குமாறு மக்களிடம் இருந்து முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, 2024 மே மாதம் 31 ஆம் திகதி வரை பங்களிப்பதற்கு காலஅவகாசம் நீடிக்கப்பட்டது. ஆனாலும் கால அவசகாலம் முடிவடைந்தாலும் நன்கொடையாளர்கள் நாடெங்கில் இருந்தும் தொடர்ந்தும் இந்நிதியத்திற்கு பணம் வைப்புச் செய்வதை அவதானிக்க முடிந்தது. அதனால் ஜுலை 31 ஆம் திகதி வரை காஸா நிதியத்திற்கு நிதிப் பங்களிப்பு செய்வதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது.

அந்த வகையில் ஜுலை 31 ஆம் திகதி வரை இந்நிதியத்திற்கு கிடைக்கப்பெற்ற மேலும் 5 இலட்சத்து 90 ஆயிரம் டொலர்கள் நிதி பலஸ்தீன அரசிடம் கையளிக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் நிவாரணப் பணிகளுக்கான முகவரகத்தின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி, இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் ஆகியோரிடம் ஜனாதிபதி தலைமையில் கையளிக்கப்பட்டது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள காஸா சிறுவர்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த இந்நடவடிக்கை உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் வரவேற்பையும் பாராட்டுக்களையும் பெற்றது. இந்நடவடிக்கையானது இலங்கைக்கும் பலஸ்தீன் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு மேலும் மேம்படவும் வலுவடையவும் வழிவகை செய்துள்ளன. இது இந்நாட்டின் மேம்பாட்டுக்கும் பக்கத்துணையாக அமையும் எனலாம்.

editor.tkn@lakehouse.lk

# மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் முத்தமிழ்விழா

## விபுலாநந்த அடிகளார் நினைவாக நேற்று சிறப்பான வைபவம்



கிழக்கிலங்கை காரைதீவில் 19 ஆம் நூற்றாண்டு பிற்பகுதியில், சைவமும் தமிழும் எழுச்சிபெற சுவாமி விபுலாநந்தர் அவதரித்தார். அவர் இளமைப் பருவம் முழுவதும் உயரிய ஒழுக்க விழுமியப் பண்பாளராக வாழ்ந்து கல்வியில் உயர்ந்து விளங்கினார்.

மேல்நாட்டுக் கல்வியை இந்துக் கல்வி மரபுக்கமைவாக போதிப்பதற்கு உயரிய வழிவகைகளை செய்வித்தவர் சுவாமி விபுலாநந்தர். தன் கல்வியில் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் நோக்கத்துடன் பல பணிகளை மேற்கொண்டார்.

அவர் லத்தீன், கிரேக்கம், சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் உட்பட எட்டு மொழிகளில் புலமை பெற்றவராக திகழ்ந்தார். ஈழத்து இளங்கோ எனப் போற்றப்படும் இவர் பல அரிய கட்டுரைகளையும் எழுதியுள்ளதோடு இருபதுக்கும் மேற்பட்ட நூல்களையும் எழுதியுள்ளார். அவர் சேர். பொன். இராமநாதன் மற்றும் ஹென்றி பேரின்பநாயகம் போன்றோரோடு நெருக்கமாக செயல்பட்டதோடு இவர்களின் இளைஞர் காங்கிரசிலும் இணைந்து செயற்பட்டவர். அவர் யோகர் சுவாமிகளின் ஆசியையும் பெற்றவராக இருந்தார்.

ஸ்ரீஇராமகிருஷ்ண மிஷனுடைய இமயமலைப் பகுதியில் அல்மோரா என்ற இடத்திலுள்ள மாயாவதி என்ற ஆச்சிரமத்தையடைந்து தன் யாத்திரையின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டார். சுவாமி விவேகாநந்தரால் பெயர் சூட்டப்பட்டு மாயாவதி ஆச்சிரமத்தால் வெளிவரும் சஞ்சிகைதான் 'பிரபுத்த பாரதா' என்ற சஞ்சிகை. பிரபுத்த பாரதம் என்றால் 'விழிப்புற்ற பாரதம்' என்று பொருள். சுவாமிகள் இச் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்ததோடு, இராமகிருஷ்ண விஜயம், வேதாந்த கேசரி மற்றும் விவேகாநந்தர் போன்ற நூல்களுக்கும் ஆசிரியராக பணியாற்றினார்.

தமிழகத்தில் தமிழ் ஆளுமைமிக்கவராக திகழ்ந்த சுவாமிகளை மதுரை தமிழ்ச் சங்கம், பல்வேறு வகையான கூட்டங்களுக்கு அழைத்து இவரின் பல்வேறு கருத்துக்களை கேட்டு இருக்கின்றது. உ. வே. சுவாமிநாத ஐயருக்கு ஏற்பாடு செய்த பாராட்டு விழாவிற்கு சுவாமிகளை அழைத்து தலைமை தாங்க வைத்துள்ளார்கள். கடலூர் ஞானியர் மடத்தில் நடைபெற்ற மூன்று நாள் இலக்கிய விழாவிற்கு சுவாமிகள் தலைமை தாங்கி இருக்கிறார். சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் இசை நாட்டியம் தொடர்பில் சுவாமிகள் மூன்று நாள் உரையாற்றி இருக்கிறார். சுவாமிகள் பதினான்கு ஆண்டுகள் கடும் பிரயத்தனத்தில் 'யாழ்நூல்' என்னும் உயரிய நூலை உருவாக்கினார். யாழ்நூல் 1947 இல் வெளியிடும் தருணத்தில் சுவாமிகள் காலமானார்.

சுவாமி விபுலாநந்தர் அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய ஆவணப் படமொன்று புதுச்சேரி புதுவை அரசுக் கல்லூரி பேராசிரியர் மு. இளங்கோவன் முயற்சியில் மிகச் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டு, இந்த ஆவணப்படம் தமிழக கோவில் ஒன்றில் அரங்கேற்றப்பட்டது.

சுவாமிகள் தமிழகத்தில் இருக்கும் போது இவரை மிகவும் ஆதரித்தவர் புதுக்கோட்டையிலுள்ள சிதம்பரம் செட்டியார் என்ற பெரிய வள்ளல் ஆவார். சிதம்பரம் செட்டியார் இலங்கையின் நுவரெலியா மாவட்டத்தில் றொஸல்ல என்ற இடத்தில் வுட்ஸ் றொக்(Woods Rock) என்ற பங்களாவை சுவாமிகளுக்கு கொடுத்து அங்கிருந்து கொண்டு தனது ஆய்வுகளை மேற்கொள்ள வழிவகை செய்துள்ளார். இத்தகவல்கள் சுவாமிகளின் ஆவணப்படதயாரிப்பாளர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் கிடைக்கப்பெற்றது.

மாத்தளையில் மக்கள் சேவையே மகேசன் சேவையென சேவையாற்றிய சுவாமி விபுலாநந்த அடிகளாரின் பெயரில் கடந்த ஆறுதசாப்த காலமாக 'சுவாமி விபுலாநந்த கலா மன்றம்' சேவையாற்றி வருகிறது. சுவாமிகளின் திருப்பாதம் பதியப்பட்ட இம்மலையகத்தில் அவரின் சேவைகளை மீட்டுக் காட்டுவது சாலப்பொருத்தமாகும்.

இம்மன்றமானது இயல் இசை நாடகம் என்ற முத்தமிழையும் முன் நிறுத்தி விழா எடுப்பது சிறப்பம்சமாகும். இதன் மூலம் கல்வி வளர்ச்சிக்கும் அரிய சேவையாற்றி வருகிறது. இம்மன்றம் வருடத்தில் காலாண்டுக்குஒரு நிகழ்வு என்று திட்டமிட்டு கல்விக் கருத்தரங்குகளையும், சிறுவர் தின நிகழ்வோடு இணைந்ததாக பல கலை நிகழ்ச்சிகள், சமூகத்தின் சுகாதார வைத்திய தேவைகளை கருத்தில் கொண்டு வைத்திய முகாம்கள் நடத்தி வருகிறது.

வருட சிறப்பு நிகழ்வாக பல்சுவை கலையம்சங்களுடன் சுவாமிகளின் நினைவு நாளையொட்டிய ஒரு நாளில் முத்தமிழ் விழாவை மிகச் சிறப்பாக நடத்துகிறது. மேலும் பின்தங்கிய பாடசாலைகளை தெரிவு செய்து அப்பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களோடு பாதணிகள் வழங்கு வருகிறது. இயற்கை அனர்த்தங்களின் போது பாதிப்படைந்தவர்களுக்கு நிவாரணங்கள் வழங்கியும் வருகின்றது.

இம்மன்றத்தின் ஆரம்பகால தலைவராக முத்தையா முருகையா பணியாற்றுகிறார். ஆறுமுகம், ஜெகநாதன், வசந்சுந்தர், X.C. ரஞ்சன், சிவபாலன், கல்யாண சுந்தரம் போன்றவர்களும் சிரேஷ்ட அங்கத்தவர்களாக இருந்துள்ளார்கள். இம்மன்றத்தின் ஆரம்ப நிகழ்வு மாத்தளை விஜயா கல்லூரியிலும், அடுத்த நிகழ்வு சாந்த தோமையார் கல்லூரியிலும் நடைபெற்றுள்ளது. இந்நிகழ்வுகளுக்கு அமரர் இரா. தங்கவேல் செட்டியார் நிதியுதவி வழங்கியுள்ளார். இம்மன்றத்தில் தொடர்ந்து ஐம்பது ஆண்டு காலம் சேவையாற்றிய பெருமை முத்தையா முருகையா அவர்களையே சாரும்.

இம்மன்றத்தின் நடப்பு வருட தலைவராக கலாபூசணம் ராஜ்சிவா சிவலிங்கம், கௌரவ செயளாளராக தியாகராஜா சத்தியசீலன்,பொருளாளராக பழனிபுவனேந்திரன், கௌரவ உபதலைவராக கருப்பையா திருநாவுக்கரசு, உபசெயலாளராக திருசந்திரநாதன் ஜீவரட்ணம் ஆகியோர் உள்ளனர். அங்கத்தினர் குழு ஒன்றும், அங்கத்தினர் குழுவில் ஆசிரியர் குழாம் ஒன்றும் இணைந்துள்ளது. மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், சுவாமி விபுலாநந்த கலாமன்றம் நடத்தும் அனைத்து நிகழ்வுகளுக்கும் உறுதுணையாக இருந்து செயல்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு சுவாமிகளின் நினைவுநாளோடு சுவாமிகள் துறவறம் பூண்ட நூற்றாண்டும் கூடி வந்துள்ளதால் நேற்று 11ம் திகதி ஞாயிற்றுக்கிமை காலை மாத்தளை அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் முத்தமிழ் விழா சிறப்பாக நடைபெற்றது.

**அப்பாத்துரை செல்லையா...**
ஆலோசகர், சுவாமி விபுலாநந்த கலாமன்றம், மாத்தளை

# மாவட்ட எழுத்தாக்க போட்டிகளில் கூடுதல் இடங்கள் பெற்ற கல்முனை



அகில இலங்கை தமிழ் மொழித் தின மாவட்ட மட்ட எழுத்தாக்கப் போட்டிகளின் 15 போட்டிகளில் முதல் மூன்று 14 இடங்கள் கல்முனை கல்வி வலயத்திற்குக் கிடைத்துள்ளன.

பிரிவு1 எழுத்தாக்கம்_ மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை (ம.ஹஸ்னத் ஹனா), பிரிவு2 கட்டுரை வரைதல்_ மஸ்ஹர் உயர்தரப் பாடசாலை (மு.ம.மதீஹா), பிரிவு5 இலக்கணப் போட்டி_ உவெஸ்லி உயர்தரப் பாடசாலை (மோனிஷா), பிரிவு4 சிறுகதை _ அல்அஷ்ரக் தேசிய பாடசாலை (பொ.கா.மு.மிஹாத்), தமிழறிவு வினாவிடை_ அல் அஷ்ரக் தேசிய பாடசாலை ஆகியோர் மாவட்டத்தில் முதலிடங்களைப் பெற்று மாகாண போட்டிக்குத் தெரிவாகினர். இவர்களில் எழுத்தாக்கம்; பிரிவு 1, அல்மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி, ம.ஹஸ்னத் ஹனா,

சிறுகதை: பிரிவு 4, அல்அஷ்ரக் தேசிய பாடசாலை மாணவன் பொ.கா.மு. மிஹாத் ஆகியோர் மாகாணத்தில் முதலிடங்களைப் பெற்று தேசிய மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளனர்.

எழுத்தாக்கத்தில் மாவட்டத்தில் ஐந்து முதலிடங்களுடன் ஆறு இரண்டாம் இடங்களும் மூன்று மூன்றாம் இடங்களுமாக 14 இடங்கள் கிடைத்துள்ளன.

மாகாணத்தில் கிடைத்த இரு முதலிடங்களுடன் இரண்டு இரண்டாம் இடங்களும் ஒரு மூன்றாம் இடமுமாக ஐந்து இடங்கள் கிடைத்துள்ளன.

மாகாணத்தில் கட்டுரை வரைதல் பிரிவு_2 மஸ்ஹர் உயர்தரப் பாடசாலை மாணவி ப, மதீஹா, இலக்கணப் போட்டி பிரிவு_5 உவெஸ்லி எஸ்.மோனிஷா ஆகியோர் இரண்டாம் இடங்களையும் தமிழறிவு வினா விடைப் போட்டியில் அல்அஷ்ரக் தேசிய பாடசாலை மாணவர்கள் மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளனர்.

எழுத்தாக்கப் போட்டிகள் தவிர்ந்த ஏனைய மாவட்ட மட்டப் போட்டிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழன் திருக்கோவில்கல்விவலயத்திலுள்ளதம்பிலுவில் மகாவித்தியாலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர். உதயகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது. மாவட்ட போட்டிகளைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்திற்கான தமிழ் மொழித் தினப் போட்டிகள் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளன. மாகாணக் கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வுகளுக்கான ஏற்பாட்டினை கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ.சஹுதுல் நஜீம் தலைமையிலான அணியினர் மேற்கொண்டு வருகின்றனர்.

போட்டி நிகழ்வுகள் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை, பற்றிமா தேசிய பாடசாலை, ஆர்.கே.எம்.மகா வித்தியாலயம், இஸ்லாமாபாத் ஆகிய பாடசாலைகளில் இடம்பெறவுள்ளன.

**ஜெஸ்மி எம்.மூஸா...**
(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

# FIFA உலகக் கிண்ணத்தை நடத்த சவூதியில் விரிவான ஏற்பாடுகள்

## 140 இற்கும் மேற்பட்ட உலக நாடுகள் ஆதரவு



2034 ஆம் ஆண்டு FIFA உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளை சவூதி அரேபிய இராச்சியத்தில் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அதற்காக அந்நாட்டு அரசாங்கம், மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் தயாராகி வருகின்றன.

சவூதி அரசாங்கம் தமது இலட்சிய திட்டமான விஷன் 2030 திட்டத்தின் கீழ் முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் அந்நாட்டில் அபிவிருத்திகளை மும்முரமாக செய்து வருகின்றது. இவ்வபிவிருத்திகள் சுற்றுலா, பொருளாதாரம், தொழிநுட்பம், உட்கட்டமைப்பு, சுகாதாரம், கல்வி, கலாசாரம் மற்றும் விளையாட்டு போன்ற சகல துறைகளையும் இலக்கு வைத்ததாக அமைகின்றன.

அந்த வகையில் 2034 FIFA கால்பந்தாட்ட உலகக் கிண்ண போட்டிகளை நடத்துவதற்கான உத்தியோகபூர்வ ஏலத்தில் சவூதி தனது ஏலப்புத்தகத்தை சமர்ப்பித்துள்ளது. அதில் ஐந்து முக்கிய

நகரங்களான ரியாத், ஜித்தா, அல் கொபார், அபா மற்றும் NEOM போன்ற நகரங்களில் போட்டிகளை நடத்துவதற்காக முன்மொழிந்துள்ளது. இந்த ஐந்து நகரங்களில் 11 புதிய மைதானங்கள் உட்பட 15 அதி நவீன மைதானங்கள் இடம்பெறும். புதிய மன்னர் சல்மான் விளையாட்டரங்கம் உட்பட 8 மைதானங்களை ரியாத் நகரில் அமையப் பெற்றுள்ளன. இதில் 92,000 பார்வையாளர்கள் வரை அமர்த்தப்படலாம். இதிலேயே தொடக்க மற்றும் இறுதிப் போட்டிகளை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பயிற்சி முகாம்களுக்கான 10 இடங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. சவூதி அரேபியாவில் FIFA நடைபெறும் காலத்தில் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் ஐந்து நகரங்களும் 230,000 அறைகள் வரை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 15 நகரங்களில் மொத்தம் 132 பயிற்சி இடங்கள் முன்மொழியப்பட்டுள்ளதோடு, 72 மைதானங்களும் முன்மொழியப்பட்டுள்ளன. FIFA பார்வையிட வரும் ரசிகர்களுக்காக 10 முக்கிய பொழுதுபோக்கு மற்றும் கொண்டாட்ட தளங்களும் ஏலப் புத்தகத்தில் முன்மொழியப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட முக்கிய ஐந்து நகரங்களிலும் ஒவ்வொரு முக்கிய தளங்கள் தேரந்தெடுக்கப்பட்டுள்ளன. ரியாத் நகரில் உள்ள மன்னர் சல்மான் பூங்கா, ஜித்தா வாட்டர் ஃபிரண்ட், அபாவில் உள்ள அல் பிஹார் சதுக்கம், நியோமில் உள்ள மெரினா மற்றும் அல் கோபரில் உள்ள மன்னர் அப்துல்லா பூங்கா ஆகியவை இடம்பெற்றுள்ளன.



'Growing. Together' என்ற மகுட வாசகம் தாங்கி சமர்பிக்கப்பட்ட இந்த ஏலப்புத்தகம் அந்நாட்டுத் தலைமைகளின் முழுமையான ஆதரவோடும் வழிகாட்டலோடும் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய ஏலப் புத்தகம், சவூதி அரேபியாவின் இந்நிகழ்வை கோலாகலமாக நடத்துவதற்கான உயரந்த விரிவான திட்டங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை வெளிச்சமிட்டுக் காட்டுவதோடு, சவூதியின் வரலாற்று ரீதியான பாரிய மாற்றத்தையும் பிரதிபலிக்கிறது.

2034 FIFA உலகக் கிண்ணத்தை நடத்தும் சவூதி அரேபியாவின் முயற்சிக்கு 140க்கும் மேற்பட்ட உலக நாடுகளில் இருந்து வரலாறு காணாத ஆதரவு கிடைத்துள்ளது என்று சவூதி கால்பந்து சம்மேளனத்தின் (SAFF) தலைவர் யாசர் அல்மிசேஹால் உறுதி செய்துள்ளார்.

"இந்த உலகளாவிய நிகழ்வை நடத்துவதற்கான எங்கள் முயற்சியின் வெற்றிக்கு வழிவகுக்கும் வகையில் அனைத்து அரசாங்கத் துறைகளுக்கும் இடையே முழுமையான ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு உள்ளது" எனவும் "2034 இல் சவூதி மண்ணில் உதைப் பந்தாட்ட உலகக் கிண்ண வரலாற்றில் முன்னில்லாதவாறான ஒரு புது வடிவிலான போட்டியையும் நடாத்துவோம்" என்றும் ரியாத் நகரில் நடைபெற்ற சவூதின் ஏலப் புத்தக சமர்ப்பிப்பு குறித்த அதிகாரப்பூர்வ செய்தி மாநாட்டில் அல்மிசேஹால் கூறினார்.

சவூதியின் விஷன் 2030 திட்டமானது குறிப்பிடத்தக்க பாரிய வளர்ச்சியை அந்நாட்டுக்கு அளித்துள்ளது எனவும், சவூதி அரேபியாவை உலகம் பார்க்கும் வகையல் கதவுகள் திறக்கப்பட்ட ஒரு நாடாகவும் ஆக்கியுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார், அத்தோடு FIFA இனை சவூதியில் நடத்துவது அந்நாட்டு மக்களின் ஒரு பெரிய கனவாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

**காலித் ரிஸ்வான்...**

# மானுடவியல்



176

அரசன் அவ்வாறாயினமையால், "மன்னனெப்படி மன்னுயிரப்படி" என்னும் பழமொழிப்படி குடிகளும் அவ்வாறாயின. மயிர் பறிக்கப்பட்ட தலையையும், ஊத்தைவாயையும், உறிபொதிகலனும், மயிற்பீலியும் பொருந்திய கையையும், பாயுடையையும், மனம்போல மாசுண்டசரீரத்தையும், நின்றுண்டலையும், வெற்றரையையும் உடைய சமணப்பதிதர்களே எங்கும் பரந்தார்கள். இங்ஙனம் பாண்டியநாடெங்கும் வைதிகமார்க்கமும், சைவமார்க்கமுமாகிய இரண்டுங்குன்றி, சமணசமயமே விருத்தியாகியும்; அப்பாண்டியனுடைய மனைவியரும் சோழமகாராஜாவுடைய புதல்வியாருமாகிய மங்கையர்க்கரசியார் அவ்வரசனுடைய முதன்மந்திரியாராகிய குலச்சிறைநாயனார் என்கின்ற இருவரும், தாங்களும் அப்பாண்டியனும், பாண்டி நாட்டாரும், மற்றயாவருஞ் செய்த புண்ணியத்தினாலே சைவர்களாகவே இருந்தார்கள். அவர்கள் அப்பாண்டி நாட்டுள்ளோர் பொருட்டுக் கவலைகொண்டு, தாங்கள் சைவவொழுக்கத்தில் நிற்குந்தன்மை அரசனுக்கு விளங்கா வண்ணம் ஒழுகினார்கள். இங்ஙனம் ஒழுகுநாளிலே உலகமெல்லாம் உய்யும்படி திருவவதாரஞ் செய்தருளிய உயர்வொப்பில்லாத சைவசமயாசாரியராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய அளவிறந்த மகிமைகளையும் அவர் வேதாரணியத்திற் சென்று எழுந்தருளியிருத்தலையும், பாண்டியநாடு செய்த பெருந் தவத்தினாலே கேள்வியுற்றார்கள், கேள்வியுற்ற பொழுதே, அளவிறந்த மகிழ்ச்சியோடு, சில பரிசனங்களை, திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரிடத்திற்குச் செல்லும் பொருட்டு, ஏவினார்கள்.

ஏவப்பட்ட அப்பரிசனங்கள் பாண்டிநாட்டைக் கடந்து சென்று, வேதாரணியத்தை அடைந்து, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் எழுந்தருளியிருந்த திருமடத்தை அடைந்து, தங்கள் வரவை வாயிற்காவலாளர்களுக்குத் தெரிவிக்க; அவர்கள் உள்ளேபோய், நாயனாரை வணங்கி நின்று, "சுவாமி! பாண்டிமாதேவியாராகிய மங்கையர்க்கரசியாரும் மந்திரியாராகிய குலச்சிறைநாயனாரும் ஏவுதலால் தேவரீருடைய ஸ்ரீபாதாரவிந்தங்களை வணங்குதற்குச் சிலர் புறத்து வந்து நிற்கின்றனர்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். பிள்ளையார் திருவருள் சுரந்து, "அவர்களை இங்கே அழையுங்கள்" என்று அருளிச் செய்ய, வாயிற்காவலாளர்கள் அவர்களைக் கூவ; அவர்கள் உள்ளே புகுந்து, பிள்ளையாரை விழுந்து நமஸ்கரித்து எழுந்து, அஞ்சலியஸ்தர்களாகி நின்றார்கள்.



(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# வரலாற்று புகழ்மிகு தில்லை மண்டூர் ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த உற்சவம்



முருகன் சூரனை கொல்ல விட்ட வேலானது வாகூர மலையைப் பிளந்து, கல்லிக் கடலில் வீழ்ந்த போது எழுந்த தீப்பொறிகளில் ஒன்று உகந்த மலையுச்சியிலும், மற்றையவை வெள்ளை நாவற்பதி (திருக்கோவிலிலும்) மற்றைய தீப்பொறி தில்லை மரத்தில் தங்கியதாக ஐதீகக் கதை எடுத்துக்காட்டுகின்றது. மண்டூரில் இவ்வாறு இடம் பெற்ற வேலாயுதமானது மரத்தில் தங்கியிருந்த போது அப்பகுதியில் வாழ்ந்த வேடர்கள் அதனைக் பாதுகாத்து போற்றி மன பக்தியோடு பூசை செய்து வழிபட்டு வரலாயினர். இதன் பின்னர் மட்டக்களப்பு வாவியில் மீன்பிடிப்பதற்கு வந்து இளைப்பாறுவதற்கு கரை சேர்ந்த போது துறைநீலாவணைச் சீர்பாத குலத்தார் சிலரும் அவ்வேடருடன் சேர்ந்து வழிபட்டு சிறப்பித்துள்ளனர் என்று கர்ண பரம்பரைக் கதையில் இருந்து அறியக்கிடைக்கின்றன.

மட்டக்களப்பின் கிழக்குப் பகுதியிலே முக்குவ வன்னிமைகள் சிற்றரசர்களாக இருந்தனர் என்று சரித்திரக்கூற்று எடுத்துக்காட்டுகின்றது. அன்னாருடைய அங்கீகாரமும் அதிகாரமும் பெற்றுக் கொள்ளுதல் பொதுத் தலங்களுக்கெல்லாம் நிதியும் சிறப்புமாக இருந்தமையால் அதன்படி தேசத்த லைவனான முக்குவ வன்னிமையின் தலைமையில் கோவில் அமைப்பும் நிருவாக ஒழுங்குகளும் வகுக்கப்பெற்றன. அன்னாரால் பல மானியங்களும் கோவில் பரிபாலனத்திற்காக வழங்கப் பெற்றிருந்தன. எனவே வன்னிமையின் திட்டத்தின்படி கவுத்தன் குடி வேளாளர் குலத்தினர் கோயில் பரிபாலனத்திற்காக கோரக்களப்பில் இருந்து குடியமர்த்தி வண்ணக்கர் பதவியினையும், சுவாமி தூக்குதல் போன்ற பொறுப்புகளை வழங்கி நடைமுறைப்படுத்தியிருந்தனர்.

தில்லை மண்டூர் முருகன் அருள் வளத்தினால் நில வளமும் மற்றும் பொருள் வளமும் கோயிலில் அதிகமாக கிடைக்கப்பெற்றதாலே ஆலய சொத்துக்களின் வரவு செலவுகளை ஒழுங்குபடுத்துவதற்கு முக்கியமல்லாத செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்குமாக நான்கு கணக்குப் பிள்ளைகளை நியமனம் பெறும் ஒழுங்கும் தேசத்து வன்னிமைகளால் திட்டமிடப்பட்டது. இக்கோயிலின் அயற்கிராமங்களும் அக்கோவில் வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தோர் வாழ்பதிகளுமான துறைநீலாவணை குருமன்வெளி கோட்டைக்கல்லாறு , பெரியகல்லாறு என்னும் நான்கு கிராமங்களிருந்துமே இவர்களின் நியமனம் இடம்பெற்றிருந்தனர். பெரிய கப்புகன் உரித்து சீர்பாதர் குலத்தில் ஒரு குடியான சிந்தாத்திர குடியினருக்கும் பூசைக் கப்புகன் உரித்து குடியினருக்கும் கவுடாக்காரன், கங்காணி பதவிகளும், தரை கூட்டுதல், கழுவுதல், பொருட்களை கழுவுதல், சந்தனம் அரைத்தல்,நெல்குற்றல், மா இடித்தல், அமுது செய்தல் என உள் வெளிப் பணிகளும் கோயிலருக்கு என்று வலுவான திட்டம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கவையாகும்.

## ஆலயத்தின் அமைவிடம்

மண்டூர் ஸ்ரீ முருகன் ஆலயாமானது கதிர்காமத்தை போன்றதாகவே தெற்கு புறத்தே வாசலைக் கொண்டு பழமை மாறாது மட ஆலயமாகவே எளிதான முறையில் அமைந்துள்ளதுடன் உள்ளே பிள்ளையார் ஆலயமும், நாகதம்பிரான் ஆலயம் ஏனைய பரிபால மூர்த்திகளுக்குரிய ஆலயம் அமைந்துள்ளதுடன் வாசல் முன்பாக கொத்து பந்தல் அமைத்து அழகு படுத்தும் காட்சிகளும் வெளி வீதியில் தெய்வாளை அம்மன் ஆலயமும், வள்ளியம்மன் ஆலயமும் அமையப் பெற்றுள்ளதுடன் அன்னதான மடங்களும் சிறப்பாக அமையப் பெற்றுள்ளன.

## ஆலய பூசை முறைகள்

இவ்வாலயத்தில் பூசைமுறையானது கதிர்காமத்தை போலவே மௌன பூசை இடம்பெறுகின்றது. கதிர்காமத்தில் 'கப்புறாளை' மேற்கொள்ள மண்டூர் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் 'கப்புகனார்' வாய்க்கு துணி கட்டி மூல மூர்த்தியின் திரை திறக்கப்படமால் பூசைகள் நடைபெறுகின்றன. கதிர்காமத்தை போன்ற சகல விடயங்களும் அமையப் பெற்றுள்ளதால் இவ்வாலயத்தை சின்னக் கதிர்காமம் என்றே குறிப்பிடுகின்றனர்.

இத்தகைய சிறப்புமிக்க மண்டூர் முருகன் ஆலயத்தின் உற்சவம் கதிர்காமத் தீர்த்தோற்சவம் முடிந்து பத்தாம் நாள் அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 21ஆம்; நாள் ஆவணி மாத பூரணைத் தினத்தில் தீர்த்த நாளாகக் கொண்டு உற்சவ திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

இந்த வகையில் 30.07.2024 திகதி கொடியேற்றத்துடன் திருவிழாக்கள் ஆரம்பமாகி தொடர்ந்து 21 நாட்கள் நடைபெற்று 19.08.2024ஆம் திகதியன்று தீர்த்தோற்சவம் இடம் பெறவுள்ளன.

கலைச்சுடர் இலக்கிய வித்தகர்
நாராயணபிள்ளை–நாகேந்திரன்

ஓம் சைவ மஞ்சரி

# அருள்மிகு ஸ்ரீதேவி கருமாரியம்மன் ஆலய ஆடிப்பூர பால்குட ஊர்வலம்



கொழும்பு ஸ்ரீ கதிரேசன் வீதி அருள்மிகு ஸ்ரீதேவி கருமாரியம்மன் ஆலயத்தின் ஆடிப்பூர பால்குட ஊர்வலம் கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி ஸ்ரீதேவி கருமாரியம்மன் ஆலயத்தை நோக்கி பவனி வந்தது. *(படம்: வடகொழும்பு தினகரன் நிருபர்)*

# அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**20181) அவர்களுடைய உள்ளங்களிலே எழுந்த வேதங்களின் ஒலி என்ன செய்தது?**

பரம்பொருளைப் பற்றிய உண்மைகளைத் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தது.

**20182) அந்த உண்மைகளை உணர்ந்து கொண்ட முனிவர்கள் என்ன செய்தார்கள்?**

பேரறிவைத் தம்முள் அனுபவித்துப் பேரின்பம் பெற்றார்கள்.

**20183) அத்துடன் நின்று விட்டார்களா?** நின்றுவிடவில்லை

**20184) அவர்கள் என்ன செய்தார்கள்?**

தாங்கள் பெற்ற இன்பத்தை உலக மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டி, வழிவழியாக வாய்மொழியாகத் தங்களுடைய சீடர்களுக்கு வேதங்களையும் ஆகமங்களையும் உபதேசித்தனர்.

**20185) இந்து மதத்தைப் பற்றி எமக்குத் தெளிவாக அறியத் தருவன எவை?**

வடமொழியிலமைந்த 'வேதங்கள்' எனப்படும் நூல்கள்.

**20186) இந்து மதத்தின் பிரமாண நூல்கள் எவை?**

வேதங்கள்

**20187) அவை எந்த மொழியிற் பெறப்படும்?** வடமொழியில்

**20188) இந்து மதநூல்களுள் காலத்தால் பழைமை வாய்ந்தவை எவை?** வேதங்கள்

**20189) அவை மனிதரால் ஆக்கப்பட்டவையா?** அல்ல;

**20190) யாரால் அருளப்பட்டவை?**

இறைவனால் அனுபூதிமான்களாகிய இருடிகளுக்கு அருளப்பட்டவை என்பது இந்துக்களின் நம்பிக்கை.

**20191) இது எழுதப்படாது செவி வழியாற் பேணப்பட்டு வந்தமையால் இதற்கு ஏற்பட்டபெயர் என்ன?**

'எழுதா மறை' 'சுருதி'

**20192) மனிதர்களால் ஆக்கப்படாதவை எனும் கருத்தால் ஏற்பட்டபெயர்?**

'அபௌருஷய நூல்கள்'

**20193) இயற்கையில் இறைவனைக் கண்டவர்கள் யார்?** எமது சமயப் பெரியார்கள்.

**20194) இவ்வியற்கை வழிபாடு எந்த இருந்தது?** வேத காலத்தில்

**20195) வேதகால மக்கள் எதில் சக்தியைக் கண்டார்கள்?**

இடி, மழை, காற்று, நீர் ஆகிய யாவற்றிலும்

**20196) இவர்கள் இச்சக்தியை என்னசெய்தார்கள்?**

இறைவனாகப் போற்றினார்கள்.

**20197) இயற்கைத் தெய்வங்களாக அவர்கள் போற்றிய தெய்வங்கள் எவை?**

அக்கினி, இந்திரன், வருணன், வாயு முதலியவற்றை

**20198) இயற்கைத் தெய்வங்ளைப் பற்றி என்ன செய்தார்கள்?**

அவற்றின் மீது தோத்திரப் பாடல்கள் பாடினார்கள்.

**20199) இப்பாடல்கள் என்னவாகின?**

இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் எனும் நான்கு வேதங்களாக வகுக்கப்பட்டுள்ளன.

# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 98



செல்வ செழிப்புடன் வாழ விரும்புபவர்கள், கடவுளின் கிருபையை பெற வேண்டும். அந்த கடவுளின் கிருபையை பெற, ஆதாரமாக இருப்பது ஆண்மை பொருந்திய உழைப்பு மட்டுமே. அனைத்தும் துறந்து ஆண்மையுடன் கூடிய உழைப்பை மேற்கொண்டவனுக்கு, கடவுள் அருள்வார் அல்ல அருளியே தீர வேண்டும். எனவே உழைப்பை பராமாத்மா விரும்புவார். உழைத்தவர் உயர்வார். உழைப்பது அவமானமல்ல. எவனொருவன் உழைப்பை நம்பி, திட்டமிட்டு, உறுதியுடன் செயல்படுகிறானோ, அவன் மஹான் எனப் போற்றப்படுவான். இப்படிப் பட்டவனைத் தான் இவ் உலகம் தேடுகிறது.

தகுதியுடையவனே வெகுமதி பெறுகிறான். இது ஒரு தெய்வ நெறியாகும். 'எந்த ஒரு கோட்பாடும் கடவுளால் உருவாக்கப்பட்டு அவராலே செயல் வடிவம் பெறும்' என்பதே இறைச் சட்டம். இதை கடவுளே பின்பற்றவும் செய்ய வேண்டும். அவ்வாறு அவர் பின்பற்றாமல் போனால் இந்த பிரபஞ்சம் செயல்பட முடியாது. ஒரு கோட்பாட்டை உருவாக்கிக் கொண்டு அதை அலட்சியப்படுத்துவதோ அல்லது மீறுவதோ மானமுள்ள செயலாகாது. படைப்பு என்னும் சக்கரம் கோட்பாடு என்னும் அச்சாணியின் உதவியால் தான் சுழன்று கொண்டிருக்கிறது. அந்த கோட்பாட்டை உருவாக்கிய கடவுளே அதனை மீற முடியாது. அப்படி மீறிவிட்டால் அந்த கோட்பாடு அர்த்தமற்று போகும்.

உழைப்பவனை உயர்த்த வேண்டும் என்பது கடவுளின் கோட்பாடு. அந்தக் கோட்பாட்டின்படி உழைப்பவன் அதற்குரிய ஊதியம் பெற்றடைவான். ஆண்மை பொருந்திய உழைப்பாளியை கைதூக்கி விடும் கட்டாயம் கடவுளுக்கு இருக்கிறது. கடவுளின் ஆதரவு உழைப்பவனுக்கு இருக்கும் பொருந்திய போது எந்த சக்தியும், அரசும் அதை தடுக்க முடியாது. ஆண்டவன் கட்டளைக்கு முன் அரச கட்டளை அடி பணியும்.

மனவலிமை இழப்பது அல்லது தாழ்வு மனப்பான்மை கொள்வது என்பது மனிதனுக்கு மனிதனே தேடிக் கொள்ளும் ஒரு சாபக் கேடாகும். சரீர பலமிருந்தும், வெற்றி பெறுவதற்கான சாதனங்கள் உள்ள போதும். தாழ்வு மனப்பான்மை கொண்டவன், மனவலிமை இல்லாதவன் வாழ்வில் வெற்றி பெற இயலாது. உடல் வலிமை இல்லாத போதும், மன வலிமை உள்ளவன் வெற்றி பெறுவதற்கான சாதனங்களை உருவாக்கிக் கொள்வான்.

ஏதோ சில காரணங்களினால், சில சூழ்நிலைகளில் ஒருவன் மனவலிமை இழந்து விட்டான் என்றால், அவன் அந்த சாபக்கேட்டிலிருந்து வெளிவர முடியாது என்றில்லை. முயற்சித்தால் முடியாதது ஒன்றுமில்லை. சூழ்நிலை காரணமாக மனவலிமை இழந்தவன், அதிலிருந்து மெல்ல மெல்ல விடுபட முயற்சிக்க வேண்டும். அதற்காக அவன் தன் உடல் சக்தி முழுமையையும் ஈடுபடுத்தி தன் ஆண்மையை நிலை நாட்ட வேண்டும். தோல்வியடைந்ததும் அவநம்பிக்கை கொள்ளாமல் மீண்டும் மீண்டும் முயற்சிக்க வேண்டும். நிதானமாக முயற்சிக்கும் போது மனவலிமையும், நற்தகுதிகளும் நிச்சயம் உருவாகும்.

# காக்கைதீவு சங்கமத்தில் பிதுர்க்கடன்



ஆடி அமாவாசை தினத்தன்று கொழும்பு மட்டக்குளி காக்கைதீவு சங்கமத்தில் பிதுர்க்கடன் நிறைவேற்றியதை படங்களில் காணலாம். *(படங்கள்: வடகொழும்பு தினகரன் நிருபர்)*

# ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி திருக்கோயில் திருப்பணிக்கு நிதிஉதவி கோரல்

கொழும்பு 13, ஸ்ரீ கதிரேசன் வீதி, 105ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி திருக்கோயிலில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு புனருத்தாபன வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு 2023.08.23ஆம் திகதி நடைபெற்றது. இவ்வாலயத்தில் விநாயகர் உட்பட பரிவார மூர்த்திகளுக்கு பரிவாரக் கோயில்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதேபோல் இராஜகோபுரம், மூலஸ்தாபனம், வசந்த மண்டபம், தேர்கள் தரிப்பிடம், கல்யாண மண்டபம், போசன சாலை மற்றும் பூசகர்களுக்கான வதிவிடங்கள் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன. இந்திய சிற்பாசிரியர் என் ஹரிபிரசாத் ஆலய திருப்பணி வேலைகளை மேற்கொண்டு வருகின்றார். இவ்வாலய திருப்பணிக்கு நிதிகளை வழங்க விரும்புகின்றவர்கள் ஆலயத்தில் ஒப்படைக்கலாம் அல்லது 0002 6000 0527 என்ற ஆலய புறக்கோட்டை சம்பத் வங்கிக் கணக்கில் வைப்பீடு செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு சிவாக்கர தேசிக சுவாமிகள் திருஞானசம்பந்தர் சைவப்பணி மன்ற அறநெறிப் பாடசாலைகளுக்கு விஜயம்



திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்தப் பரம்பரை சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் அருட்குருநாதர் தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகள் அருளாணையின் வண்ணம் பிரணவம் அறக்கட்டளையின் அனுசரணையில் திருஞானசம்பந்தர் சைவப்பணி மன்ற அறநெறிப் பாடசாலைகளுக்கு சுவாமிகள் விஜயம் செய்து அருளாசி வழங்கவுள்ளார்.

அத்துடன் தமிழ்நாடு திருஞானசம்பந்தர் திருமடத்தைச் சேர்ந்த திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்த பரம்பரை சூரியனார் கோவில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் வாமதேவ தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகள் ஆன்மீக சொற்பொழிவுகளையும் ஆற்றவுள்ளார்.

இந்த அருளாசி வழங்கும் நிகழ்வுகள் எதிர்வரும் 2024.08.24ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணி முதல் நடைபெறவுள்ளது. அன்று காலை 10.30 மணிக்கு என்பீல்ட் தமிழ் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் என்பீல்ட் அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் அன்று பிற்பகல் 1.00 மணிக்கு போடைஸ் தமிழ் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் போடைஸ் அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் அன்று பிற்பகல் 3 மணிக்கு நோர்வுட் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் அருளாசி வழங்கவுள்ளார். பிரணவம் அறக்கட்டளையின் நிர்வாகக் குழுவினரும் திருஞானசம்பந்தர் சைவப்பணி மன்ற அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களும் இதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். இந்த அருளாசி வழங்கும் நிகழ்வுக்கு தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணை வழங்குகிறது.

# விகாரையின் பிரதான பாதை அமைச்சர் தலைமையில் புனரமைப்பு



எல்ல கும்பல்வெல மஹமெவ்னாவ வீதி அண்மையில் மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் நடைபெற்ற நிகழ்வில்,இவ்வீதியை மக்களின் பாவனைக்காக அமைச்சர் திறந்து வைத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கிராமிய வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ், பதுளை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மேஜர் சுதர்சன் தெனிபிட்டியவின் வேண்டுகோளுக்கு இணங்க,இவ் வீதி புனரமைக்கப்பட்டது. இதற்கென இருபது மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இங்கு உரையாற்றிய

போதிகிரி வன சேஹசுனே விஹாராதிபதி கூறியதாவது: அமைச்சர் பந்துல குணவர்தனவை சந்தித்து இது பற்றி கூறினேன். இந்த வீதியை சுமார் ஒரு கிலோமீற்றர் வரை காபர்ட்டிட முடியும் என அப்போது தெரிவித்தார். இதைக் கூறி பத்து நாட்களுக்குள் இந்த வீதியை அமைச்சர் புனரமைத்தார். இதற்காக

சகலரதும் நன்றிக்குரித்தானவராக அமைச்சர் விளங்குகிறார்.அமைச்சர் பந்துல குணவர்தன இதுபற்றி தெரிவிக்கையில்:

இந்த இடத்திலிருந்த கடினமான பாதைக்குப் பதிலாக காபர்ட் வீதியை அமைக்க வாய்ப்பு கிடைத்ததில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் கீழ் புத்தசாசனத்தை நிலைநாட்டும் நோக்குடன் இவ்வீதி புனரமைக்கப்பட்டுள்ளது என்றார்.

# சுஹதாக்களை நினைவுகூர்ந்து விஷேட பிரார்த்தனைகள்



**(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)**

நாட்டின் அசாதாரண காலங்களில் உயிரிழந்த, காணமலான மற்றும் அங்கவீனமுற்றவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட துஆப் பிரார்த்தனை மற்றும் ஷுஹதாக்கள் தின நிகழ்வுகள் அண்மையில் அக்கரைப்பற்று பட்டினப்பள்ளிவாசலில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று சுகதா ஞாபகார்த்த அமைப்பினர் இதனை ஏற்பாடு செய்திருந்தனர். அக்கரைப்பற்று ஜூம்ஆ பட்டினப்பள்ளிவாசலில் அஸர் தொழுகையின் பின்னர் அமைப்பின் செயலாளர் எம்.எல். மஜீத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கத்தமுல் குர்ஆன் தமாம், சுஹதாக்கள் ஞாபார்த்த உரை, சுகதாக்கள் ஞாபகார்த்த ஆவணப்படுத்தலுக்கான விளக்க உரை, "துஆப்பிரார்த்தனை" ஆகியன இடம்பெற்றன.

சுஹதாக்கள் ஞபகார்த்த உரையை கிழக்கிலங்கை அரபுக்கல்லூரியின் அதிபர் மொலவி ஏ.எல்.எம். அஷ்ரப் (ஷர்கீ) நிகழ்த்தினார்.

கொலைசெய்யப்பட்ட ஊனமுற்ற, காயமடைந்த முஸ்லிம்களின் விபரங்ககள் போன்றவைகள் தொடர்பான ஆவண உரையை அஷேய்க் ஏ.எம்அக்ரம் நளீமி நடாத்தினார்.

அக்கரைப்பற்று ஜெம்மியதுல் உலமா சபையின் முன்னாள் தலைவரும் மூத்த உலமாவுமான மௌலவி எம்.ஐ.எம்.அப்துல் லதீப் (பஹ்ஜி) தலைமையில் இந்நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை (06) நடந்தது.

# இன்றைய பலன்கள் (12.08.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
பல செயல்களில் எதிர்பார்க்கும் முன்னேற்றம் கிடைக்காமல் போகலாம். சில செயல்களில் அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் உண்டு.

**ரிஷபம் :**
எடுத்த காரியங்களில் முயற்சியுடன் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். என்றாலும் சில செயல்களில் சிறு சிறு தடைகளை சந்திப்பீர்கள்.

**மிதுனம்:**
சில காரியங்களில் எதிர்பார்த்த பலன் கிடைக்காவிட்டாலும் பலன் தந்த பல காரியங்களை எண்ணி மகிழ்ச்சியடைவீர்கள்.

**கடகம்:**
நீங்கள் மேற்கொள்ளும் செயல்களில் முன்னேற்றமான பலன்களை பெறுவீர்கள். பணவரவுகளில் திருப்தியான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்:**
உங்கள் செயல்கள் பலவற்றில் நன்மையான பலன்களை அடைவீர்கள். கடினமான செயல்களையும் முயற்சியோடு செய்து முன்னேற்றம் அடைவீர்கள்.

**கன்னி:**
நீங்கள் எடுத்த முயற்சிகளில் நல்ல பல முன்னேற்றங்களை காண்பீர்கள். வரவேண்டிய தன வரவு தாமதம் இன்றி வந்து சேரும்.

**துலாம்:**
உங்கள் முயற்சிகள் பலவற்றில் முன்னேற்றமான சூழ்நிலை காணப்பட்டாலும் சிலவற்றிலேயே வெற்றி காண்பீர்கள்.

**விருச்சிகம்:**
முயற்சிகள் சிலவற்றில் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில செயல்களில் தொடர்பு இருந்தாலும் தக்க நபர்களில் உதவியுடன் முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

**தனுசு:**
காரியங்கள் பலவற்றில் தீவிர முயற்சியுடன் ஈடுபட்டாலும் சிலவற்றிலே எதிர்பார்க்கும் பலனை அடைய முடியும்.

**மகரம்:**
பல செயல்களில் முயன்று செயலாற்றினாலும் சிலவற்றில் மட்டுமே முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள்.

**கும்பம்:**
ஒப்பந்தங்களில் கையெழுத்து இடுவதை தவிர்க்கவும். வரவேண்டிய தன வரவு சிறிது தாமதித்தே வந்து சேரும்.

**மீனம்:**
செயல்கள் பலவற்றில் சிறப்பாக முயற்சிகள் செய்தாலும் சில வற்றிலையை எதிர்பார்க்கும் நன்மைகளை அடைய முடியும்.

## லயன்களில் வாழ்வோருக்கு...

நுவரெலியா வர்த்தக சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டதுடன், பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பான பல யோசனைகளையும் அவர்கள் முன்வைத்தனர்.

ஜனாதிபதித் தேர்தலில் சரியான வேலைத்திட்டத்துடன் நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு தமது பூரண ஆதரவை வழங்குவதாக அங்கு கூடியிருந்த நுவரெலியா மாவட்ட வர்த்தக சமூகத்தினர் உறுதியளித்

தனர்.முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் மஸ்கெலியா தொகுதி அமைப்பாளருமான கே. கே. பியதாச, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் டபிள்யூ. ஜி. ரணசிங்க, ஹற்றன் டிக்கோயா முன்னாள் மேயர் எஸ். பாலச்சந்திரன், ஹற்றன் வர்த்தக சங்க செயலாளர் எஸ். சோமசுந்தரம் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நுவரெலியா மாவட்ட கல்விசார் நிபுணர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்றும் (10) நுவரெலியாவில் நடைபெற்றது.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில், அதனை மாற்ற இடமளிக்க முடியாதெனத் தெரிவித்த நுவரெலியா மாவட்ட கல்விசார் நிபுணர்கள், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவது நாட்டை நேசிக்கும் அனைவரினதும் பொறுப்பு என சுட்டிக்காட்டினர்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மலையகத் தமிழ் மக்களுக்கு சமூக நீதியை நிலைநாட்டுவதற்காக அடுத்த வருடம் ஜனவரி அல்லது பெப்ரவரி மாதத்தில் மாநாடொன்று கூட்டப்படும் என குறிப்பிட்டார்.

அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்படவுள்ள சமூக நீதி ஆணைக்குழுவில் தமிழ் மக்களின் சமூகப் பிரச்சினைகளை விரிவாக ஆராய சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நுவரெலியா மாவட்ட தொழிலதிபர்களினதும், தொழில் வல்லுநர்களினதும் பிரச்சினைகள் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்டதுடன் அதற்கான தீர்வுகள் அடங்கிய பிரேரணையும் முன்வைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பாராளுமன்ற உறுப்பினமான வடிவேல் சுரேஷ் இந்நிகழ்வில் உரையாற்றியதோடு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அன்று முதல் பெருந்தோட்ட மக்களுக்காக பல பணிகளை செய்துள்ளதோடு, அந்த மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் அவர் எதிர்காலத்திலும் அர்ப்பணிப்புடன் செயற்படுவார் எனவும் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்ட இந்து பூசகர்கள் குழுவின் தலைவர் வேலு சுவிஸ்வர சர்மா மற்றும் தொழில் வல்லுநர்கள் குழுவினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## மேலதிக வேட்பாளர் ஒருவருக்கு...

செலவாகும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்க தெரிவித்தார்.

வேட்பாளர்கள் அதிகரித்தால்,மேலதிக நிதி செலவாகலாம் என்றும், எனினும் இம்முறை தேர்தலுக்கான செலவு 9.7 பில்லியன் ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிலையில் அரசாங்கத்தினால் 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதால் அது போதுமானதாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார்

தேர்தல் செயலலகத்தின் 700 உத்தியோகத்தர்களுடன் ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளுக்காக இம்முறை 2,25,000 அரசாங்க உத்தியோகத்தர்களை கடமையில் ஈடுபடுத்த தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்புக் கடமைகளுக்காக பொலிஸாரை மாத்திரம் ஈடுபடுத்தவுள்ளதாக் குறிப்பிட்ட அவர்,அந்த வகையில் 54,000 பொலிசாரை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இராணுவத்தின் ஒத்துழைப்பு தேவைப்பட்டால் பொலிஸ் மா அதிபர், அதற்கான தீர்மானத்தை மேற்கொள்வார் என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு தெளிவுப்படுத்தும் விசேட நிகழ்வொன்று தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. அங்கு விளக்கமளிக்கும் போதே தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

## இராஜகிரிய பகுதி வீட்டுக்குள்...

மில்லி மீற்றர் ரக 50 தோட்டாக்கள் மற்றும் மைக்ரோ பிஸ்டல் உள்ளிட்ட ஆயுதங்கள் நிலத்தின் கீழ் வீட்டுக்குள் கொன்கிரீட்டால் செய்யப்பட்ட இரகசிய பதுங்கு குழியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. இவற்றுடன் 6 கிராம் ஹெரோயின் . 62 மில்லி கிராம் கஞ்சா, 700 மில்லி கிராம் குஷ், 280 மில்லி கேரளா கஞ்சா என்பன மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸ் விஷேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட ஏழு சந்தேக நபர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளிலே இந்த ஆயுதக்கிடங்கு குறித்த தகவல்கள் தெரிய வந்தன.மேலும்,

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கடந்த (09) கைத்துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹேமல் பிரசாந்தவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின்படி, இராஜகிரி மதின்னகொட பகுதியைச் சேர்ந்த ஒருவரிடம் துப்பாக்கிகள் இருப்பதான தகவலின் அடிப்படையில் பொலிஸார் நேற்று முன்தினம் இரவு இந்த வீட்டை சோதனையிட்டனர்.

இதன்படி, சிறைச்சாலை அதிகாரியின் நிர்மாணிக்கப்பட்டு வரும் இரண்டு மாடி வீட்டின் மாடி அறையில் இரகசிய கொங்கிரீட் பதுங்கு குழியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த துப்பாக்கிகள் மற்றும் போதைப்பொருட்களை கண்டுபிடிக்க முடிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

## கம்பஹா மாவட்டத்தில்... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதிக்கு ஆதரவான கம்பஹா மாவட்ட பிரதிநிதிகளை உள்ளடக்கிய கம்பஹா மாவட்ட ஜனாதிபதி தேர்தல் கூட்டு வழிநடத்தல் குழு கடந்த வியாழக்கிழமை (08) நியமிக்கப்பட்டது. கம்பஹா மாவட்ட ஸ்ரீலங்கா பெதுஜனபெரமுன கட்சி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் இது,நடைபெற்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கம்பஹா மாவட்டத் தலைவர் லசந்த அழகியவன்ன, ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்டத் தலைவர் ருவான் விஜேவர்தன உள்ளிட்ட கம்பஹா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளின் மாவட்டத் தலைவர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

சில காலம் அரசியல் ரீதியாக ஒதுங்கியிருந்த இவர்கள் ஒரே நோக்கத்திற்காக ஒன்று சேர்ந்தது ஒரு தனிச் சம்பவம். ஜனாதிபதியின் தேர்தல் செயற்பாடுகள் தொடர்பில் கட்சித் தலைவர்களின் பங்களிப்புடன் நியமிக்கப்பட்ட முதலாவது கூட்டுக் குழு இதுவாகும்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்திய பல தலைவர்கள் ஒன்றிணைந்துள்ளதாகவும், தற்போது கட்சியின் இரண்டாவது அணியும் ஜனாதிபதியின் வெற்றிக்காக ஒன்றிணைந்து வருவதாகவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இங்கு தெரிவித்தார்.

## அ.இ.ம.காங்கிரஸின்... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

புத்தளம் நகர சபை முன்னாள் பிரதி தலைவர் ஏ.ஓ.அலிகான் உட்பட, கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்தும் பேசிய அவர் மேலும் கூறியதாவது,

எமது கட்சிக்கு அகில இலங்கை ரீதியாக நல்ல வரவேற்பு இருக்கிறது. கடந்த காலங்களைப்போல எதிர்வரும் காலங்களிலும் பாராளுமன்ற தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் அதிகமான உறுப்பினர்களை நாம் பெறுவோம் என்பதில் சந்தேகமில்லை.

எங்களுக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்களை அடிக்கிக் கொண்டே போனார்கள். எனினும் எவ்வாறான சவால்கள் வந்தாலும் இறைவனின் உதவியால் எல்லா வகையான சதிகளிலும் வெற்றிபெற்று முன்னேறிச் செல்கிறோம்.

## சிறிய ரக லொறி...

படுகாயமடைந்து மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மஸ்கெலியா நல்லதண்ணி பிரதான வீதியில் மஸ்கெலியா பிரவுன்லோ தோட்டப் பகுதியில் நேற்று (11) மாலை 3.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

## சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே...

தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்றுள்ள ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் தனது தீர்மானத்தை அறிவித்துள்ளார்.

## நாகபட்டினம்-காங்கேசன்துறை...

இதில் ஒரு நபருக்கு (இந்திய ரூபாவில்) ரூ 7,500 கட்டணமும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

ஒரு நபர் 60 கிலோ வரைபொதி எடுத்துச் செல்லவும், 05 கிலோ வரை கைப்பையில் எடுத்து செல்லவும் அனுதிக்கப்பட்டுள்ளது. sailindsri.com என்ற இணையதளத்தில் பயணிகள் ஆசன முன்பதிவு செய்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## தேசிய சிறந்த வர்த்தக நாமங்கள்...

விருது வழங்கும் விழாவை நடத்தவுள்ளது.

இதற்காக, இலங்கையிலுள்ள சிறிய, நடுத்தர மற்றும் பாரிய அளவிலான தொழில்முயற்சியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதி வாய்ந்த நிபுணர்களைக் கொண்ட 03 நடுவர் குழுவினால் விருது பெற்ற வர்த்தக நாமங்களுடன் 120 தொழில்முயற்சியாளர்கள், தெரிவு செய்யப்பட்டதாக இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

## அடுத்த சில... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில், குறிப்பிட்ட பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு. பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

## பிரதான வேட்பாளர்களுடன்...

மேற்படி பிரதான வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் பின், தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டம் தொடர்பில் அவர்கள் கொண்டுள்ள நிலைப்பாட்டுக்கு அமையவே,யாரை ஆதரவளிப்பதென்ற தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கட்சியின் அனுமதியின்றி தமிழ்த் தேசிய பொது கட்டமைப்பின் பொது வேட்பாளராக களம் இறங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளமைக்கு எதிராக முன்னாள் எம்.பி. அரியநேத்திரனிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## விஜயமுனி, விமலவீர...

மக்கள் சந்திப்பொன்றின்போது பதுளை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரே ஷ் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெறுவது தமது தனிப்பட்ட மகிழ்ச்சி என்றும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவால் வெற்றிபெற முடியாது எனவும் விமலவீர திஸாநாயக்க எம்பி தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளுடன் அம்பாறையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். கம்பஹா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சாவும் கம்பஹா மாவட்டத்தில் மக்கள் சந்திப்பொன்றின்போது தமது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளார்.

## துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த...

துறைமுகத்தை வந்தடைந்த சுவிட்சர்லாந்தின் ஜெனீவா கப்பல் நிறுவனத்துக்குச் சொந்தமான எம்.எஸ்.சி கேப்டவுன் என்ற சரக்குக் கப்பல், 995 கொள்கலன்களை இறக்கி 880 கொள்கலன்களை ஏற்றிச் செல்லவிருந்ததாக துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு துறைமுக அதிகார சபையின் தலைவர், கீத் பெர்னாட்டுக்கு துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பணிப்புரை விடுத்துள்ளார்.

## தேர்தல் கண்காணிப்பு...

என, தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இவ்வாறான செய்திகள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள தேர்தல் ஆணைக்குழு, அந்த செய்திகளை முற்றாக நிராகரிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் சரியான தகவல்களைத் தெரிந்து கொள்வதற்கு தேர்தல்கள் ஆணைக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறும் அல்லது ஆணைக் குழுவின் உத்தியோகபூர்வ ஊடகப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## சர்வதேச முத்தமிழ் முருகன்...

அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆளுநர் செந்தில் தொண்டமான், செய்து வரும் சமய சேவைகளை கருத்தில் கொண்டு இம்மாநாட்டுக்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மாநாடு, எதிர்வரும் 24,25 ஆம் திகதிகளில் தமிழ் நாட்டில் பழனி முருகன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டின் உலகளாவிய ரீதியில் இந்து சமயத்தின் வளர்ச்சி குறித்து ஆளுநர் செந்தில் தொண்டமான் விசேட உரை நிகழ்த்த உள்ளார்.

## தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பு...

சந்திப்பில் தமிழ்த் தேசிய பொது கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் 07 அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

## எகிப்து, இலங்கைக்கிடையில்...

பத்ர் அப்தெலட்டியும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர பயிற்சி, திறன் மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகள் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்தலை நோக்காகக் கொண்டு இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக அமைச்சர் அலி சப்ரி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# இந்திய முன்னாள் அமைச்சர் நட்வர்சிங் நேற்று காலமானார்



இந்திய முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் (வயது 93) நேற்றுக் காலமானார். அவரது மறைவுக்கு காங்கிரஸ் மூத்த நிர்வாகிகள் பலர் புகழஞ்சலி செலுத்தியுள்ளனர்.

ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த இவர் டில்லி அருகே குருகிராமில் தங்கியிருந்தார். கடந்த சில நாட்களாக வயது மூப்பின் காரணமாக சிகிச்சை பெற்று வந்தார். 2004 இல் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையிலான அமைச்சரவையில் வெளியுறவுத்துறை அமைச்சராக பணியாற்றினார். 'One Life is Not Enough' உள்ளிட்ட பல்வேறு நூல்களை எழுதி உள்ளார். பத்மபூஷண் உள்ளிட்ட பல்வேறு விருதுகளை நட்வர்சிங் பெற்றுள்ளார். இந்திய வெளியுறவுத்துறை அதிகாரியாக இருந்து அரசியலுக்கு வந்தவர் இவர்.

நட்வர்சிங் மறைவு குறித்து பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், நட்வர்சிங் மறைவுச் செய்தி கேட்டு வேதனையுற்றேன். அவர் வெளியுறவு அதிகாரியாகவும், அமைச்சராகவும் ஆற்றிய அரும் பணிகள் என்றும் மறக்க முடியாதவை. சிறந்த எழுத்தாளரும் கூட. இந்த துக்கத்தில் அவரது குடும்பத்தினருடன் நானும் பங்கெடுக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் மோடி நட்வர்சிங்குடன் எடுத்து கொண்ட பைல்படத்தையும் அவர் சமூகவலை தளத்தில் பகிர்ந்துள்ளார்.

# இந்தியாவுக்கு யூனுஸ் விடுத்த எச்சரிக்கை!



பங்களாதேஷில் முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு பதவியேற்றுள்ள நிலையில், இந்தியாவிற்கு கடுமையான எச்சரிக்கை ஒன்றை முகமது யூனுஸ் தெரிவித்துள்ளார். அந்நாட்டின் தலைவர், புதிய அரசின் தலைமை ஆலோசகர் என்ற பெயரில் இவர் பதவி ஏற்றுள்ளார்.

இந்தியாவிற்கு ஆதரவான நிலைப்பாடு கொண்டவர் இவர். முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவும் இந்தியாவிற்கு நெருக்கம். தற்போது யூனுஸ் உள்ளே வந்திருப்பது இந்தியாவிற்கு ஒரு வகையில் சாதகமாகப் பார்க்கப்படுகிறது. ஆனால் கடந்த சில காலமாக இவர் இந்தியாவை விட பாகிஸ்தான், அமெரிக்காவுடன் தான் அதிக நெருக்கம் காட்டி வருகிறார்.

இவர் அமெரிக்காவின் சி.ஐ.ஏவிற்கும் மிகவும் நெருக்கமானவர் என்று கூறப்படுவதால் இவரை தெரிவு செய்ததற்குப் பின்னணியில் வேறு சில அரசியல் அழுத்தங்கள், சர்வதேச திட்டங்கள் இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. நாட்டின் தற்போதைய பிரச்சினைகளை சமாளிக்க உதவுவதற்கு தயாராக இருப்பதாக அவர் கூறி உள்ளார்.

இந்த நிலையில் இந்தியாவிற்கு கடுமையான எச்சரிக்கை ஒன்றை முகமது யூனுஸ் தெரிவித்துள்ளார். "ஜனநாயகம்தான் ஸ்திரமின்மைக்கு மருந்து என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். வங்கதேசம் ஸ்திரமற்றதாக மாறினால், இந்தியாவின் வடகிழக்கு மற்றும் மேற்குவங்க மாநிலம் மாத்திரமன்றி மியன்மாரும் சேர்ந்து பாதிக்கப்படும். வங்கதேசம் பாதித்தால் எல்லையில் உள்ள இந்தியாவின் மாநிலங்களும் பாதிக்கப்படும் என்பதை மறக்க வேண்டாம்" என்று அவர் கூறியுள்ளார்.

# இந்தியா எங்கும் மருத்துவர்கள் இன்று முதல் பணிப்பகிஷ்கரிப்பு

## பயிற்சி மருத்துவருக்கு நடந்த கொடுமைக்கு கண்டனம்!

மேற்குவங்க மாநிலம், கொல்கத்தாவில் பயிற்சி மருத்துவர் பாலியல் கொடுமை செய்யப்பட்டு, கொல்லப்பட்ட சம்பவம் கடும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ள நிலையில், இன்று முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இந்திய மருத்துவர்கள் சங்கம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனைகளில் அவசர கால, முக்கிய மருத்துவ சேவைகளைத் தவிர்த்து மற்றைய பிரிவுகளில் சிகிச்சை அளிக்கப் போவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்குவங்க மாநிலம், கொல்கத்தாவில் உள்ள ஆர்ஜி கார் அரசு மருத்துவமனையில் பயிற்சி மருத்துவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் மேற்குவங்க மாநிலத்தில் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

கொல்கத்தாவில் உள்ள ஆர்ஜி கார் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் மாணவி இரண்டாமாண்டு முதுநிலை மருத்துவம் பயின்று வந்துள்ளார். அவர் வியாழக்கிழமை இரவுப் பணியில் இருந்த நிலையில் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. மருத்துவ மாணவியின் உடற்கூறாய்வில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கொலை வழக்கு விசாரணை சிறப்பு புலனாய்வுப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளது. இந் நிலையில், இந்தக் கொலை சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்து கொல்கத்தாவில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளிலும் மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இரவுப் பணியில் உள்ள மருத்துவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும், உயிரிழந்த மாணவிக்கு நீதி கிடைக்க முறையான விசாரணை மேற்கொண்டு, குற்றவாளிக்கு கடும் தண்டனை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த வழக்குத் தொடர்பாக சஞ்சய் ராய் என்பவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# காஷ்மீரில் மீண்டும் பயங்கரவாதிகளின் தாக்குதல்கள்; தொடரும் மோதல்கள்!

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் நேற்று அதிகாலை முதலே பாதுகாப்புப் படையினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது.

ஜம்மு காஷ்மீரின் கிஷ்ட்வார் மாவட்டத்தில் இம்மோதல் நடைபெற்றது. அப்பகுதியில் பதுங்கி இருந்த பயங்கரவாதிகளை அழிக்க பாதுகாப்புப் படையினர் நடவடிக்கை மேற்கொண்டதையடுத்து இம்மோதல் தொடங்கியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக நேற்றுமுன்தினம் அனந்தநாக் மாவட்டத்தில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 2 பாதுகாப்புப் படையினர் மரணம் அடைந்தனர். ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் கடந்த சில மாதங்களாக பாதுகாப்புப் படையினரை இலக்கு வைத்து பயங்கரவாதிகள் தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதில் பாதுகாப்புப் படையினர் பலர் மரணமடைந்துள்ளனர். நாட்டின் 78வது சுதந்திர தின கொண்டாட்டங்களை பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் சீர்குலைக்க முயற்சிப்பர் என்பதால் ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்புப் படையினர் உஷார் நிலையில் உள்ளனர் என்று பாதுகாப்பு தரப்பு தெரிவித்தது. இந்த நிலையில் ஜம்மு காஷ்மீரின் அனந்தநாக் மாவட்டம் கோகர்நாக் வனப்பகுதியில் பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்புப் படையினருக்கு தகவல்கள் கிடைத்தன. இதனையடுத்து அப்பகுதியில் தீவிர தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போது பதுங்கி இருந்த பயங்கரவாதிகள், பாதுகாப்புப் படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனையடுத்து இரு தரப்பினரிடையே பயங்கர துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் இந்திய வீரர்கள் 2 பேர் மரணம் அடைந்தனர். மேலும் 3 பேர் படுகாயமடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து நேற்று அதிகாலையில் கிஷ்ட்வார் மாவட்ட வனப்பகுதியிலும் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து தீவிர தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அங்கு பதுங்கி இருந்த தீவிரவாதிகள், பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்தினர். இதற்கு பாதுகாப்புப் படையினர் தரப்பில் பதிலடி தரப்பட்டது. இந்த மோதல் தொடர்ந்து நீடித்தது. இதனால் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது.




# இந்திய சுதந்திர தினத்தன்று விண்வெளியில் புதிய சாதனை

விண்வெளி துறையில் இந்தியா சமீப காலமாக பெரும் சாதனைகளை படைத்து வருகிறது. குறிப்பாக சந்திராயன் 3 மற்றும் ஆதித்யா எல்1 உள்ளிட்ட ஸ்பேஸ் மிஷன்கள் சர்வதேச அளவில் பெரும் கவனம் பெற்றிருக்கின்றன.

இந்நிலையில் சுதந்திர தினத்தன்று இஸ்ரோ இ.ஒ.எஸ்8 செயற்கைக்கோளை எஸ்.எஸ்.எல்.வி.டி3 சிறிய செயற்கைக்கோள் ஏவுதல் வாகனம் மூலம் செலுத்துகிறது.

செயற்கைக்கோள்கள் மூலம் கிடைக்கப்பெறும் தரவுகள் நாட்டின் பல்வேறு துறைகளுக்கு முக்கிய பங்காற்றி வருகின்றன. குறிப்பாக தொலைக்காட்சி ஒளிபரப்பு, ஏடிஎம், தொலைபேசி தொடர்பு, தொலைநிலை கல்வி, தொலைநிலை மருத்துவம், காலநிலை, வரட்சி மதிப்பீடு, நிலத்தடி நீர் பகுதிகளை கண்டறிதல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய பிரிவுகளில் உதவுகிறது.

மேலும், இஸ்ரோ மேற்கண்ட துறைகளை மேம்படுத்தும் வகையில் தேவைகளுக்கேற்ப பல்வேறு செயற்கைக் கோள்களை இஸ்ரோ தொடர்ந்து அனுப்பி வருகிறது.

இந்நிலையில் சுதந்திர தினத்தன்று, இ.ஒ.எஸ்8 செயற்கைக்கோளை எஸ்.எஸ்.எல்.வி.டி3 சிறிய செயற்கைக்கோள் ஏவுதல் வாகனம் மூலம் இஸ்ரோ விண்ணில் செலுத்த இருக்கிறது.

# இனிய நந்தவனம் வட மாகாண சிறப்பிதழ் வெளியீடு




'இனிய நந்தவனம்' இலங்கை வட மாகாண சிறப்பிதழ் நேற்று முல்லைத்தீவு விசுவமடு நகரில் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதன் முதலாவது பிரதியை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஆலோசகர் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், அறிவிருட்ஷம் பணிப்பாளர் (துரித கல்வி சமூக மேம்பாடு) I. M. சறைஸ் அவர்களுக்கு வழங்கி வைப்பதை படத்தில் காணலாம். அருகில் நந்தவனம் ஆசிரியர் சந்திரசேகரன், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் ஆகியோர் காணப்படுகின்றனர். படம் : மாங்குளம் நிருபர் தவசீலன்

# சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்பால்அலியின் மைத்துனர் காலமானார்

சிரேஸ்ட ஊடகவியலாளர் இக்பால் அலியின் மைத்துனர் கண்டி ஐ.எம். அப்துல் காதர் (வயது 84) நேற்று 11ஆம் திகதி காலமானார். இவர், கண்டி மாநகர சபையின் காசாளராக நீண்டகாலம் பணியாற்றி ஓய்வுபெற்றார்.

கதீஜா உம்மாவின் அன்புக் கணவரும் சக்கீர் காதர் (கனடா), சனூபா காதர் (மலேசியா) ஆகியோர்களின் அன்புத் தந்தையுமான அன்னார், சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்பால் அலி மற்றும் ஏ. பாரூக் (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர், கல்முனை மஹ்மூத் பாலிகா வித்தியாலயம் ) அன்பு மச்சானுமாவார்.

ஜனாஸா இன்று (12) திங்கட்கிழமை காலை கண்டி கட்டுக்கல முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படும். (முகவரி 445, பேராதெனிய வீதி, கண்டி)

# பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாட்டை மீட்டெடுத்தவர் ஜனாதிபதி ரணிலே

## ஸ்ரீ.ல.சு.க. மத்திய குழு உறுப்பினர்



பொருளாதார வீழ்ச்சிக்குள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்திருந்த நாட்டை குறுகிய காலப்பகுதியில் மீளக் கட்டியெழுப்பி மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுத்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான்.

அவருக்கு இந்நாட்டு மக்கள் என்றும் நன்றி கடன்பட்டுள்ளனர் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினரும், கொழும்பு மாவட்ட அமைப்பாளருமான எம். பௌஸான் அன்வர் தெரவித்துள்ளார்.

நாடு 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் பொருளாதார வீழ்ச்சிக்குள்ளான போது 69 இலட்சம் வாக்கு பெற்றவர் பதவியை விட்டு வெளியேறினார். 55 இலட்சம் பெற்றவர் நாட்டின் தலைமையை ஏற்று நாட்டை மீளக்கட்டியெழுப்ப முன்வர மறுத்தார்.

ஆனால் தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி நாட்டின் தலைமையை ஏற்று பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீளக்கட்டியெழுப்பினார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் குறித்து இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

நாடு பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பப்பட வேண்டும். தொடர்ந்தும் மூன்றாம் மண்டல நாடாக இருக்க முடியாது. மீண்டும் ஒரு தடவை நாட்டில் பொருளாதார வீழ்ச்சி ஏற்படக்கூடாது. அதுவே அனைத்து மக்களதும் எதிர்பார்ப்பாகவும் விருப்பமாகவும் உள்ளது.

அதனால் வீழ்ச்சியடைந்திருந்த பொருளாதாரத்தை கட்டம் கட்டமாக மீளக்கட்டியெழுப்பி நாட்டை பொருளாதார மறுமலர்ச்சி பாதையில் இட்டுச் சென்றுள்ள ஜனாதிபதியின் வேலைத்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அந்த வேலைத்திட்டங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும். அதன் ஊடாகவே நாட்டில் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும். ஜனாதிபதியின் ஒரே விருப்பம் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியே என்றார்.






# நகர்வலம்



## நாட்டின் பொருளாதார மறுசீரமைப்புக்கான செயற்றிட்டம்; கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்த அரசு தீர்மானம்

### அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் பொருளாதார மறுசீரமைப்புக்காக முன்னெடுக்கப்பட்ட தீர்மானங்கள் கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்த அரசு தீர்மானம் எடுத்துள்ளதென கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பங்களாதேஷ் நாட்டின் தற்போதைய நிலைமை இலங்கையில் உருவாகக்கூடிய சூழல் காணப்பட்ட போது தனி நபராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சவால்களை பொறுப்பேற்றார் என்றும் பாராளுமன்றம் முற்றுகையிடப்பட்டிருந்தால் தற்போது எவரும் பாராளுமன்றத்துக்கு வருகை தந்திருக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பங்களாதேஷ் நாட்டின் நிலைமை கவலைக்குரியது. 2022 ஆம் ஆண்டு இலங்கையில் போராட்டம் உருவெடுத்து எரிபொருள்,எரிவாயு மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்கான வரிசை தீவிரமடைந்தது. அனைத்து பகுதிகளிலும் போராட்டம் இடம்பெற்றது. இவ்வாறான கடுமையான சூழ்நிலையில் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றார்.

போராட்டம் தீவிரமடைந்து ஆட்சிமாற்றம் ஏற்பட்டதன் பின்னர் இடைக்கால ஜனாதிபதியாக பதவியேற்றார். பங்களாதேஷ் நாட்டின் பாராளுமன்றத்தை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டுள்ளனர். 2022 ஆம் ஆண்டு எமது பாராளுமன்றத்தை முற்றுகையிடுவதற்கும், சபாநாயகரின் வாசஸ்தலத்தை இடித்தழிப்பதற்கும் ஒருதரப்பினர் வருகை தந்தார்கள்.

பாராளுமன்றம் முற்றுகையிடப்பட்டிருந்தால் தற்போது எவரும் பாராளுமன்றத்துக்கு வருகை தந்திருக்க முடியாது. உரையாற்றவும் முடியாது. ஆகவே யதார்த்தத்தை அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஜனநாயகத்துக்கு எதிரான போராட்டங்கள் ஒரு போதும் வெற்றி பெறாது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் 53 பில்லியன் டொலர் சர்வதேச கடன்களையும், 43 பில்லியன் ரூபா தேசிய கடன்களையும் மறுசீரமைக்கும் அவசியம் காணப்பட்டது. நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் பொருளாதார திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. பணவீக்கம் குறைவடைந்துள்ளது. அத்துடன் வெளிநாட்டு கையிருப்பு நிலைபேறான தன்மையில் காணப்படுகிறது. வெளிநாட்டு கடன்கள் வெகுவிரைவில் மறுசீரமைக்கப்படும்.

பொருளாதார கொள்கையை ஸ்திரமாக முன்னெடுத்துச் செல்வதற்காகவே பொருளாதார மாற்றம் மற்றும் அரச முகாமைத்துவ சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பொருளாதார இயல்பு நிலைக்காக மேற்கொள்ளப்பட்ட கடுமையான தீர்மானங்கள் கட்டம் கட்டமாக மறுசீரமைக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புத்தளம் தேர்தல் தொகுதி ஐ.ம.ச இணை அமைப்பாளராக ரபீக்



**புத்தளம் தினகரன் நிருபர்**

ஐக்கிய மக்கள் சக்தி புத்தளம் தேர்தல் தொகுதியின் புதிய இணை அமைப்பாளராக முன்னாள் புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் நியமிக்கப்பட்டுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தி தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாசவினால் கொழும்பிலுள்ள கட்சி தலைமையகத்தில் (09) வைத்து இவருக்கான நியமன கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் புத்தளம் தொகுதி ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளராக பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி செயல்பட்டு வந்தார்.

இந்நிலையில் சிறுபான்மை இன ஒருவராக புத்தளம் முன்னாள் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் நியமிக்கப்பட்டுள்ளதையடுத்து புத்தளம் வாழ் பொதுமக்கள் அவருக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

## வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

மடாட்டுகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புலாகல பகுதியில் (10) இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்தில் கித்துல்ஹிட்டியாவ பகுதியைச் சேர்ந்த அமித் குமார ஜயசிங்க என்ற 29 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

தம்புள்ளையில் இருந்து கெக்கிராவ நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டி ஒன்று கெக்கிராவ பகுதியிலிருந்து தம்புள்ளை நோக்கிப் பயணித்த கெப் வாகனத்துடன் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தின் போது முச்சக்கர வண்டியின் சாரதியும் பின்புறத்தில் அமர்ந்திருந்த நபரொருவரும் படுகாயமடைந்த நிலையில் தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பின்னர் சிகிச்சை பலனின்றி முச்சக்கர வண்டி சாரதி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## தோட்டத்தொழிலாளர்களின் சம்பள பிரச்சினையை ஜனாதிபதி தீர்ப்பார்

### இரத்தினபுரி ஐ.தே.க அமைப்பாளர் ஆனந்தகுமார்



மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது நேரடி கவனத்திற்கு எடுத்துள்ளார். எனவே, இன்று 12 ஆம் திகதி நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை மூலம் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கை உள்ளதாக ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்றுபேர் கொண்ட குழுவின் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்தார்.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் அவசியத்தை உணர்ந்து அவருக்கான ஆதரவு நாளுக்கு நாள் பெருகிவருவதால் மலையக அரசியல் வாதிகளும் தமது முடிவுகளை மீள்பரிசீலனை செய்து ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி செயற்பாட்டாளர்கள் சிலருடன் நேற்று (11) நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

" நாடு மற்றும் மக்களின் நலன் கருதியே ஜனாதிபதி தேர்தலில் அனைத்து தரப்புகளின் ஆதரவுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயாதீன வேட்பாளராக களமிறங்குகின்றார். அவரின் இந்த முயற்சிக்கு ஐக்கிய தேசியக் கட்சி முழுமையான ஆதரவை வழங்கும். இது தொடர்பில் கட்சியின் மத்தியசெயற்குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தெற்காசிய நாடான பங்களாதேஷில் அண்மையில் அராஜக நிலை ஏற்பட்டது, முழு நாடும் பற்றி எரிந்தது. நாடாளுமன்றம்கூட கைப்பற்றப்பட்டது. அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டனர். ஆனால் எமது நாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்ற தலைவர் இருந்தால்தான் நாடு காப்பாற்றப்பட்டது. மக்கள் தற்போது நிம்மதியாக வாழும் நிலை உருவாகியுள்ளது. வரிசை யுகத்துக்கு முடிவு கட்டப்பட்டுள்ளது.

எனவே, நாட்டில் மீண்டும் பிரச்சினை ஏற்படுவதை, வரிசைகள் உருவாவதை மக்கள் விரும்பவில்லை. ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கும் தீர்மானத்தை எடுத்துவிட்டனர். இதனால் ஜனாதிபதியின் வெற்றி உறுதியாகியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### மாத்தறை மாவட்டத்தில்

## 06 லட்சத்து 86,185 பேர் வாக்களிக்க தகுதி

**(வெலிகம தினகரன் நிருபர்)**

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மாத்தறை மாவட்டத்தில் பதிவாகியுள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 6 இலட்சத்து 86 ஆயிரத்து நூற்று எண்பத்து ஐந்து (6,86,185) என மாத்தறை மாவட்ட தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இம் மாவட்டத்தில் 7 தேர்தல் தொகுதிகள் உள்ளடங்கியுள்ளன.

இதன் பிரகாரம் தெனியாய தேர்தல் தொகுதிகளில் 1,08304, ஹக்மன 1,00060, அகுரஸ்ஸ 1,02636, கம்புறுப்பிட்டிய 87,961, தெவிநுவர 85,310, மாத்தறை 98,184, மற்றும் வெலிகம தேர்தல் தொகுதியில் 1,03710 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர் .

குறிப்பிட்ட தேர்தல் தொகுதிகளுக்கும் 526 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக தேர்தல் அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதில் தெனியாய தேர்தல் தொகுதியிலேயே கூடுதலான வாக்காளர்கள் பதிவாகியுள்ளதுடன், குறைந்தளவு வாக்காளர்கள் பதிவாகியுள்ள தொகுதி தெவிநுவர தேர்தல் தொகுதியாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## புத்தளம் இஸ்லாஹிய்யா மாணவிகள் பொது நூலகத்துக்கு விஜயம்

**புத்தளம் தினகரன் நிருபர்**



புத்தளம் இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக்கல்லூரி இறுதி ஆண்டு மாணவிகள் தங்களின் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியான நூலக ஆய்வுக் கட்டுரை மேற்கொள்ளும் பொருட்டு அதற்காக வேண்டிய நூலகம் தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்காக புத்தளம் பொது நூலகத்துக்கு வெள்ளிக்கிழமை (09) வருகை தந்தனர்.

தமது விரிவுரையாளர்கள் சகிதம் நூலகத்துக்கு விஜயம் செய்த மேற்படி மாணவிகளை பிரதான நூலகர் கே.எம்.நிஷாத் உள்ளிட்ட அங்கு கடமையாற்றும் அதிகாரிகள் வரவேற்றனர்.

நூலகத்தின் பத்திரிகை வாசிப்பு பகுதி, சிறுவர் பகுதி, உசாத்துணை பகுதிகளுக்கு விஜயம் செய்த மாணவிகள், நேரடியாக நடைமுறைகளை அறிந்து கொண்டதுடன், தங்களது இஸ்லாஹிய்யா அரபுக்கல்லூரி நூலகத்துக்கு விஜயம் செய்யுமாறு பிரதம நூலகருக்கும் அழைப்பு விடுத்தனர்.

புத்தளம் பொது நூலகத்தின் பிரதம நூலகரும், இலங்கை நூலக சங்கத்தின் விரிவுரையாளருமான கே.ம். நிஷாத் இதன்போது நூலகம் தொடர்பாக வருகை தந்திருந்த மாணவிகளுக்கு விளக்கம் அளித்தார்.

## கற்பிட்டி வடக்கு எல்லை பகுதியில் பீடி இலைகள் மீட்பு

**கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்**



புத்தளம் கற்பிட்டி வடக்கு எல்லைப்பகுதியின் குதிரமலை பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூன்று டிங்கி இயந்திர படகுகளில் இருந்து ஒருதொகை பீடி இலைகள் கடந்த வெள்ளிக்கிழமை (09) கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேற்கு கடற்படை கட்டளைக்கு இணைக்கப்பட்ட இலங்கை கடலோர காவல்படையின் விஷேட ரோந்து கப்பலில் கடற்படையினர் குறித்த பிரதேசத்தில் விஷேட தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன் போது, சந்தேகத்திற்கு இடமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூன்று டிங்கி இயந்திர படகுகளை சோதனைக்குட்படுத்திய போது அதில் பீடி இலைகள் இருந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த மூன்று டிங்கி இயந்திர படகுகளிலும் 62 உர மூடைகளில் அடைக்கப்பட்ட 2068 கிலோகிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன், இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பெயரில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 20 இற்கும் 37 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும் இவர்கள் கற்பிட்டி பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

## உளவியல் ஆலோசனை வழங்கும் நிகழ்வு

**திறப்பனை தினகரன் நிருபர்**

'திருமணத்திற்கு முந்தைய உளவியல் ஆலோசனை' வழங்கும் நிகழ்வு அண்மையில் அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ரஞ்சித் விமலசூரிய தலைமையில் அநுராதபுர மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் அனுசரணையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, மகளிர் பணியகத்தின் மாவட்ட ஆலோசனை உத்தியோகத்தர் திருமதி மாலாசனிகா குமாரி இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார். அநுராதபுர மாவட்டத்தின் மேலதிக மாவட்டப் பதிவாளர்கள், கிராமிய பிறப்பு இறப்பு திருமணப் பதிவாளர்கள் மற்றும் உளவியல் ஆலோசனை உத்தியோகத்தர்கள் என பலர் இணைந்திருந்தனர்.

## மல்வானை அல்- மஹ்மூத்தில் ஜேர்ஸி அறிமுக நிகழ்வு



களனி வலய பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்ட சுற்றுப் போட்டி "முபாறக்கியன்ஸ் சம்பியன் ட்ரொபி" இல் விளையாடும் மல்வானை, உளகிட்டிவள அல் மஹ்மூத் மகா வித்தியாலய மாணவர்களுக்கான ஜேர்ஸி அறிமுக நிகழ்வு சனிக்கிழமை (10) பாடசாலையில் அதிபர் எம்.எம்.எம். றிம்ஸான் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில், பாடசாலை விளையாட்டுப் பிரிவு பொறுப்பாசிரியர், பாடசாலை அபிவிருத்தி சங்க அங்கத்தவர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் இச்சீருடையினை பாடசாலை மாணவர்களுக்காக அன்பளிப்பு செய்த மல்வானை மல்டி பெப்ரிக் உரிமையாளர் அனீஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். எமது பாடசாலை கால்பந்தாட்ட அணியினருக்கான ஜேர்ஸி குறைபாடு நீண்டகாலமாக இருந்த நிலையில் அதனை நிவர்த்தி செய்து தந்த மல்வானை மல்டி பெப்ரிக் உரிமையாளர் அனீஸுக்கு பாடசாலை சமூகம் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறது.

**(தகவல் : அஷ்ரப் கான்)**

## ஜே.எம். மீடியா ஏற்பாட்டில் இலவச ஊடக செயலமர்வு




மாவனல்லை ஜே. எம். மீடியா நிறுவனம் அகில இலங்கை ரீதியாக ஏற்பாடு செய்த இலவச ஊடகச் செயலமர்வும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் மாவனல்லை எம். பி.சீ.எஸ். மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், ஊடகவியலாளர்களான ராஷித் மல்ஹர்தீன், கே.எம்.ரசூல், ரஸா மல்ஹர்தீன் ஆகியோர் விரிவுரைகளை நடத்தினர். நாட்டின் பல பாகங்களிலும் இருந்து சுமார் நானூறுக்கும் மேற்பட்டோர் இதில் கலந்துகொண்டு பயன்பெற்றனர். **(தகவல் : பாராதாஹிர்)**

# கிழக்கின் குரல்



ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில்

## செய்திகளை தெரிந்து கொள்வதில் அம்பாறை மாவட்ட மக்கள் ஆர்வம்

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21ம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான செய்திகளை அறிந்து கொள்வதில் அம்பாறை மாவட்ட மக்கள்

தற்காலத்தில் அதிகம் ஆர்வங் காட்டி வருகின்றனர்.

பத்திரிகைச் செய்திகளை படிப்பதிலும், வானொலிச் செய்திகளை கேட்டறிவதிலும், தொலைக்காட்சி செய்திகளைப் பார்த்தறிவதிலும்

ஆர்வங்காட்டுபவர்களின் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. தினசரி பத்திரிகை விற்பனையும் அதிகரித்துள்ளதாக

முகவர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பைத் தொடர்ந்து அரசியற்கட்சிகளின் நிலைவரம்,தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் பற்றிய விபரம், அவர்களது கடந்த கால அரசியல் பயணம், பொதுமக்களுக்கான சேவைகள், வெளிநாட்டுத் தொடர்புகள். எதிர்கால இலக்கு என்பன குறித்து அறிந்து கொள்வதில் மக்கள் விருப்பம் கொண்டுள்ளனர்.

இவ்விடயங்களில், இளைஞர்களை விடவும் வயோதிபர்களே மும்முரம் காட்டிவருவதும் தெரியவந்துள்ளது.

பத்திரிகை விற்பனை நிலையங்கள்.

ஹோட்டல் முன்றல்கள், பொழுதுபோக்கு இடங்கள் என்பனவற்றில் இவ்வாறானவர்கள் கூடி தேர்தல் செய்திகளை பகிர்ந்து கொள்ளல், புதிய செய்திகளை அறிந்து, தெரிந்து

கொள்வதில் ஈடுபட்டுவருகின்றனர்.

## கிழக்கில் திடீர் மழை ; காத்தான்குடி கடலில் பெருமளவிலான சூடை மீன்கள்

மீனவர்கள் பெரும் மகிழ்ச்சி

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் கடந்த சில மாதங்களாக மிகவும் கடுமையான வறட்சியான காலநிலையையடுத்து நேற்று இம் மாகாணத்தில் பல இடங்களில் திடீரென மழை பெய்துள்ளது. இதனை அடுத்து காத்தான்குடி கடற்பிரதேசத்தில் நேற்று காலை மிகவும் அதிகளவிலான சூடை மீன்கள் பிடிபட்டதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

காத்தான்குடி ஏத்துக்கால் கடற்பிரதேசத்தில் நேற்று காலை மீனவர்கள் பெருமளவிலான சூடை மீன்களை தமது வலைகளில் பிடித்து கரைக்கு கொண்டு வந்தே விற்பனை செய்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது .

கரைவலை போன்று வளைச்சல் வலை எனும் மீன்பிடித்தல் முறையூடாகவே குறித்த சூரை மீன்களை பிடித்ததாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். அதிகளவிலான மீனவர்கள் ஒன்று சேர்ந்து கடலின் நடுப்பகுதியில் கடல் பகுதியை வளைத்து வலையைக் கட்டிவைத்து கரையை நோக்கி வருகின்ற குறித்த மீன்களை பிடித்ததாக மீனவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

பிடிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான சூடை மீன்கள் நேற்று காலை காத்தான்குடி ஏத்துக்கால் கடற்கரை பிரதேசத்தில் ஒரு கிலோ 300 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

சாதாரணமான நேரங்களில்



குறித்த மீன் ஒரு கிலோ 700 ரூபா முதல் 800 ரூபாய் வரை விற்பனையாவது குறிப்பிடத்தக்கது.

திடீரென பிடிப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான சூடை மீன்களினால் மீனவர்கள் பெரும் இலாபமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தென்கிழக்கு பல்கலையின் பதில் உப வேந்தர் நியமனம்

(மாளிகைக் காடு குறூப் நிருபர்)



தென் கிழக்கு பல்கலைக்கழக பதில் உப வேந்தராக பல்கலைக்கழகத்தின் தொழிநுட்ப பீடாதிபதி கலாநிதி யூ எல் அப்துல் மஜீட் நியமிக்கப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாக நிரந்தர உபவேந்தர் நியமிக்கப்படும் வரை இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் உப வேந்தர் பேராசிரியர் கலாநிதி ரமீஸ் அபூபக்கரின் பதவிக்காலம் நிறைவு பெற்றுள்ள நிலையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி தேர்தலுக்கு பிற்கொடுப்பனவு அஞ்சல் வசதிகளை வழங்க நடவடிக்கை

அஞ்சல் மா அதிபர் தெரிவிப்பு

(ஒலுவில் விசேட நிருபர்)

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21 ம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு பிற்கொடுப்பனவு அஞ்சல் வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அஞ்சல் மா அதிபர் டப்ளியு.எம். ஆர்.பி. சத்குமார அறிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்று நிரூபம் சகல மாகாணப் பிரதி அஞ்சல் மா அதிபதிகளுக்கும், பிரதேச அஞ்சல் அத்தியட்சகர்கள், அஞ்சல் அதிபர்கள் மற்றம் உப அஞ்சல் அதிபர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலுக்காக தேர்தல் ஆணைக்குழுவிற்கு மாவட்ட தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள், மாவட்ட பிரதி மற்றும் உதவி தேர்தல் ஆணையாளர்கள் போன்றவர்களால் அனுப்பப்படும் கடிதங்கள், பொதிகள் மற்றும் ஆவணங்களையும், அவ்வாறே கிராம உத்தியோகத்தர்களுக்கு, மாவட்டத் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்களுக்கு, பிரதி மற்றும் உதவி தேர்தல் ஆணையாளருக்கு முகவரியிடப்பட்டு அனுப்பப்படும் கடித ஆவணங்கள், தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அரச உத்தியோகத்தர்களினால் அனுப்படும் "தேர்தல் ஆவணம்" அஞ்சல் இடப்பட்ட பொதிகளையும், கடிதங்களையும் முன்னுரிமையளித்து முதல் அஞ்சலிலேயே அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தேர்தல் பணிக்காக வேறு அரச திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களிடமிருந்து தேர்தல்கள் ஆணைக்ழுவுக்கு அனுப்பப்படும் கடித ஆவணங்களுக்காகவும் மேற்படி முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் மாதம் 21ம் திகதி தொடக்கம் தேர்தல் முடிவடைந்து ஒரு வாரம் வரை அஞ்சல் வசதி அமுலில் இருக்குமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆவணங்கள் அடங்கிய பொதிகள் பாரம் எடுக்கும் பொழுது பாதுகாப்பு சம்மந்தமாக கவனம் எடுப்பது மிகவும் அவசியம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## காத்தான்குடியில் தேசிய மக்கள் சக்தியின் காரியாலயம் திறப்பு



(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

ஜனாதிபதி தேர்தலுக்கான தேசிய மக்கள் சக்தியின் பிரச்சார அலுவலகமொன்று நேற்று (11) ஞாயிற்றுக் கிழமை காலை காத்தான்குடியில் திறந்து வைக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான விஜித ஹேரத் இந்த அலுவலகத்தை திறந்து வைத்தார்

இந்த நிகழ்வில் மக்கள் விடுதலை முன்னணியின்(ஜே.வி.பி) காத்தான்குடி முக்கியஸ்தர் ஓய்வு ஆசிரியர் இப்றாகீம் உட்பட தேசிய மக்கள் சக்தியின் பிரதேச இணைப்பாளர் முஹம்மத் ஹாதி, ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர் அஸீஸ் மற்றும் அதன் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்

புதிய காத்தான்குடி ஆறாம் குறிச்சி ஏ.எல்.எஸ்.மாவத்தையில் இந்த அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

## கல்முனையில் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நிகழ்வு

( காரைதீவு குறூப் நிருபர் )

கல்முனை இ.கி.மிஷன் மகா வித்தியாலயத்தில் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழாத் தொடர் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அநிருத்தனின் வழிகாட்டலின் கீழ் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து நடாத்திய அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா பாடசாலையின் அதிபர் திருமதி விஜயசாந்தி நந்தபாலா தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை வலையக் கல்வி பணிமனையின் இந்துசமய பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகர்



ம.லக்குணம், தொழில் வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் எஸ். சிவசுந்தமூர்த்தி மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி நா. ஸ்ரீபிரியா, சைவப் புலவர், வளவாளர் ஜோ.கஜேந்திரா, வளவாளர் நா.சனாதனன், சொற்பொழிவாளர் ஒன்றியத்தின் நிருவாக உறுப்பினர்களான கு.கிலஷன், கோ திருநாகரன், பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.பாடசாலைகளுக்கான சுவாமியின் திருவுருவப்படங்களை சமயப்பற்றாளர் எஸ். மகேந்திரன் சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணி மன்றத்திற்கு வழங்கி வைத்தார்.

## வீடுகள் இல்லாது வாழ்ந்த நான்கு குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

"சமூகங்களை கட்டியெழுப்புதல்" திட்டத்தின் கீழ் Pledge to Restore Foundation அமைப்பின் நிதி அனுசரணையுடன் ஜீவ ஊற்று அன்பின் கரத்தின் இணைப்பாக்கத்தில், சொந்த வீடுகள் இல்லாது வாழ்ந்து வந்த நான்கு குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை கையளிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (09) திருகோணமலை மாவட்டத்தின் எல்லைக் கிராமமாகிய தென்னவன் மரபு அடி கிராமத்தில் அடிப்படை வசதிகள் இல்லாது, சொந்த வீடுகள் இல்லாது வாழ்ந்து வந்த நான்கு குடும்பங்களுக்கான நிரந்தர வீடுகள் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டன.

திருகோணமலை நகரில் இருந்து 80 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள குறித்த கிராமத்தில் வசித்து வருகின்ற பொதுமக்கள் இடம்பெயர்ந்து மீளக் குடி



யமர்ந்த பின்னராக போதுமான அடிப்படை வசதிகள் கிடைக்கப் பெறாமல் தினமும் புறக்கணிக்கப்படும் நிலையில் தமது வாழ்க்கையை நடத்திவந்த இந்நிலையில் அம் மக்களுக்கான உதவித்திட்டமாக இது அமைந்துள்ளது என்பது விசேட அம்சமாகும்.

ஜீவ ஊற்று அன்பின் கரம் அமைப்பின் ஊடாக Pledge to Restore Foundation இன் நிதி அனுசரணையில் இவ்வீடுகள் நிருமாணிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப் பட்டுள்ளது. இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் குணநாதன், Pledge to Restore Foundation இன் அமைப்பின் ஸ்தாபகரும் தேசிய இயக்குனருமாகிய (அவுஸ்ரேலியா) திரு.உதயன் பத்மநாதன், ஜீவ ஊற்று அன்பின் கரங்கள் அமைப்பின் செயலாளர் திரு.ஜே.ரி. பிரவின், மற்றும் திருகோணமலை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் திரு.அத்தநாயக்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வீடுகளை பயனாளிகளுக்கு கையளித்தனர்.

## பாக்கு நீரிணையை நீந்திக்கடந்த இளைஞன் ஹஸன் ஸலாமா பேருவளை மக்களுடன் சந்திப்பு

(பேருவளை விசேட நிருபர்)

பாக்குநீரிணையை நீந்திக் கடந்து, சாதனை படைத்த 15 வயது சாதனைச் சிறுவன் ஹஸன் ஸலாமா ,நேற்று முன்தினம் (10) பேருவளை மக்களை சந்திப்பதற்காக பேருவளை வந்திருந்தார் .

பேருவளை , மஸ்ஸல சிமி ஹோல்டிங் காட்சியறை வளாகத்தில் மக்களை சந்தித்த இவருக்கு, நூற்றுக் கணக்கான இளைஞர்கள் ஒன்று கூடி வரவேற்பு அளித்ததோடு, அவருக்கு மலர் மாலைகள் அணிவித்து நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது, ஷஹ்மி சஹீதின் குடும்பத்தினர் சார்பாகவும், சாஜித் கியாஸ் மற்றும் ஸாபிர் கியாஸ் குடும்




பத்தினர் சார்பாகவும் நினைவுச் சின்னங்கள் வழங்கிவைக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஸலாமா,சிமி ஹோல்டிங் நிறுவன உரிமையாளர் இஜ்லான் யூசுஃப்புடன் ,பேருவளையில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்தலங்களான, மஸ்ஜிதுல் அப்ரார், கெச்சிமலை தர்கா மற்றும் ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம் ஆகியவற்றையும் பார்வையிடச் சென்றார்.

மேலும், தற்பொழுது சாதனை வீரனாக நாடே கொண்டாடும் சஹ்மி ஷஹீத்தின் குடும்பத்தினரை நேரில் சந்தித்த ஹஸன் ஸலாமா , சஹ்மியின் தாயாரிடம் வாழ்த்துகளையும் அன்பளிப்புக்களையும் பெற்றதோடு சஹ்மியை வாழ்த்திப் பிரார்த்தனை செய்தார். ஸலாமாவின் அடுத்தகட்ட சாதனை இலக்கான, இந்தியாவிற்கு நீந்திச் சென்று நீந்தியே திரும்பி வரும் முயற்சிக்கு ,முழு அனுசரணையினையும், சிமி ஹோல்டிங் நிறுவனம் வழங்குவதாக, இதன் போது அதன் உரிமையாளர் இஜ்லான் யூசுஃப் உறுதியளித்தமை குறிப்பிடத்தக்கது.



## மடவளை மதீனா தேசிய பாடசாலை பழைய மாணவர்...

# இலங்கை தேசிய அணியில் 213ஆவது ODI வீரராக மொஹமட் சிராஸ் தெரிவு

## பாடசாலை சமூகம் பாராட்டு


மொஹமட் சிராஸ்

மடவளை மதீனா தேசிய பாடசாலையின் பழைய மாணவரான முஹமட் சிராஸ் Makes His ODI DEBUT மட்டுமல்ல, இலங்கை கிரிக்கெட் அணியின் 213 வது ODI வீரராக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதை பெருமையாக பாடசாலை சமூகம் கொண்டாடுகின்றது.

மடவளையில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த கலகெதரயை சேர்ந்த முஹம்மது சஹாப்தீன் மற்றும் மடவளையை பூர்வீகமாக கொண்ட உம்மு சரீக்கா தம்பதிகளின் மகனான சிராஸ் முஹம்மது மடவளை மதீனா தேசிய பாடசாலையில் கல்வி கற்றவராவார்.

முஹமட் சிராஸ் 213 வது ஒருநாள் சர்வதேச விளையாட்டு வீரராக உள்வாங்கப்பட்டு 02.08.2024 இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் சர்வதேச போட்டியில் பிரதான வேகப்பந்து வீச்சாளராக களமிறங்கி மடவளைக்கும் இலங்கை மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளார். அவரைப் பாராட்டி மடவளை மதீனா தேசிய பாடசாலை சமூகம் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளது.




கிரிக்கெட் விளையாட்டில் இவருடைய ஆற்றலைக்கண்ட மடவளை மதீனாவின் கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர்களான முஹமட் நஜ்மீ, முஹமட் ரிகாஸ் ஆகிய இருவரும் 2012 பிக் மெச்சில் சிறந்த விளையாட்டு வீரராக இவரை வெளிக்கொண்டு வந்தனர். அதனைத்தொடர்ந்து சிராஸின் அயராத உழைப்பு மற்றும் சக நண்பர்களின் ஊக்குவிப்பு, உந்து சக்தி இவர் பாடசாலை கிரிக்கெட் வீரர்களின் தரப்படுத்தலில் முதல் இடத்தைப் பிடித்தார்.

முஹமட் சிராஸ் மதீனா உருவாக்கிய தேசிய விளையாட்டு வீரர்களில் ஒருவர். இவர் மடவளை மதீனியனின் பெயரை தேசிய ரீதியாகவும் சர்வதேச மட்டத்திலும் புகழ் ஓங்கச் செய்தவர். இவருடைய இந்த கிரிக்கெட் துறை மிகவும் சிறப்பாக அமைய மதீனா தேசிய பாடசாலைச் சமூகம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மிகவும் பெருமிதம் அடைகின்றது என்று மடவளை மதீனா தேசிய பாடசாலையின் அதிபர் அஸனார் ரஹீம் தெரிவித்தார்.




அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், இவர் பாடசாலையில் கல்வி பயிலும் போது அவர் இணைப்பாட விதானத்தில் மிக மும்முரமாக ஈடுபாடு காட்டி வந்தார். அவருடைய கல்விப் பெறுபேறு கூட நல்ல வகையில் அமைந்ததோடு அவர் கிரிக்கெட் துறையிலும் சிறந்த முறையில் பிரகாசித்தார். அவர் ஆறாம் ஆண்டு முதல் க. பொ. த உயர் தரம் வரையிலும் மடவளை மதீனா தேசிய பாடசாலையில் கல்வி கற்றவர்.

குறிப்பாக கிரிக்கெட் விளையாட்டுத் துறையில் தேசிய மட்டத்தில் ஒரு விளையாட்டு வீரரை உருவாக்குவது என்பது ஒரு அசாத்தியமான விடயம். அதனையும் தாண்டி கிரிக்கெட் விளையாட்டு வீரர் ஒருவர் எமது பாடசாலையில் உருவாக்கப்பட்டு இருப்பது மகத்தான செய்தியாகும். இதில் விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள்தான் உள்ளனர். இதன் மூலம் மடவளை மதீனா தேசிய பாடசாலை நல்லதொரு மைல் கல்லாக அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, 'மீண்டும் பாடசாலை செல்வோம்' என்ற நிகழ்வுக்கு வருகை தந்த அனைவருக்கும் பாடசாலை சமூகம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துவதற்கு மூலகர்த்தாவாக இருந்த பாடசாலை பிரதி அதிபர், உப அதிபர்கள், ஆசிரியர் குழாம், பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர் சங்கம், பழைய மாணவியர் சங்கம் ஆகிய அனைவருக்கும் எனது உள்ளார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு கடல் கடந்து எத்தனையோ தொலை தூர மைல்களுக்கப்பால் வெளிநாடுகளில் இருந்தும் மற்றும் உள்நாடுகளில் இருந்தும் வருகை தந்த அத்தனை நல்லுள்ளங்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**பிரதி அதிபர் எஸ். ஏ. சி.எம். ஜிப்ரீல் தனது வாழ்த்துச் செய்தியில்,**

இன்று இலங்கையின் கிரிக்கெட் துறையில் முஹமட் சிராஸ் மக்களின் மனங்களிலெல்லாம் நிறைந்த ஒரு விளையாட்டு வீரராக மதிக்கப்படுகிறார். இவர் எமது பாடசாலைக்கு பெரும் புகழை ஈட்டித் தந்துள்ளார். முஹமட் சிராஸ் எதிர்காலத்தில் மென்மேலும் இத் துறையில் பிரகாசிக்க பாடசாலை சமூகம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாக என்று பிரதி அதிபர் ஜிப்ரீல் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், முஹமட் சிராஸுடைய இரு பயிற்றுவிப்பாளர்கள் இருக்கின்றார்கள். ஒன்று நஜ்மி மற்றையது ரிகாஸ் மிக முக்கியமானவர்கள் ஆவர். சிராஸ் தற்போது உச்ச மட்டத்தை அடைந்துள்ளார். அவர் கற்ற காலத்தில் கடமையாற்றிய அதிபர், கிரிக்கெட் விளையாட்டுத் துறை பயிற்றுவிப்பாளர்கள் முக்கியமானவர்கள். இந்தளவுக்கு பாடசாலையின் பெயருக்கு பெருமை சேர்த்துத் தந்த சிராஸுக்கு அதிபர் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் மாணவிகள் சங்கம் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது பாடசாலையில் 'மீண்டும் பாடசாலை செல்வோம்' என்ற நிகழ்வு ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக அமைந்துள்ளது. பழைய மாணவர்கள் ஆண்கள் பிரிவில் இருந்து 36 குழுக்களும், பழைய மாணவிகள் பெண்கள் பிரிவில் இருந்து 38 குழுக்களும் பங்கேற்றனர். மொத்தமாக 74 குழுக்கள் ஒன்று சேர்ந்துள்ளனர். இப்படியான நிகழ்வு இடம்பெற்றது இதுவே முதற் தடவையாகும். இதில் விசேட அம்சமாக பெரு எண்ணிக்கையிலான ஆசிரியர்கள் கலந்து கொண்டமை இப் பாடசாலையின் வெற்றிக்கு காரணமாக அமைந்துள்ளது.

இதற்கு முற்று முழுதாகப் பாடுபட்டவர்கள் என்ற வகையில் அதிபர், பிரதி அதிபர் ஆசிரியர் குழாம், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு, பாடசாலை பழைய மாணவர் மாணவிகள் சங்கங்கள் ஆகும். இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இன்று பல குழுக்கள் பல அமைப்புக்கள் வாரியாக பாடசாலையின் அபிவிருத்தி சம்பந்தமாகவும், பாடசாலையினுடைய அடுத்த கட்ட செயற்பாடுகள் பற்றியும் பேசி வருகின்றனர். இம் மாதிரியான நிகழ்ச்சித் திட்டம் ஏனைய பாடசாலைக்கு முன்மாதிரியாக அமையும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**கனடாவில் கிரிக்கட் விளையாட்டில் ஈடுபடுகின்ற ஸமீல் ஸாஹீர் கருத்தினைப் பகிர்ந்து கொண்ட போது,**

1983 களில் பாரூக் என்பவர் அதிபராகக் கடமையாற்றினார். அவர் கிரிக்கெட் இலங்கையின் தேசிய விளையாட்டு இல்லை என்ற போதிலும் மிக அதிகப்படியான இளம் சந்ததியினரை ஆக்கிரமித்த ஒரே விளையாட்டு அதுதான். உலகக் கிண்ண ஆட்டம் என்றதும் தொலைக் காட்சிக்கு முன்னால் குவிந்திருக்கும் மக்கள் தொகை இந்த ஆக்கிரமிப்பு ஓர் உதாரணம் எனலாம். அப்பொழுது எங்கள் பாடசாலையின் பயிற்றுவிப்பாளராக ஜரூக் என்பவர் இருந்தார். இவர் தான் எமது பாடசாலையின் முதலாவது கிரிக்கெட் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர். அவருக்குத் துணையாக யாசிர், ரிபாத் ஆகியோர் இருந்தனர். ஜரூக் சேர் ஒரு வாரத்திற்கு ஒரு தடவை வந்தார் எனில் தினசரி யாசிர், ரிபாத் ஆகிய இருவரும்தான் வந்து தொடர்ச்சியாக பயிற்றுவிப்பார்கள்.

13 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் அணியில் விளையாடினேன். எங்கள் வீட்டிலும் நிறைய இவ்விளையாட்டு முயற்சிகளுக்கு ஆதரவு தந்தார்கள். மடவளையில் டெனில் பந்து விளையாடக் கூடிய குழுவினர்கள் இருந்தார்கள். இதில் விளையாடியவர்கள்தான் ரிபாத், ஜரூக் போன்றவர்கள். அவர்கள் வழியைக் காட்டி பயிற்றுவித்தார்கள். நாங்கள் முதன் முதலில் பாடசாலை மட்டங்களுக்கிடையே எஸ்ரா மாஜரீனால் நடத்தப்பட்ட கிண்ணச் சுற்றுப் போட்டியில் விளையாடினோம். அதில் எதிர் அணியுடன் விளையாடி கால் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டு இறுதிப் போட்டியில் பங்கேற்று தோல்வியுற்றோம். இதில் சிஹான் பழீல் என்பவர் ஒரு சாதனை ஒன்றை நிலைநாட்டினார். இது வரைக்கும் அந்தச் சாதனை உடைக்கப்படவில்லை. ஒரு இனிங்சில் நான்கு ஓட்டங்களைக் கொடுத்து பத்து விக்கட்டுக்களை எடுத்தார். அவ்வளவு திறமைமிக்க விளையாட்டு வீரர்கள் இப்பாடசாலையில் இருந்தார்கள்.

இதன் மூலம் மதீனாவின் புகழ் மேலோங்கச் செய்தன. 1984 இல் விளையாடினோம். அதனைத் தொடர்ந்து 1985 இல் 15 வயதுக்கு உட்ட பிரிவில் விளையாடும் போது இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டோம். எதிரணியான ரோயல் கல்லூரியுடன் தோல்வியுற்றோம். முதலாவது பாடசாலை மட்டங்களுக்கிடையே எஸ்ரா மாஜரினால் நடத்தப்பட்ட கிண்ணச் சுற்றுப் போட்டியில் விளையாடினோம்.

இந்த விளையாட்டுக்கு எனது தந்தை பெரும் பக்கத் துணையாக இருந்தார். அவர் இப்பாடசாலையின் பகுதித் தலைமையாசிரியராகக் கடமையாற்றினார். அவர் சாஹீர். அவர் மதீனா பாடசாலையின் ஆரம்பப் பிரிவின் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். எனது தந்தையும் உதவி செய்தமையினால் நானும் ஆர்வத்துடன் விளையாடினேன். ஏனென்றால் புதிய விளையாட்டு புதிய பாடசாலைகளின் அறிமுகம். சவால்கள் என்கின்ற அனுபவத்தைப் பெற்றுக் கொண்டோம். மடவளை மதீனாவுக்கு நல்ல கிரிக்கெட் அணியினர் இருந்தனர். எங்கள் பாடசாலையின் பெயரும் எங்களுடைய பெயர்களும் பத்திரிகைகளில் வரத் தொடங்கின. அன்று சிங்கள, தமிழ் ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்த பிரசுரங்கள் இன்னும் ஞாபகார்த்தமாக வைத்திருக்கின்றேன்.

நானும் தற்போது லண்டனில் உள்ள நண்பர் எம். எப் . எம். ரிபானும் நன்கு விளையாடுவோம். ஆனால் அவருடைய துடுப்பாட்டத்தை பாகிஸ்தான் நாட்டு கிரிக்கெட் விளையாட்டு வீரர் இன்சமாமுல் ஹக் என்று வியந்து பாராட்டுவார்கள். அவருடைய துடுப்பாட்டத்தைப் பார்க்க கண்டியில் இருந்து நிறையப் பேர் வருவார்கள். அவருடைய துடுப்பாட்டம் மிகவும் அழகானவை. இவர் இன்னனும் இங்கிலாந்து நாட்டில் விளையாடிக் கொண்டுதான் இருக்கிறார். அவர் அங்கு 50 வயதுக்கு உட்பட்டவர் பிரிவிலே விளையாட்டுக் கழகங்களுடன் இணைந்து விளையாடி 100 ஓட்டங்களை குவித்துக் கொண்டுதான் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ஈஸ்ட் லண்டனில் எம். எப். எம். ரிபான் என்று சொன்னால் எல்லோருக்கும் நன்கு தெரியும்.

நாங்கள் வயதுக்குச் செல்லும் போது 11 வயதுக்கு உட்பட்ட பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. எப்பொழுதும் பெரிய பாடசாலைகள் ஏ கிரிக்கெட் அணியுடனே மோதுவதற்கு விரும்புவார்கள். அவர்கள் முழுமையான வீரர்களைத் தரமாட்டார்கள். காரணம் அவர்களுக்கு பயம். நாங்கள் எல்லா அணியினருடனும் போட்டியிட்டு வெற்றி பெற்றோம். ரிபான் ஏழு கிரிக்கெட் போட்டிகளில் 908 ஓட்டங்களைக் குவித்தார். நான் 65 விக்கட்டுக்களை வீழ்த்தி 700 ஓட்டங்களை எடுத்தேன். பாட்டா கிரிக்கெட் சுற்றுப் போட்டியிலேயே இந்த வெற்றி இலக்கை அடைந்தோம். அதில் நான் மூன்றாவது சாதனை வீரராகத் தெரிவு செய்யப்பட்டேன்.

இதன்போது, எங்கள் இருவரையும் மாகாண மட்டத்திலும் விளையாடுவதற்கு தெரிவு செய்தார்கள். டெஸ்ட் விளையாடக் கூடிய வீரர்களுடன் நாங்களும் இணைந்து கொண்டோம். மத்திய மாகாண கிரிக்கெட் அணி என்பது சாதாரண விளையாட்டு அணியல்ல. முரளிதரன். வியல் விஜயதுங்க, புபுத் தசாநாயக, ரொசான் மஹாநாம விளையாடிய அணியாகும். அந்தளவுக்கு நாங்கள் ஒரு முன்னேற்றப் பாதையில் சென்றோம்.

மதீனா என்றால் கிரிக்கெட் ஒரு முக்கியமான இடத்தைப் பிடித்திருந்தது. எங்களுடைய இரு வருடங்களுக்குப் பின்னர் கிரிக்கெட் அப்படியே விடுபட்டது. ஜரூக் ஆசிரியர் இருக்கும் போது கண்டி சி. சி இல் சேர்ந்து விளையாடினோம். மத்திய மாகாண அணியில் விளையாடினோம். ரிபான், நானும் இங்கிலாந்து சுற்றுப் பயணத்திலும் சேர்ந்து விளையாடினோம். இலங்கை தேசிய அணியில் சேர்ந்து கொள்ள வாய்ப்புக் கிட்டவில்லை. 1996 களில் கிரிக்கெட் அணியில் சேர்ந்து கொள்வதில் போட்டித் தன்மை அதிகம் இருந்தது. அப்போது எனக்கு ஒரு விபத்து ஏற்பட்டது. அதற்குப் பிறகு கிரிக்கெட் விளையாட்டுக்கு ஓய்வு கொடுத்து விட்டு சவூதி அரேபியா நாட்டுக்குச் சென்று விட்டேன். பின்பு 2000 களில் கனடா சென்றேன். அங்கு சென்றவுடன் மீளவும் கிரிக்கெட் விளையாடத் தொடங்கி 2010 ஆம் ஆண்டில் கனடா நாட்டிலும் அணியுடன் சேர்ந்து விளையாடத் தொடங்கினேன். எங்கள் பாடசாலையில் இருந்து முதலாவதாக உலகிலுள்ள சர்வதேச கிரிக்கெட் அணியில் சேர்ந்து விளையாடினேன் என்ற தகுதி எனக்கு இருக்கிறது. என்னுடைய விடா முயற்சியின் காரணமாக இந்த கனடா அணியில் சேர்ந்து விளையாடச் சந்தர்ப்பம் கிடைத்தது. நிறைய திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்கள் இருந்த போதிலும் மடவளை மதீனாவின் கிரிக்கெட் வளர்ச்சி தேக்கம் அடைந்தது. அது என்னவென்று தெரியவில்லை. அது எங்களுக்கு கவலையைத் தோற்று வித்தது

அதன் பின்னர் நானும் ரிபானும் பேசி முயற்சிகளில் ஈடுபட்டோம். சிராஸின் விடா முயற்சிதான் இன்று இலங்கை அணியில் இணைந்து சிறந்த பந்து வீச்சாளராகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார். சிராஸ் விளையாடும் போது நான்கு சிறந்த வீரர்கள் அவருடன் இருந்தார்கள். அவர்கள் சில கழகங்களுடன் சேர்ந்து விளையாடினார்கள். பின்னர் நின்று விட்டார்கள். ஆனால் சிராஸ் பாடசாலை மாணவர்களுடன் விளையாடினார். அவர் விளையாட்டை விட வில்லை. அவர் அயராது விளையாடிக் கொண்டிருந்தார். எம்மிடம் வந்து ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் பெற்றுக் கொள்வார்.

அப்பொழுது நான் உங்களிடம் நல்ல திறமை இருக்கிறது. நம்பிக்கையுடன் தொடர்ந்து விளையாடுங்கள். நான் கனடாவில் விளையாட இணைந்து கொள்ளும் போது எனக்கு வயது 36 ஆகும். எப்போது சரி உங்களுக்கும் இந்த சந்தர்ப்பம் கிடைக்கும் என்றேன். இப்போது அந்த சந்தர்ப்பம் சிராஸ் அவர்களுக்கு கிடைத்திருப்பது எங்களுக்கு பெருமகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதன் பின்பு மதீனா தேசிய பாடசாலையில் ஆரம்பத்தில் விளையாடிய அனைவரும் ஒன்று சேர்ந்து குழுவொன்றை தாபித்து நாங்கள் கிரிக்கெட் விளையாட்டுத் துறையைப் பாரம் எடுக்கப் போகின்றோம். அதற்கு தேவையான நிதி உதவிகளைச் செய்யத் தயாராக இருக்கின்றோம். எனவே அதற்கு எவ்வளவு தேவையென்பதை கூறும்படி வேண்டுகோள் விடுத்தோம். பாடசாலைகளைப் பொறுத்த வரையில் பயிற்று விப்பாளர்களுக்கு நிதி உதவி வழங்குவதில் சிரமங்கள் இருந்தன. ஆதலால் அவற்றைக் கருத்திற் கொண்டு நாங்கள் இயங்க ஆரம்பித்தோம். அங்கு இரு பயிற்று விப்பாளர்கள் இருக்கிறார்கள். நஜ்மீ அவர்களுக்கு சம்பளம் வழங்குவதும் நாங்கள்தான். வேறு வெளியாட்கள் தொடர்புகளின்றி அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். அதிபர் எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறார். இது ஆரம்பித்து ஒரு வருடம். பயிற்சியில் ஈடுபடும் தருணத்தில் டி சேர்ட் வழங்குதல். போக்குவரத்துத் தேவை, சாப்பாடு அனைத்து வகையிலான விடயங்களுக்கும் நாங்கள் பொறுப்பேற்று செயற்படுத்தி வருகின்றோம். மடவளை மதீனியன் கல்லூரியின் கிரிக்கெட் அணியில் விளையாடி பழைய மாணவர்களின் செலவின் மூலம் இன்று கிரிக்கெட் விளையாட்டுத் துறை கட்டியெழுப்பப்பட்டு வருகின்றன. இந்தக் குழுவில் 30 பழைய மாணவர்கள் இருக்கின்றோம். கடந்த வருடம் கிரிக்கெட் செலவு பெருந் தொகை போகும் என்றார். 13,14, 15, 16, 17 ஆகிய பிரிவில் விளையாடுகின்ற மாணவர்களின் திறமை மேம்படுத்துவதற்கான பங்களிப்பை நாங்கள் மேற் கொண்டு வருகின்றோம். நாங்கள் ஐந்து வருடத்தில் ஓர் அறுவடையைக் காண்பிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் பாடசாலை சமூகத்திடம் முன் வைத்திருக்கின்றோம்.

ஒரு தடவை இலங்கையில் கண்டியில் 21 வயதுப் பிரிவில் விளையாடினேன். அந்நேரம் மஹேல ஜயவர்தனவும் விளையாடினார். இருப்பினும் கண்டியில் விளையாடும் போது கிரிக்கெட் கழகத்தில் பல தடைகளையும் தாண்ட வேண்டும். அதை நாங்கள் எல்லோரும் அனுபவித்தோம். சிராஸ் கூட அதை அனுபவித்திருக்கலாம் எனக் கருதுகின்றேன். சிராஸ் பல படித்தரங்களைத் தாண்டித்தான் சென்று இருப்பார். அது இலகுவான காரியம் அல்ல.

புபுது தசாநாயக தற்போது கனடாவில் பயிற்றுவிப்பாளராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். அங்கு அவருடன் சேர்ந்து விளையாடுகின்றேன்.

மீண்டும் பாடசாலை செல்வோம் என்ற நிகழ்ச்சித் திட்டம் மிகவும் வரவேற்கத் தக்க விடயம் ஆகும். இதன் மூலம் எமது பாடசாலை கட்டியெழுப்படுகிறது . இப்பாடசாலையில் கல்வி கற்ற நாங்கள் சுமார் 32 வருடங்களுக்குப் பிறகு எத்தனை பழைய பாடசாலை மாணவர் நண்பர்களைச் சந்திப்பதற்கான அரிய வாய்ப்பாக அமைந்தன. இது ஒவ்வொரு பழைய மாணவர்களுடைய வாழ்க்கையில் ஒரு தடவை கிடைத்த சந்;தர்ப்பமாகவே பார்க்கின்றேன். இப்படியான சந்தர்ப்பம் இனி கிடைக்குமோ தெரியாது. அதே மாதரி எங்களுக்கு கற்பித்த ஆசிரியர்களை காணக் கிடைத்தமையாகும். இவ்வளவு சனக் கூட்டம் எமது பாடசாலைக்கு உதவி செய்ய தயாராக உள்ளார்கள் என்பதையும் அவதானித்தோம். மீண்டும் பாடசாலை செல்வோம் என்ற வேலைத் திட்டமானது இன்று எல்லோரையும் ஏதாவது பாடசாலைக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்யுள்ளது. இந்த உதவியை எப்படிச் செய்வது என்ற ஆவலுடன் இருந்தவர்களுக்கு நல்லதொரு வழிகாட்டல் நிகழ்ச்சியாகும். இதில் கலந்து கொண்ட பழைய மாணவர் மாணவிகள் தங்களுடைய நண்பர்கள் செய்யும் உதவிகளைக் கண்டு தாமும் இயன்ற உதவிகளைச் செய்வதற்கு முன்வந்துள்ளார்கள். இது மிகவும் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சி என்றுதான் நான் கூறுவேன்.

**சமூகச் செயற்பாட்டாளர் பௌஸ் ஏ. காதர்,**

மடவளை மதீனாவின் கிரிக்கெட் வரலாற்றினை எடுத்துக் கொண்டால் நாம் இன்று உச்சத்தில் இருக்கின்றோம் என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் முஹமட் சிராஸ் இலங்கை கிரிக்கெட் அணியில் இணைத்துக் கொண்டது மகத்தானது. அது அவரதுகடும் உழைப்புக்கு கிடைத்த பிரதிபலன் என்று சமூகச் செயற்பாட்டாளர் பௌஸ் ஏ. காதர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்;

இவர் அனைத்து சர்வதேச போட்டிகளிலும் கலந்து கொண்டு தன் திறமையை வெளிப்படுத்த அல்லாஹ் நல்லருள் புரியவேண்டும் என அவர் பிரார்த்திப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# தமிழ் மக்களின் பிரதிநிதியாக பாராளுமன்றில் 30 வருடங்கள்

## 30 மாலைகள் அணிவித்து நெடுந்தீவு மக்களால் அமைச்சர் டக்ளஸ் கௌரவிப்பு

தமிழ் மக்களின் பிரதிநிதியாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்து 30 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளமையை முன்னிட்டு, நெடுந்தீவு மக்களால் 30 மாலைகள் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

'நெடுவூர்த் திருவிழாவின்' இறுதி நிகழ்வில், பிரதம விருந்தினராக கலந்துக்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு, நெடுந்தீவு வாழ் மக்கள் நடனமாடி, மாலை அணிவித்து மகத்தான வரவேற்பளித்தனர்.

அதனை தொடர்ந்து, தோற்கடிக்கப்பட முடியாத தமி்ழ் மக்களின் பிரதிநிதியாக, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்து 30 ஆண்டுகள் நிறைவை நினைவு கூர்ந்த நெடுந்தீவு மக்கள், அதனை கௌரவிக்கும் முகமாக அவருக்கு 30 மாலைகளை அணிவித்ததுடன் நினைவு பரிசில் ஒன்றையும் வழங்கினர்.

இதன்போது உரையாற்றிய ஈழ





மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா,

நெடுந்தீவு பிரதேசமானது எனது உயிருடனும் உணர்வுகளுடனும் பின்னிப்பிணைந்த ஒன்று. நாட்டின் ஏனைய பிரதேசங்களை விட அதி முக்கியமான பிரதேசமாகும். ஏனெனில் இங்குள்ள மக்கள் ஒவ்வொருவரது உணர்வுகளிலும் எமது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியும் தன் சேவைகளும் பின்னிப் பிணைந்துள்ளது. 1990 ஆம் ஆண்டு ஆரம்பத்தில், பாராளுமன்ற ஜனநாயகத்தை பயன்படுத்தி, தேசிய நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதன் மூலம், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வை காண்பதற்கான பயணத்தை நாம் இங்கிருந்தே ஆரம்பித்தோம்.

அதன் ஓர் அங்கமாகவே, நாம் இந்த நெடுந்தீவு மண்ணில் மக்களின் கோரிக்கையுடன் கால்பதித்து மக்களுக்கான சேவைகளை முன்னெடுத்திருந்தோம்.

அதேநேரம், ஏறத்தாழ மூன்று தசாப்தங்களாக தமிழ் மக்களினால் தொடர்ச்சியாக தெரிவு செய்யப்படுகின்ற மக்கள் பிரதிநிதியாக நான் இருக்கின்றேன். அதற்கு இந்த தீவக மக்களின் பங்களிப்பு அதிகமானதாக இருந்து வருகின்றது.

அதனடிப்படையில், இந்த மக்களின் கனவுகள் நிச்சயம் மெய்படும். அதற்காக நான் என்றும் உறுதுணையாக இருப்பேன்.

எம்மால் வளர்க்கப்பட்டு வருகின்ற தேசிய நல்லிணக்கம் காரணமாக, பல பிரச்சினைகளுக்கு தீர்வுகளை காண முடிந்தது. அதே போன்று, எமது மக்களின் வாழ்வாதார எதிர்பார்ப்புக்களை நிவர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பங்களை நாம் உருவாக்கிக் கொள்வதும் அவசியமாகும்.

எமது மக்கள் போதிய அரசியல் பலத்தை எமக்கு வழங்குவார்களாயின், அவர்களின் அபிவிருத்தி மட்டுமன்றி, அரசியல் அபிலாசைகளையும் எம்மால் பெற்றுத்தர முடியும். இதனை எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

# வடக்கின் உதயம்

## பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு தராதரப் பத்திரம் வழங்கும் நிகழ்வு



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயின்று வெற்றிகரமாக கற்கை நெறியை பூர்த்திசெய்த 237 ஆசிரியர்களுக்கான பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப் பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (10) நடைபெற்றது.

இந்நிகழ்வு கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இரண்டு அமர்வுகளாக நடைபெற்றது.

இந்நிகழ்வில், மத்திய கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் தி. யோன் குயின்ரஸ் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

அத்துடன், முன்னாள் அதிபர்களான வே.கா.கணபதிப்பிள்ளை வீ. கருணலிங்கம், யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக கற்கைகள் பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா உள்ளிட்ட பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிறுவர் துஷ்பிரயோகம், வீட்டு வன்முறை தொடர்பாக பாடசாலை மாணவர்களின் பெற்றோருக்கு விழிப்புணர்வு





சாவகச்சேரி விசேட நிருபர்

கொடிகாமம் போக்கட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுடைய பெற்றோருக்கு அண்மையில் சிறுவர் துஷ்பிரயோகம் வீட்டு வன்முறை மற்றும் வீதி ஒழுங்கு தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்வொன்று நடத்தப்பட்டிருந்தது.

பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இந்த விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்பட்டிருந்தது.

இந் நிகழ்வில், கொடிகாமம் பொலிஸ் நிலைய உப பொறுப்பதிகாரி பிரபாகரன் மற்றும் கொடிகாமம் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பதிகாரி தர்மரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டு பெற்றோருக்கான விழிப்புணர்வை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதக்கது.

## மடு அன்னையின் ஆசி பெற அழைப்பு

தலைமன்னார் விஷேட நிருபர்

மன்னார், மருதமடு அன்னையின் பெருவிழாவில், அச்சமின்றி அனைவரையும் கலந்துகொண்டு, மடு அன்னையின் ஆசியை பெற்றுச் செல்லுமாறு, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளார் அழைப்பு விடுத்துள்ளார்.

மன்னார் மறைமாவட்ட மருதமடு அன்னையின் ஆவணி மாதம் 15 ஆம் திகதி பெருவிழாவை முன்னிட்டு, வழிபாட்டு ஒழுங்குகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, கடந்த 6 ஆம் திகதி, மடு அன்னையின் ஆவணி மாத பெருவிழாவை கொடியேற்றி திருவிழாவுக்கான ஆயத்த நாளை ஆரம்பித்து வைத்தார். 14 ஆம் திகதி காலை திருப்பலிகளைத் தொடர்ந்து மாலையில் வெஸ்ப்பர்ஸ் ஆராதனை திருச் செபமாலையுடன் ஆரம்பமாகும்.



இதனைத் தொடர்ந்து சிறப்பான முறையில் திருவிழாவுக்கு வருகை தரும் ஆயர்களுடன் இணைந்து நூற்றுக்கணக்கான குருக்களும் துறவிகளும் இலட்சக்கணக்கான மக்களும் வெஸ்ப்பர்ஸ் ஆராதனையிலும் திருவிழாத் திருப்பலியிலும் கலந்துகொள்ளவுள்ளனர்.

விஷேடமாக 15 ஆம் திகதி காலை 5 மணிக்கு முதலாவது திருப்பலியும் காலை 6.15 மணிக்கு திருவிழாத் திருப்பலி சிலாபம் மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய டொன் விமல்சிறி ஜெயசூரிய ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்படும். இத் திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து மடு அன்னையின் திருச்சுரூப சுற்று பிரகாரமும் திருச்சுரூப ஆசீரும் இடம்பெறும்.

இதேவேளை, இறுதி தினம் திருவிழாவில் 10 இலட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர், இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் எமது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார். இவருடன் இணைந்து திணைக்கள அதிகாரிகளும் செயற்பட்டு வருகின்றனர். மக்களுக்கான சகலவித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அச்சமின்றி மடு அன்னையின் திருப்பதிக்கு வருகை தந்து, அன்னையின் ஆசி பெற்றுச் செல்லலாம் என அனைவரையும் அழைத்து நிற்பதாக, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு? தேசிய சபை கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில், யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பாக, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் இளைஞர்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் (10) இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் கண்டியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறப்பு விருந்தினராக பங்கேற்றிருந்ததுடன், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்த, பாராளுமன்ற உறுப்பினர்களான மருதபாண்டி ராமேஸ்வரன், அனுராத ஜெயரத்ன ஆகியோரும் கலந்துக் கொண்டனர்.



மேலும், முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, இ.தொ.கா பிரதி பொதுச்செயலாளர் செல்லமுத்து, கண்டி மாவட்ட அரசியல் பிரமுகர்கள் உட்பட பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, கருத்து தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான்,

நான் அமைச்சரவை அமைச்சராகப் பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியாகின்றது. கடந்த வருடத்தில் கண்டி மாவட்டத்தில் மாத்திரம் தோட்ட உட்கட்டமைப்புக்காக 160 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது முன்னெப்போதும் இல்லாத கனிசமான அளவாகவும்.

இந்திய அரசின் ஆதரவுடன், கண்டி மற்றும் பதுளையில் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையங்களை நிறுவுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. மலைநாட்டில் சுமார் ஒரு மில்லியன் மக்கள் தொகை கொண்டிருந்தாலும், பெருந்தோட்டத்துறையில் மட்டும் 115,000 பேர் பணியாற்றுகின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வைக் கோரி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல்வேறு நடைமுறைகளை முன்னெடுத்துள்ளார். மலையகத்தின் அபிவிருத்தி மற்றும் சம்பள பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு, பல தோட்டக் கம்பனிகள் ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ளன. அதன்படி, பெருந்தோட்டக் கம்பனிகளுடன் எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை தொழில் அமைச்சில் சந்திப்பொன்று நடைபெறவுள்ளது. இச் சந்திப்பில் தீர்க்கமான சாதக தன்மை வாய்ந்த பதில் கிடைக்கும் என்ற நம்பிக்கை தமக்குள்ளதாக அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை, எதிர்வரும் (18) ஆம் திகதி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில், கொட்டக்கலை சி.எல்.எப் கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பாக, இறுதி தீர்மானம் எடுக்கப்படும் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஆ.ரமேஸ்

# மலைச்சாரல்

## தீடீர் சோதனையில் 15 பேர் கைது!

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

பலாங்கொடையில், பொலிஸாரின் திடீர் சுற்றி வளைப்பு நடவடிக்கையின்போது நேற்று முன்தினம் (10) 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் இரண்டு பேர் நீதிமன்றத்தால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு தலைமறைவாகி வந்தவர்கள் எனவும், ஏனையவர்களில் பலர் இப் பிரதேசத்தில் இடம்பெற்று வரும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையர்கள் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களில் அதிகமானர்கள் இளம் வயதுடையவர்கள் என தெரிவிக்கும் பொலிஸார் சந்தேகநபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தெஹியோவிற்றயில் தரம் – 5 புலமைப்பரிசில் கருத்தரங்கு

தர்ம சாஸ்தா சேவா சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான கருத்தரங்கு எதிர்வரும் 24ஆம் திகதி, தெஹியோவிற்ற தமிழ் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலவசமாக நடத்தப்படும் இந்த கருத்தரங்கில் பங்கு பற்றுகின்றவர்களுக்கு காலை மற்றும் பகல் உணவுகளும் கருத்தரங்குக்கு தேவையான கற்றல் உபகரணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படும். அத்துடன், இக் கருத்தரங்கில் பங்குபற்றுபவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும். இதேவேளை, இங்கு நடத்தப்படும் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெறும் மாணவர்கள் பதக்கம் அணிவிக்கப்படவுள்ளனர். இலங்கையின் முன்னணி ஆசிரியரான பேரின்பராஜா, வளவாளராக கலந்து கொண்டு இக் கருத்தரங்கை நடத்துவார் என ஸ்ரீ தர்ம சாஸ்தா சேவா சங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மலை ஏறச் சென்ற குடும்பஸ்தர் பாறாங்கல் விழுந்ததில் மரணம்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

ஹெம்மாதகம கம்பளை வீதியில், அம்புலுவாவ மலை ஏறச்சென்ற குடும்பஸ்த்தர் ஒருவர் மீது பாறாங்கல் ஒன்று விழுந்ததில் அவர் படுகாயமடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார். குறித்த சம்பவம் நேற்று (11) இடம்பெற்றுள்ளது.

தெஹியோவிட்ட முருத்தெட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த இவர் தனது நண்பர்கள் நால்வருடன், அம்புலுவாவ மலைக்கு சென்றுள்ளார்.

இவர்கள், பாதுகாப்பான பாதையில் அன்றி, ஆபத்தான வழியொன்றினூடாக பயணித்துள்ள நிலையில், இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் 37 வயதுடைய தமிந்த சமரசிங்க என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.





மக்களை விழிப்பூட்டும் சிவில் சமூக அமைப்புகளுக்கான தெளிவூட்டல் நிகழ்ச்சித் திட்டமொன்று கண்டி Kandian Arts ஹோட்டலில் நேற்று முன்தினம் (10) நடைபெற்றது. கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில், USAIDஅனுசரணையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கலந்துகொண்ட சிவில் சமூக பிரதிநிதிகளை படங்களில் காணலாம். (புசல்லாவை தினகரன் நிருபர்)

## தேன் சேகரிக்கச் சென்ற நபர் யானை தாக்கி பலி

உடவளவ பாதுகாப்பு வன சரணாலயத்தில், தேன் சேகரிக்கச் சென்ற நால்வரில் ஒருவர் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ள சம்பவமொன்று நேற்று (11) பதிவாகியுள்ளது. ஹம்பேகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த நால்வரும், சட்ட விரோதமாக உடவளவ வனத்துக்குள் தேன் சேகரிக்கச் சென்றபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, உயிரிழந்த நபரின் உடலை, வனப்பாதுகாப்பு அதிகாரிகள், பொலிஸாரின் உதவியுடன் மீட்டு வந்துள்ளனர். அத்துடன், ஏனைய மூவரும் வனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கண்டி வாழ் தமிழ் மக்களின்

# உரிமைகள், அபிவிருத்திகள் தொடர்பாக ஜனாதிபதி கவனம் செலுத்தி வருகின்றார்

## பாரத் அருள்சாமி தெரிவிப்பு

ஹற்றன் சுழற்சி நிருபர்

கண்டி மாவட்டத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளையும், அபிவிருத்தி தேவைப்பாடுகளையும் நிச்சயம் நாம் நிறைவேற்றுவோம் என, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், பெருந்தோட்ட மனிதவள நிறுவனத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார். மாறாக தேர்தல் காலங்களில் மட்டும் புராணம் பாடிவிட்டு காணாமல்போகும் அரசியல்வாதிகளைப் போன்று எமது செயற்பாடுகள் அமையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி 'கரலிய' அரங்கத்தில் நேற்று முன்தினம் (10) நடைபெற்ற தோட்ட தொழிற்சங்கங்களின் இளம் தலைவர்களின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர்,



நெருக்கடியான கால கட்டத்தில் சவாலை ஏற்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் உட்பட இளம் அரசியல் தலைவர்களுடன் இணைந்து ஜனாதிபதி இந் நாட்டை கட்டியெழுப்பியுள்ளார். எம்மால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளையும் ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார்.

எனவே, எத்தகைய சவால்களையும் வெற்றிகரமாக சந்திப்பதற்கு இளைஞர்கள் தயாராக இருக்க வேண்டும்.

கல்விக்கு தற்போது நாம் முன்னுரிமை வழங்கிவருவதால் கண்டி மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளை மேம்படுத்துவதற்குரிய திட்டங்களும் உள்ளன.

அதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு விரைவில் சுமூகத்தீர்வு கிட்டும் என நம்புகின்றோம். எதிர்வரும் 12 ஆம் திகதி பேச்சுவார்த்தை உள்ளது. இதன்போது, இரு தரப்புகளும் இணக்கப்பாட்டுக்கு வந்து இப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என உறுதியாக நம்புகின்றோம்.

# இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 130,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள்**
**2024 ஓகஸ்ட் 14ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124K154 | LKA18225B140 | LKA36425H158 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 60,000 | 35,000 | 35,000 | 130,000 |

ஏலவிற்பனைத் திகதி : 2024 ஓகஸ்ட் 14
தீர்ப்பனவுத் திகதி : 2024 ஓகஸ்ட் 16
வழங்கப்படும் திகதி : 2024 ஓகஸ்ட் 16
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2024 ஓகஸ்ட் 14 புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) மற்றும் அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 2332319 |
| பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளப்படலாம்.
முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

✷ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

The Housewives' companion
Classifieds on
Daily News

## கொரப்விஸ் (பிரைவேட்) லிமிட்டட்

**கம்பனியின் பதிவு இல. - PV 111855**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவுகளுக்கு அமைவாக கம்பனி கலைப்பு அறிவித்தலும் கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தலும்

கம்பனியின் பெயர் பதிவு செய்யப்பட்ட : கொரப்விஸ் (பிரைவட்) லிமிட்டட்
அலுவலக முகவரி : இல. 199, கியூ வீதி கொழும்பு 02
நீதிமன்றம் : வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம் கொழும்பு (குடியியல்)
வழக்கு இல. : HC Civil/16/2024 Co
நீதிமன்ற கட்டளைத் திகதி : 28.03.2024
கோரிக்கை தாக்கல் செய்த திகதி : 22.02.2024
கம்பனி கலைப்பாளரின் பெயர் : G.J. David
முகவரி : Liquidator
C/O Deloite Associates
No. 11, Castloe Lane, Colombo 4
நியமன திகதி : 12.07.2024

## வரையறுக்கப்பட்ட சீ-நோர் நிறுவனம்

**(கடற்றொழில் அமைச்சு)**

**வரையறுக்கப்பட்ட சீ – நோர் நிறுவனத்திற்கு சொந்தமான கீழ் குறிப்பீடப்பட்டுள்ள ஆதனங்களை குத்தகைக்கு வீடுதல், இயந்திரங்களை விற்பதற்கு தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

- ➢ நிறுவனத்திடம் உள்ள கட்டிடங்களில் கூரைகள் அதாவது 106,800 சதுர அடி அளவில் சூரிய சக்தி திட்டத்திற்காக குத்தகை அடிப்படையில் வழங்குதல்.
- ➢ நிறுவனத்திடம் உள்ள அதிக பெறுமதி கொண்ட இயந்திரங்களை விற்பனை செய்தல். (Roller Brending Machine, Plasma cutting Machine & Sand Blasting Machine)

கேள்விமனு நிபந்தனைகளுடன் கேள்விமனு படிவத்தை மீளளிக்கப்படாத 3000 ரூபா தொகையை, ரொக்கப்பணமாக செலுத்தி வரையறுக்கப்பட்ட சீ-நோர் நிறுவன தலைமை அலுவலகத்தில் வழங்கல் பிரிவில் இருந்து 2024.09.02 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ள முடியும். (வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை)

மேல் குறிப்பிடப்பட்டிருக்கும் விபரங்களுக்கு அமைய உங்களது விலைமனுக்களை 2024.09.03 ஆம் திகதி மு.ப. 10.00க்கு முன்னர் கொழும்பு–10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, இலக்கம் 335 என்ற முகவரியில் அமைந்திருக்கும் வரையறுக்கப்பட்ட சீ-நோர் நிறுவன தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். இல்லையேல் பதிவுத் தபாலில் 2024.09.03 ஆம் திகதி மு.ப. 10.00 க்கு முன்னர் அந்த முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். 2024.09.03 ஆம் திகதி மு.ப. 10.00 க்கு கேள்விமனுக்கள் திறக்கப்படும். 2024.09.03 ஆம் திகதி மு.ப. 10.00 க்கு பின்னர் கிடைக்கும் கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 011-4380282/ 076–1551455 அழைத்து பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு**
**வரையறுக்கப்பட்ட சீ-நோர் நிறுவனம்**
**இலக்கம் 355, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு 10**

# இலங்கை வங்கி

## ஏல விலைகூறலுக்கான அழைப்பு (IFB)

**ஏலவிலைகூறலை மூடுவதற்கான திகதியை நீடித்தல்**
**கேள்விப்பத்திர இலக்கம்: P/PROC/2024/55**

**இலங்கை வங்கியின் தகவல் தொழில்நுட்ப சேவைகள் முகாமைத்துவம் (ITSM) மற்றும் தொழில்நுட்ப சொத்துக்கள் முகாமைத்துவம் (ITAM) என்பவற்றுக்கு தீர்வு வழங்கல், நிறுவுதல், நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல், பேணுதல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பாக அச்சிடப்பட்ட விலை கோரல்கள் தொடர்பிலான** 2024 ஜூலை 23 ஆம் திகதி "தினகரன்" பத்திரிகையில் வெளியிடப்பட்ட விளம்பரத்துக்கு மேலதிகமானது.

அவ்விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏலவிலைகூறலை மூடுவதற்கான திகதி 2024.08.27 ஆம் திகதி 1000 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை இது தொடர்பாக ஈடுபாடுள்ள ஏலதாரர்களுக்கு இத்தால் அறிவிக்கின்றோம்.

2024.08.26 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 0900 மணி முதல் 1500 மணி வரை சொத்துக்களும் சேகரிப்பும் தொடர்பான திணைக்களத்திலிருந்து ஏலவிலைகூறல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஏலவிலை பிணையானது 2024.12.24 ஆம் திதி 1000 வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14 ஆம் தளம், இலங்கை வங்கி தலைமையகம்
"BOC சதுக்கம்" இல: 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: +94 112 544310, +94 112 434786
மின்னஞ்சல்: procurement@boc.lk

மேலதிக விபரங்களுக்கு Scan செய்யவும்

1975 BOC www.boc.lk
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## கேள்விக்கான அழைப்பு

**மாகாண விவசாயத் திணைக்களம் - சப்ரகமுவ மாகாணம்**
**(விவசாய உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்)**

சப்ரகமுவ மாகாண விவசாயத் திணைக்களத்திற்கு விவசாய உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் கொண்டுவந்து ஒப்படைப்பதற்காக மாகாண விவசாயத் திணைக்களத்தின் பெறுகை குழுவின் தலைவரால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல | உருப்படி | அளவு | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூ. | கேள்விப்பிணை முறித்தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 01 | பெரசூட் நாற்றுமேடை தட்டுக்கள் | 90,000.00 | 2,000.00 | 65,000.00 |
| 02 | விவசாய பாதுகாப்பு வேலி வலை | 935 ரோல்கள் | 2,000.00 | 85,000.00 |
| 03 | வாயு துப்பாக்கி | 82 | 2,000.00 | 65,000.00 |

01. இதுபற்றி ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு சப்ரகமுவ மாகாண விவசாயத் திணைக்களத்தினால் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன் (தொ.பே.இல: 045 - 2222356) 2024.08.12 முதல் 2024.09.02 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 09.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்த்து கீழ்க்காணும் முகவரிக்கு எழுத்து மூல வேண்டுதலை மேற்கொண்டு மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகச் செலுத்தி பற்றுச் சீட்டை சமர்ப்பித்து, கேள்வி ஆவணத் தொகுதியை கொள்வனவு செய்யலாம்.
02. சகல கேள்விதாரர்களும் பெறுகை நிபந்தனைகளுக்கு அமைவாக குறித்த பெறுமதியுடன் மத்திய வங்கியில் பதிவுசெய்த அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து "பணிப்பாளர், சப்ரகமுவ மாகாண விவசாயத் திணைக்களம், முவகம, இரத்தினபுரி" பெயரில் பெற்றுக் கொண்ட (Unconditional, on Demand) கேள்விப் பிணையொன்றை (தரப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக) அல்லது " மாகாண விவசாயப் பணிப்பாளர், சப்ரகமுவ" விற்கு காசாகச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை, கேள்விப் பிணையொன்றாக பெறுகை ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். உங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பிணைமுறியை 2024.09.03 முதல் 2024.12.30 வரை செல்லுபடியாதல் வேண்டும். குறித்த காலம்/ பெறுமதி சரியானதாக மற்றும் மாதிரிப் பத்திரத்தின் நிபந்தனைகளுக்கு இணங்காத கேள்விப் பிணைமுறி நிராகரிக்கப்படும். கேள்விப் பிணைமுறியில் குறித்த கேள்வியின் வேலையைக் குறிப்பிடுதல் வேண்டும்.
03. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் போது எம்மால் வழங்கப்படும் கேள்விப் படிவங்களை நன்றாக வாசித்துப் பார்த்து அதற்கு அமைவாக கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த சகல நிபந்தனைகள் மற்றும் விபரங்கள் கேள்வி ஆவணங்களுடன் வழங்கப்படும்.
04. பொறியிடப்பட்ட கேள்விகள், ஆவணங்கள் இரு பிரதிகளுடன் கூடியதாக 2024.09.03 பி.ப. 2.00 இற்கு முன்பு "விவசாயத் திணைக்கள பெறுகைக் குழு" விற்கு கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது திணைக்கள கேள்விப் பெட்டியில் உள்ளிட முடிவதுடன் கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.
05. கேள்வியை ஏற்றுக் கொள்ளல், நிராகரித்தல் அல்லது கேள்வியின் ஒரு பகுதியை மாத்திரம் ஏற்றுக் கொள்ளும் அதிகாரம் பெறுகைக் குழுவின் தலைவருக்கு உரியது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண விவசாயத் திணைக்களம்,**
**முவகம,**
**இரத்தினபுரி,**
**045-2222356**
**2024.08.12**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**சீனக் குடாவிலுள்ள மேல் தாங்கி பண்ணையில் உள்ள Tk38, Tk39, Tk40 மற்றும் Tk41 என்பவற்றைச் சுற்றி முன்மொழியப்பட்ட Beam Ring நிர்மாணித்தல்**
**B/47/2024**

1. சீனக் குடாவிலுள்ள மேல் தாங்கி பண்ணையில் உள்ள Tk38, Tk39, Tk40 மற்றும் Tk41 என்பவற்றைச் சுற்றி முன்மொழியப்பட்ட Beam Ring நிர்மாணித்தல் எனும் ஒப்பந்த வேலைகளுக்காக தகைமை மற்றும் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் (DPC) தலைவர் அழைக்கின்றார். இந்த வேலையின் நிர்மாணக்காலம் இரண்டு மாதங்களாகும்.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராகவும் மற்றும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் CIDA நிறுவனத்தின C6 மற்றும் C5 அல்லது அதற்கு மேற்பட்ட பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும். விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும். இந்தப் பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்குக் குறைவாக இருப்பதால், 04/2016(ii)ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.
4. விலைமனுதாரர் மீளளிக்கப்படாத 5,000.00 ரூபா கட்டணத்தை (ஒரு தொகுதிக்கு ரூபா 4,133.94 + 2.5% SSCL + 18% VAT) செலுத்தி எழுத்து மூலமான வேண்டுகோளின் பேரில் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 2024-08-29ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் http//ceypetco.gov.lk/public-tenders/. வளமுள்ள விலைமனுதாரர்கள் https://eroc.dre.gov.lk/ எனும் இணையதளத்தின் ஊடாக 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் கம்பனிப் பதிவாளரிடம் பதிவு செய்துகொள்ளல் வேண்டும் என்பதுடன் PCA 3 சான்றிதழை அவர்களின் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. விலைமனுக்கள் 2024-0830 திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.
6. தெளிவுபடுத்தல்கள் ஏதுமிருப்பின் 011-5455138, 0773-405645 அல்லது Irshankar2004@yahoo.com ஊடாக சிவில் பொறியியலாளரைத் தயவு செய்து தொடர்புகொள்ளவும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல. 609, டாக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09.**
**தொ.பே. 011-5455336**

## பெறுகை அறிவித்தல்

**வலுசக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**IRDS இல் உள்ள CPC ஆதனங்களை அப்புறப்படுத்துதல்**
**B/46/2024**

IRDS இல் உள்ள பின்வரும் CPC ஆதனங்களை அப்புறப்படுத்துவதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுவின் தலைவர் இத்தால் விலைமனுக்களை அழைக்கின்றார்.

லொட் 1 : IRD - அனுராதபுரம்
- 3 மற்றும் 4 பொருத்தல்கள் உட்பட உருக்குக் குழாய் வழி மற்றும் வால்வுகள்
- 02 எண்ணிக்கையான பம்பிகள் மற்றும் அதன் மோட்டார்கள்
- 02 எண்ணிக்கையான உருக்கு களஞ்சிய தாங்கிகள்
- Gantry, Gantry platform, உருக்கு கேட், விநியோகிக்கும் பம்பிகள், பாதுகாப்பு கூடாரம் உட்பட ஏனைய மீதமுள்ள பொருட்கள் மற்றும் மீதமுள்ள கட்டிடம்.

லொட் 2 : IRD - கதுருவெல
- 02 எண்ணிக்கையான உருக்கு களஞ்சிய தாங்கிகள்
- கட்டிடங்கள், கேட்கள், வேலி, வேலைத் தளத்திலுள்ள saddles உட்பட ஏனைய மீதமுள்ள பொருட்கள்

லொட் 3 : IRD - மாத்தளை
- IRD வளவிலுள்ள தாங்கி, உருக்குத் தூண்கள் மற்றும் கூரையின் gantry

லொட் 4 : IRD - ஹட்டன்
- உயரத்தில் உள்ள உருக்கு தாங்கி
- gantry மற்றும் அதன் பொருட்கள் உட்பட உருக்கு சட்டத்தினால் ஆன இரண்டு மாடிக் கட்டிடம்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத கட்டணமான 2,000.00 ரூபாவை (ரூ. 1,653.58+ 2.5% SSCL + 18% VAT) இ.பெ.கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தியதன் பின் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 2024-08-29ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம்.
சகல விலைமனுக்களுடனும் பின்வரும் வகையில் விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| லொட் இல. | உருப்படி | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி |
|---|---|---|
| லொட் 1 | IRD - அனுராதபுரம் | 50,000.00 |
| லொட் 2 | IRD - கதுருவெல | 50,000.00 |
| லொட் 3 | IRD - மாத்தளை | 50,000.00 |
| லொட் 4 | IRD - ஹட்டன் | 50,000.00 |

விலைமனுக்கள் 2024-08-30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.
அப்புறப்படுத்துவதற்கான பொருட்கள் தற்போது IRD - அனுராதபுரம், IRD - கதுருவெல, IRD - மாத்தளை, IRD - ஹட்டன் எனும் இடங்களில் உள்ளன என்பதுடன் 2024-08-21ஆம் திகதிக்கு முன் விலைகளின் அட்டவணையில் (பக்க இல. 8 இன் 12) குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்தின் ஊடாக முகாமையாளர் (E & P) முகாமையாளருடன் முன்னேற்பாடொன்றைச் செய்துகொண்டு பொருட்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1ஆம் மாடி, இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-09.**

## கொள்வனவிற்கான அறிவித்தல்

**மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**
**Disposal of Grease Packs available at Nylon 6 premises, Sapugaskanda**
**B/45/2024**

சப்புகஸ்கந்த, நைலோன் 6 நிலமனையிலுள்ள Grease Packs ஆகியவற்றை அகற்றலுக்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரையிடப்பட்ட கேள்விக் கோரல்கள் அழைக்கப்படுகின்றன.

ஒப்பந்தத்தை கையளிப்பதற்கான தகைமைக்காக, தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் கூறப்பட்டுள்ள தகுதித்தன்மை மற்றும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகுதலும் வேண்டும்.

2024.08.29 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 2 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000 ரூபாவை (ரூ. 1,653.58+ 2.5% SSCL + 18% பெசேவ) இபெகூ இற்கு செலுத்திய பின்னர், கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்திலுள்ள 1 ஆம் மாடியின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

அனைத்து விலைக்கோரல்களும் 30,000 ரூபா பெறுமதியான கேள்விப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2024.08.30 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் உடனடியாகவே திறக்கப்படும்.

அகற்ற வேண்டிய அம்சங்கள் தற்போது சப்புகஸ்கந்த நைலோன் 6 நிலப்பரப்பில் வைக்கப்பட்டுள்ளன என்பதுடன் அம்சங்களின் பரீட்சித்தலானது 2024.08.21 ஆம் திகதியன்று வரையும் 011 5455332 என்ற தொலைபேசி வழியாக சிரேஷ்ட அலுவலகருடன் (களஞ்சியசாலைகள்) சந்திப்பு முன்னேற்பாடொன்றின் மூலமாக ஒழுங்கு பண்ணப்படலாம்.

தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின், அவற்றை 011 5455332 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக இடப்பரப்பிற்கான அலுவலகரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் தளம், இல.: 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09.**

## விலைக்கோரல்களுக்கான அழைத்தல் (IFB)

**மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**
**2025ஆம் ஆண்டிற்காக நுகேகொட, காலி, அநுராதபுரம், கண்டி, பதுளை, மட்டக்களப்பு, குருநாகல், யாழ்ப்பாணம் மற்றும் கேகாலை ஆகியவற்றின் இபெகூ பிராந்திய அலுவலக இடப்பரப்புகளுக்கான சுகாதார சுத்திகரிப்பு சேவை**
**B/44/2024**

மேற்குறிப்பிட்டுள்ள பணிக்காக புகழ் வாய்ந்த நிறுவனங்களிலிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விக்கோரல்களை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் பெற்றுக் கொள்வார்.

ஒப்பந்தத்தை கையளிப்பதற்கான தகைமைக்காக, தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் கூறப்பட்டுள்ள தகுதித்தன்மை மற்றும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகுதலும் வேண்டும்.

2024.08.29 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 2 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000 ரூபாவை (ரூ. 1,653.58+ 2.5% SSCL + 18% பெசேவ) இபெகூ இற்கு செலுத்திய பின்னர், கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்திலுள்ள 1 ஆம் மாடியின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

அனைத்து விலைக்கோரல்களும் 100,000 ரூபா பெறுமதியான கேள்விப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கள் 2024.08.30 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் மூடும் நேரத்தின் பின்னர் மூடப்பட்டு உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம். 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கும் விலைமனுதாரர்கள் https://eroc.drc.gov.lk என்ற இணையதளத்தினூடாக கம்பனிகள் திணைக்கள பதிவாளருடன் பதிவு செய்த பின்னர் விலைமனுக்களுடன் பிசிஏ-3 சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு:** தளவிஜயமொன்று கட்டாயமானதொன்றல்ல. (கேள்விக்கோரல் ஆவணத்தின் 1.21 என்ற ஷரத்தை தயவு செய்து பார்வையிடவும்)

தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின், அவற்றை 011 5455133 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பொறியியல் மற்றும் இடப்பரப்பு முகாமையாளரிடமிருந்து அல்லது 011 5455336 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**இல.: 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09.**
**தொலைபேசி: 011-5455336**
**மின்னஞ்சல்: supplies@ceypetco.gov.lk**

## சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**(சுத்திகரிப்புப் பிரிவு)**
**பகிரங்கக் கேள்வி – 4496T**
**UPGRADING OF DIESEL GENARATOR PROGRAMMABLE LOGIC CONTROLLER**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, இலங்கை, களனிய, சப்புகஸ்கந்த சுத்திகரிப்புப் பிரிவு, திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வெளிநாடுகளிலுள்ள அவர்களது அதிகாரம்பெற்ற ஏற்றுமதியாளர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து (உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதி முகவர்கள்) விலைக்கோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரக்குறிப்புகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முழுமையாக அமையும் UPGRADING OF DIESEL GENARATOR PROGRAMMABLE LOGIC CONTROLLER எனும் பணிக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

எந்தவொரு கேள்விதாரரும் கேள்வியைச் சமர்ப்பிக்கும்போது வேண்டுகோள் கடிதத்துடன் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 12,500.00 ரூபாவை 2024 செப்டெம்பர் 10ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் எந்தவொரு அலுவலக நாட்களில் கொழும்பு - 09, இல. 609, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தின் 05ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் செலுத்துதல் வேண்டும் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பணியகத்தின் காசாளரிடம் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். மேலும் சகல கொடுப்பனவுகளையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்தின் ஊடாக கேள்வி இலக்கம் மற்றும் கேள்விதாரரின் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு பணத்தை செலுத்தலாம்.

கேள்வி நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகள் அடங்கிய கேள்வி ஆவணங்கள் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com எனும் இணையதளங்களில் கிடைக்கத்தக்கதாக உள்ளன.

மாற்றுவழியாக கேள்வி ஆவணங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட விலாசத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனு ஆவணங்கள் 2024 செப்டெம்பர் 25ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு, அன்றைய தினமே உடனடியாக அவைகள் சுத்திகரிப்பு நிலைய மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பொருள்வளம்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்புப் பிரிவு, சப்புகஸ்கந்த,**
**களனி, இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-2400110**
**தொலைநகல்: 0094-11-2400434**
**மின்னஞ்சல்: ref.materials@ceypetco.gov.lk**

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer adz Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 4 828 114 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

## 2007ம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் கீழான அறிவித்தல்

2016 ஓகஸ்ட் 23ம் திகதி அமுலுக்கு வருமாறு தெரண கம்பியூட்டர் எடியுகேசன் டெக்னோலோஜி (பீவீடி) எல்டீடி என்ற பெயரை விசுலக பெப்ரிகல் (பிவீடி எல்டீடி) என மாற்றம் செய்துள்ளதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

**கம்பனி இலக்கம்:** PV 112310

**கம்பனியின் பதிவு அலுவலக முகவரி:** 119/4, அவாசா வீதி, கெஸ்பேவ, பிலியன்தலை.

**செயலாளர்கள்**
**DSP மெனேஜ்மன்ட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்**

---

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

---

## காணி சுவீகரிப்புச் சட்டத்தின் (460 வது சரத்து) 7வது பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது இல. BD/BD/LND/03/05/48**
**சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் இல. 4-3/9/2016/WS/517**

காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழே அரசாங்கத்திற்கு சுவீகரிப்பு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப் பட்டுள்ள காணி மற்றும் காணி சுவீகரிப்பு சட்டத்தின் 9வது பிரிவின் கீழே உரிமை மற்றும் நட்டஈடு விசாரணை பதுளை பிரதேச செயலகத்தில் கீழ்வரும் திகதிகளில் நடைபெறும் என்பதை பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக இத்தால் அறியத்தரப்படுகின்றது. இக்காணியோடு தொடர்புபட்டவர்கள் இவ்விசாரணைக்காக சமுக மளித்தல் வேண்டும். மேலதிக தகவல்களுக்காக இல. 2391/10 மற்றும் 2024.07.01ஆம் திகதியிலான அரச அதி விசேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

**துணை அட்டவணை**

| | |
|---|---|
| பிரதேச செயலாளர் பிரிவு | : பதுளை |
| மூல வரைபடத்தின் இலக்கம் | : ப/758 |
| காணித் துண்டுகளின் எண்ணிக்கை | : 04 (காணித்துண்டு இலக்கம் 1,2,3,4) |
| மொத்த காணி அளவு | : ஹெக்டயார் 0.0152 |
| காணி அமைந்துள்ள கிராமம் | : பதுலுப்பிட்டிய (பிரிவு இல. 07, பதுளை மாநகர சபை எல்லைக்குள்) |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : இல. 78J, பதுலுபிட்டிய |
| விசாரணை நடைபெறும் திகதி | : 2024 ஆகஸ்ட் மாதம் 23 |
| நேரம் | : மு.ப. 10.00 |

**துஷாரி அனுராதா நாணயக்கார,**
**பிரதேச செயலாளர்.**

**பிரதேச செயலகம்,**
**பதுளை.**
2024.08.07

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல்

**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அங்குலான, அனுராதபுரம் மற்றும் உடுகாவ வேலைத்தளங்களுக்கான உராய்வு நீக்கி எண்ணெய் (Lubricant Oil) கொள்வனவு**

***RDA/DPR/PRO/WK/NCB/MECH/2024/99***

| விபரம் | தேவையான அளவு (பீப்பாய்) (அண்ணளவாக பீப்பாயின் கொள்ளளவு-200லீ முதல் 210லீ வரை) |
|---|---|
| Petrol engine oil 15W40 | 02 drums |
| Hydraulic VG 150 | 02 drums |
| Hydraulic oil 10W | 06 drums |
| Hydraulic oil VG 100 | 02 drums |
| Transmission oil SAE 140 | 01 drums |
| Transmission oil 80W90 | 06 drums |
| Transmission oil SAE 30 | 03 drums |
| Power steering oil | 03 drums |
| Grease (All purpose) | 04 drums |
| Grease (High temperature) | 02 drums |

தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய மேல்குறிப்பிடப்பட்டுள்ள சேவையினை வழங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.08.12** ஆம் திகதி முதல் **2024.09.02** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையதளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

SELACINE

---

## 2015ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் (131) எனும் அத்தியாயத்தின் கீழ் மற்றும் கௌரவ நீதிமன்றத்தின் கட்டளையின் பிரகாரம் இலங்கை மக்களிடம் மன்னிப்பு கோருதல்

பரணகெதர, பரவாஹெர கெகுணதுரயில் வசிக்கும் யட்டிகல கம்ஆச்சாரிகே தனுஷிகா ஆகிய நான் யட்டியன வீதி, கும்பல்கம எனும் முகவரியில் அமைந்துள்ள சங்தீப் எனும் மருந்தகத்தில் சேவையாற்றுகின்றேன்.

அந்த மருந்தகத்தில் பதிவு செய்யப்பட்ட மருத்துவரொருவரினால் வழங்கப்பட்ட மருந்துசீட்டு இன்றி மருந்தை சில்லறையாக விற்பனை செய்த குற்றத்திற்காக 16509ஆம் இலக்க வழக்கின் கீழ் தொடரப்பட்ட வழக்கில் நான் குற்றவாளி எனவும் மாத்தறை மேலதிக நீதவான் நீதிமன்றத்தினால் 25,000.00 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

இந்தக் குற்றத்தை மீண்டும் நான் செய்யமாட்டேன் என பிரகடனப்படுத்துவதோடு ஏற்பட்ட தவறு தொடர்பில் அனைத்து இலங்கை மக்களிடமும் மன்னிப்பைக் கோருகின்றேன்.

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் அலுவலகம், திருகோணமலை**

### அலுவலக உபகரணங்களை வழங்குதல்

**PSDG/CBG-2024**

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் பின்வரும் ''அலுவலக உபகரணங்கள் - 2024'' என்பதை வழங்கி நிறுவுவதற்காக 2024-08-23 ஆம் திகதி மு.ப. 10 மணி வரை முதன்மையாளர்கள் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற முகவர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கிறார்.

அலுவலக உபகரணங்கள் - 2024

| உருப்படி இல. | உருப்படிகள் | விளக்கம் | எண்ணிக்கை | மீளளிக்கப் படாதது |
|---|---|---|---|---|
| Group III-I | 3.1 | Photocopy | 02 | 3,500.00 |
| | 3.2 | Duplo Printing Machines | 01 | |
| | 3.3 | Hard Disk | 03 | |
| | 3.4 | Air-conditioner | 18 | |
| | 3.5 | Sound system (Indoor and Outdoor portable announcing system) | 03 | |

பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து ஆர்வமுள்ள தகுதியுள்ள எந்தவொரு விலைமனுதாரர், முகவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவர் ஆகியோர் 2024-08-12 ஆம் திகதியிலிருந்து 2024-08-22 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து நகல் பிரதிகளுடனான விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

- திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்று.
- திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்தின் பெயரில் மக்கள் வங்கி, திருகோணமலை நகரக் கிளையின் 255-100120000-490 எனும் கணக்கிலக்கத்திற்கு ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துதல்.
- வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.
- முதன்மையாளர்களினால் உங்கள் கம்பனியை அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு உள்நாட்டு முகவர்களாக நியமித்தல் தொடர்பாக வழங்கப்பட்ட சான்றிதழ்/கடிதம்.

1. விலைக்கோரல்கள் ஒற்றைக்-கட்ட ஒரு கடித உறை முறையில் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.
2. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-08.23 ஆம் திகதி மு.ப. 10 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். உறைகளில் தொகுதியின் (Group) பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
3. அனைத்து விலைமனுக்களுடன் விலைமனுப் பெறுமதியின் 2% விலைக்கோரல் பிணைத் தொகையாக இணைக்கப்படல் வேண்டும். விலைக்கோரல் பிணை 2024.10.11ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
4. அலுவலக உபகரணங்கள் வழங்குதலை கையளித்தல் தொடர்பில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.
5. ஏதாவது தெளிவுபடுத்தல்களை 026-2220103 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**திருகோணமலை.**

---

## விலைமனுக்கோரல்

### வ/ப சுயாதீன தொலைக்காட்சி சேவை

**3G/HD/SD/-SDI BNC Matrix Type Video Routers உடன் Remote panel இரண்டு கருவிகளை கொள்வனவு செய்வது தொடர்பாக**

**விலை மனு இலக்கம் ITN/Q/34/2024**

வ/ப சுயாதீன தொலைக்காட்சி சேவையின் கொள்முதல் குழுவின் தலைவரினால் 3G/HD/SD/-SDI BNC Matrix Type Video Routers உடன் Remote panel கருவிகள் இரண்டை கொள்வனவு செய்வதற்கு உற்பத்தியாளர்கள்/அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலை மனு கோரப்படுகின்றது.

வ/ப சுயாதீன தொலைக்காட்சி சேவையின் முகாமையாளர் (கொள்முதல்) இற்கு எழுத்துமூலம் கோரிக்கை விடுப்பது மற்றும் மீள செலுத்தப்படாத 5 ஆயிரத்து 900 ரூபா வரியுடன் கூடிய கட்டணத்தை செலுத்தி குறித்த விலைமனுக்களை 2024 செப்டெம்பர் மாதம் 2ம் திகதி பிற்பகல் 3 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு வ.ப சுயாதீன தொலைக்காட்சி சேவை www.itn.lk எனும் இணையத்தளத்தில் பார்க்கலாம்.

**தலைவர்,**
**கொள்முதல் குழு,**
**வ/ப சுயாதீன தொலைக்காட்சி சேவை,**
**விக்ரமசிங்கபுர,**
**பத்தரமுல்லை.**

---

## ஒன்றிணைத்தல் பற்றிய அறிவித்தல்

**2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(3)(b) பிரிவுக்கு அமைவாக**

**சன்ஷயின் பெகேஜிங் லங்கா லிமிடட் என்ற நிறுவனம் சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி என்ற நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல்**

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 (1) பிரிவுக்கு ஏற்ப ஒன்றிணைப்பிற்கான தீர்மானம் ஒன்றை சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி மற்றும் சன்ஷயின் பெகேஜிங் லங்கா லிமிடட் ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகள் மேற்கொண்டுள்ளன என்பதோடு, அதன் மூலம் சன்ஷயின் பெகேஜிங் லங்கா லிமிடட் மற்றும் சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி ஆகிய நிறுவனங்கள் ஒரு தனி நிறுவனமாக ஒன்றிணைக்கப்படுவதோடு ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனம் சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி ஆகும்.

மேற் சொல்லப்பட்ட ஒன்றிணைப்பானது 01 ஒக்டோபர் 2024ஆம் திகதியிலிருந்து அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,**
**சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி,**
**சன்ஷயின் பெகேஜிங் லங்கா லிமிடட்**

---

## சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சு
## விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை - சீதுவ

**2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்**

2025ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு உற்பத்தியாளர்கள், ஏக முகவர்கள், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட அரசாங்க நிறுவனங்கள், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்கள், நபர்களிடமிருந்து இந்த வைத்தியசாலையில் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**பொருள் வழங்கல்கள்**

1. மருத்துவ உபகரணங்கள்
2. கண் சத்திரகிச்சை உபகரணங்கள்
3. ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல்
4. கண் சத்திரசிகிச்சை துணைப்பாகங்கள் மற்றும் அது சார்ந்த மருந்துகள்
5. பொதுவான சத்திரசிகிச்சை துணைப்பாகங்கள் மற்றும் அது சார்ந்த மருந்துகள்
6. ஆய்வுகூட இரசாயனங்கள் மற்றும் ஆய்வுகூட பாவனைப்பொருட்கள்
7. கதிரியக்க துணைப்பாகங்கள்
8. பல் சத்திரசிகிச்சை உபகரணங்கள் மற்றும் பாவனைப்பொருட்கள்
9. மருந்து வகைகள் மற்றும் சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள்
10. எக்ஸ்-ரே பிலிம்கள் மற்றும் ECG துணைப்பாகங்கள்
11. சத்திரசிகிச்சை உபகரண திருத்தவேலைகள் (அனைத்து வகையானவையும்)
12. காகிதாதிகள்
13. நிறுவன அடையாள அட்டைகளைத் தயாரித்தல்
14. மருந்து உறைகள் மற்றும் எக்ஸ்-ரே உறைகள்
15. குப்பை உறைகள்
16. பாவனைப் பொருட்கள் - அ (உலர் மின்கலன்கள், சவர அலகுகள், வடிகட்டிய நீர், Toilet Paper, Cotton bud packet)
17. பாவனைப் பொருட்கள் - ஆ (சவர்க்காரம், கைகழுவும் திரவம், லைசோல், விம் தூள் மற்றும் திரவம், டீபோல், மோர்டின் மற்றும் Detergent items போன்றவை)
18. கட்டிட பராமரிப்புப் பொருட்கள் (Hardware Item)
19. வைத்தியசாலை லினன் துணிகள் மற்றும் திரைச்சீலைகள் வழங்குதல்
20. மின் உபகரணங்களை வழங்குதல்
21. தளபாடங்கள் வழங்குதல் மற்றும் திருத்தவேலைகள் (மரம், இரும்பு மற்றும் உருக்கு)
22. வளிச்சீராக்க இயந்திரங்களை வழங்குதல்
23. கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள் வழங்குதல்
24. மருத்துவ வாயுகள் ($MO_2$, $N_2O$, $CO_2$, Com.Air, $C_3F_8$)
25. மை, டோனர், கார்ட்ரிச், ரிப்பன் வழங்குதல்
26. வாகன பெட்டறிகள், டயர்கள் மற்றும் ஏனைய வாகன உதிரிப்பாகங்கள் வழங்குதல்
27. பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் ஸ்டென்சில் உருக்குப் பொருட்கள்

**சேவை வழங்கல்கள்**

28. கணனிகள் மற்றும் கணனி சார்ந்த உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ்கள்
29. வாகன வளிச்சீராக்க திருத்தவேலைகள்
30. வாகன மின்சார வேலைகள்
31. வாகன இயந்திர திருத்தவேலைகள் மற்றும் ஏனைய வேலைகள்
32. வாகன தகர வேலைகள் மற்றும் நிறப்பூச்சு வேலைகள்
33. மின்சாரப் உபகரணங்களின் திருத்தவேலைகள்
34. வளிச்சீராக்கி இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ்
35. மருந்துப் மற்றும் பயணிகள் போக்குவரத்திற்குப் பொருத்தமான வாடகை வாகனங்களை வழங்கும் சேவைகள் (லொறி, கார் மற்றும் வேன்)
36. சாக்கடை கழிவுகளை அப்புறப்படுத்தும் கலி பவுசர்களை வழங்குதல்
37. சிகிச்சை மற்றும் துப்புரவேற்பாட்டு கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தும் சேவைகளை வழங்குதல்
38. அப்புறப்படுத்தப்படும் பிளாஸ்டிக், கண்ணாடி போத்தல்களை விற்பனை செய்தல்

2024-08-12ஆம் திகதி முதல் 2024-09-12ஆம் திகதி வரை (அரசாங்க விடுமுறை நாட்கள் மற்றும் வார இறுதி நாட்கள் தவிர்ந்த) மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்து மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பொருளுக்காகவும் 500.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை வைத்தியசாலைக்குச் செலுத்துவதன் பேரில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. சீதுவ விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழு தலைவருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள்
2. வியாபாரப் பதிவுச் சான்றிதழின் புகைப்படப் பிரதியொன்று
3. இந்த செயற்பாடுகள் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற அதிகாரியொருவரினால் பின்பற்றப்படுகின்றன மற்றும் கூரியர் நபருடன் அல்ல என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட குறித்த விண்ணப்பப் படிவங்களை 2024-10-11ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2025 வகுதி இலக்கம் .........'' எனக் குறிப்பிடுங்கள்.

இது தொடர்பில் ஏதாவது தெளிவுபடுத்தல்கள் தேவையாயின் தயவுசெய்து 011-2258862 – 64 எனும் தொலைபேசி இலக்கத்தில் நிர்வாக உத்தியோகத்தரை தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை,**
**சீதுவ.**

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு (NCB)

**கேள்விமனு இல.: NSB/PT/ITE/2024/12**

### தேசிய சேமிப்பு வங்கிக்கு FILE INTERGRITY MONITORING SYSTEM (FIM) இன் பெறுகை

File Intergrity Monitoring System (FIM) இன் பெறுகைக்காக புகழ்பெற்ற முதன்மை உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனுக்களுக்கு இத்தால் அழைப்பு விடுக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெறுகை விபரம் | File Intergrity Monitoring System (FIM) |
| பெறுகை முறை | தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) |
| பொருந்தும் மீளளிக்கப்படாத கேள்விமனு கட்டணம் | ரூபா 5,000/- |
| சமர்ப்பிக்க வேண்டிய விலைமனு பிணைமுறியின் பெறுமதி | ரூபா 150,000/- |
| விலைமனு ஆவணங்களை வெளியிடும் இறுதித் திகதி மற்றும் நேரம் | 2024.09.03 அன்று பி.ப. 3.00 |
| கேள்விமனு மூடப்படும் திகதி மற்றும் நேரம் | 2024.09.04 அன்று மு.ப. 10.00 |

1. எந்த ஒரு கேள்விமனுதாரர் சார்பில் அல்லது மற்றும் பரிந்துரைக்கப்படுபவர் அல்லது முகவர் அல்லது உப முகவர், பிரதிநிதியாக செயற்படும் எந்த ஒரு நபரும் கேள்விமனுவுக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னர் 1987 இன் 09 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின்படி தம்மை மற்றும் அவ்வாறான பொது ஒப்பந்தத்தை பதிவு செய்தல் அவசியமாகும்.
2. விலைமனு ஆவணங்களை கொழும்பு 03, காலி வீதி, இல. 255, தேசிய சேமிப்பு வங்கி, வழங்கல் பிரிவு, வழங்கல்கள் முகாமையாளரிடம் இருந்து பெற முடியும். எழுத்துமூல கோரிக்கை ஒன்றை சமர்ப்பித்து 2024.08.12 ஆம் திகதி தொடக்கம் 2024.09.03 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 8.30 மற்றும் பி.ப. 3.00இற்கு இடையே கேள்விமனு படிவங்கள் வெளியிடப்படும்.
3. முழு நிறைவான விலைமனு ஆவணங்கள் கேள்விமனு திறக்கப்பட்ட திகதியில் இருந்து குறைந்தது 105 நாட்காட்டி தினங்களுக்கு செல்லுபடியான வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட மேல் குறிப்பிடப்பட்டவாறு கேள்விமனுவுக்கு தொடர்புடைய பெறுமதிக்காக தேசிய சேமிப்பு வங்கியினால் ஏற்க முடியுமான வங்கி உத்தரவாதம்/ விலைமனு பிணைமுறி ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்களை ஏற்கும் இறுதித் திகதியான 2024.09.04 ஆம் திகதி மு.ப. 10.00இற்கு பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும் என்பதோடு மு.ப. 10.00 இற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு திறக்கப்படாது திருப்பி தரப்படும்.
5. எந்த ஒரு காரணமும் கூறாது எந்த ஒரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிக்கும் உரிமை மற்றும் விலைமனு ஒன்றின் எந்த ஒரு பகுதியையும் ஏற்கும் உரிமை தேசிய சேமிப்பு வங்கி வசமானது.
6. மேலதிக விபரங்களை வழங்கல்கள் - தலைமை முகாமையாளரிடம் இருந்து பெற முடியும்

**தலைவர் - நிறுவன பெறுகைக் குழு - சிறிய அளவானது,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல. 255, காலி வீதி, கொழும்பு 03.**

---

# NOTICE
## UNIVERSITY OF VAVUNIYA, SRI LANKA
### VACANCIES FOR THE POST OF TEMPORARY POSITIONS

**WALK-IN INTERVIEW**

Walk-in interview for the following posts will be held on **15th of August 2024 at** the Board Room of the University of Vavuniya, Pambaimadu, Vavuniya as follows,

Candidates who have the required qualifications are invited for this interview with the **relevant certificates, NIC, Curriculum Vitae** along with the duly filled **Application form** downloadable from the University website **www.vau.ac.lk.**

**A) Faculty of Business Studies (FBS)**
- a) Office of the Dean — **9.00 a.m.**
  - i) Instructor in Computer Technology (on Contract)

**B) Faculty of Technological Studies (FTS)**
- a) Department of Information & Communication Technology — **9.30 a.m.**
  - i) Temporary Demonstrator in Information Communication Technology

**C) Faculty of Applied Science (FAS)**
- a) Department of Physical Science — **10.00 a.m.**
  - i) Temporary Assistant Lecturer in Information Technology
  - ii) Temporary Assistant Lecturer in Applied Mathematics & Computing
  - iii) Temporary Demonstrator in Information Technology
  - iv) Temporary Demonstrator in Applied Mathematics & Computing
- b) Department of Bio Science — **1.00 p.m.**
  - i) Temporary Assistant Lecturer in Environmental Science
  - ii) Temporary Demonstrator in Environmental Science

Applicants who are interested in the above posts are requested to visit University of Vavuniya Website **http://www.vau.ac.lk** to obtain further details.

**Registrar/ University of Vavuniya**
**08.08.2024**

# பெறுகை அறிவித்தல்

கண்டி மாவட்டத்தின் பிரதேச செயலகத்திற்காக டெஸ்டொப் கணனி மற்றும் போட்டோப் பிரதி இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக தகைமையுள்ள அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாத அது பற்றி ஆர்வம் காட்டுகின்ற வழங்குநர்களிடமிருந்து கண்டி மாவட்ட செயலகம் மற்றும் பெறுகைக் குழுவின் தலைவரால் 2024.08.26 மு.ப. 10.00 வரை கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

02. அதனோடு சம்பந்தப்பட்ட விபரங்களை மாவட்ட செயலகத்தின் இணையதளம் (www.kandy.dist.gov.lk) பெறுகையின் கீழ் அல்லது மாவட்ட செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**சந்தன தென்னகோன்,**
**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**மாவட்ட செயலாளர்/அரச அதிபர்,**
**மாவட்ட செயலகம், கண்டி.**

## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி இன் பின்வரும் கிளைகளில் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத தங்க நகைகளை வாடிக்கையாளர் சார்பாக எமது நிறுவனத்தால் இல.123, ஓராபிபாஷா மாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரியில் பின்வரும் தினங்களில் மு.ப 9.30 - பி.ப 2.00 வரை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| இத் திகதி வரை அடகு வைக்கப்பட்டவை | இத் திகதி வரை மீட்கப்படாதவை | ஏல விற்பனைத் திகதி |
|---|---|---|
| 03/05/2024 | 02/06/2024 | 27th & 28th August 2024 |

**கிளைகள் :** அனுராதபுரம், அம்பலங்கொடை, அளுத்கம, அமபாறை, அவிசாவளை, எஹலியகொடை, எலக்கந்தை, எம்பிலிப்பிட்டி, கந்தானை, களுத்துறை, கதுருவெல, கடுவெல, கட்டுகஸ்தோட்டை, களனி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், குருவிட்ட, கொட்டாஞ்சேனை, கொட்டாவை, கொச்சிக்கடை, கம்பஹா, காலி, கிரியுல்ல, ஜா-எல, தலவத்துகொடை, திஸ்ஸமஹாராம, திருகோணமலை, தம்புள்ளை, நுகேகொடை, நாரம்மல, நிட்டம்புவ, நிக்கவெரட்டிய, பாணந்துறை, பெல்மதுல்ல, பிலியந்தலை, பிரதான கிளை, பதுளை, பத்தரமுல்லை, பண்டாரவளை, பொரளஸ்கமுவ, கண்டி, மஹர, மஹரகம, மத்துகம, மட்டக்களப்பு, மஹியங்கனை, மாவத்தகம, மாரவில, மாத்தளை, மாத்தறை, மாலபே, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, மொறட்டுவை, யாழ்ப்பாணம், இரத்மலானை, இரத்தினபுரி, ராஜகிரிய, ராகம, வத்தளை, வரக்காப்பொல, வவுனியா, வாரியபொல, வெள்ளவத்தை, வென்னப்புவ, சிலாபம், ஹொரணை, நுவரெலிய கிளை, தெகிவளை

எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி, ஏல விற்பனையை இரத்து செய்யவும் பிற்போடவும் அல்லது ஏல விற்பனை நடத்தப்படும் இடத்தை மாற்றவும் சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி. உரிமை கொண்டுள்ளது.

விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட பொருள்கள் அன்றே பணம் செலுத்தி மீட்கப்பட வேண்டும்.

**சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பீஎல்சீ**
இல.123, ஓரபிபாஷா மாவத்தை, கொழும்பு 10.
தொ.எண் - 0117 388 388


# The largest Job Market in Sri Lanka

www.observerjobs.lk




Widest reach for your employment advertisement
Email : info@observerjobs.lk Hotline: 1949
For more information
0777270012 / 0777270000 / 0112429314


அமைச்சரவையில் அங்கத்துவம் பெறாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சி
மறுசீரமைப்பு அமைச்சு

## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

### இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் வுட்சைட், மிட்லன்ஸ், ஒபல்கல, ஹாகல, வலஹந்தூவ ஆகிய அரச தோட்டங்களில் 665 மரங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக் கோரல்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற வுட்சைட், மிட்லன்ஸ், ஒபல்கல, ஹாகல, வலஹந்தூவ ஆகிய தோட்டங்களில் வன முகாமைத்துவ திட்டமிடலுக்கு சொந்தமான மற்றும் ஆபத்தான நிலையில் உள்ள 665 மரங்களை கேள்விச் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. அவ் விலைமனுக்களுக்கான நிபந்தனைகள் மற்றும் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான படிவங்கள் அடங்கிய கேள்வி ஆவணங்களை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கொழும்புத் தலைமையகத்தில் அல்லது பிரதேச அலுவலகங்களில் ரூ. 2000/- தொகையைச் செலுத்தி கொள்வனவு செய்யலாம். 2024.08.13 முதல் 2024.08.27 பி.ப. 1.30 வரை கொழும்பு தலைமையகத்தில் மற்றும் 2024.08.13 மு.ப. 9.00 முதல் 2024.08.26 பி.ப. 3.30 வரை பிரதேச அலுவலகங்களில் கொள்வனவு செய்யலாம் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் தலைமையகத்தில் திறக்கப்படும். தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024.08.27 பி.ப. 1.30 இற்கு முன்பு கேள்விப் பத்திரங்களை உள்ளிடல் வேண்டும். சித்திகரமான கேள்விதாரர்களுக்கு கேள்விகளை வழங்குவதன் மூலம் 07 நாட்களுக்குள் முழுமையான தொகையைச் செலுத்த வேண்டியதுடன் அவ்வாறு செய்யாத சகல கேள்விகளும் இரத்துச் செய்யப்படும்.

2024.08.27 பி.ப. 1.30 இற்கு பின்னர் எந்தக் காரணம் கொண்டும் கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது. அத்துடன் ஏதேனும் விலைமனுவை அல்லது விலைமனுவின் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அல்லது இரத்துச் செய்யும் முழுமையான அதிகாரம் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன் அதுவே இறுதித் தீர்மானமாக இருக்கும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 257, சிரிதம்ம மாவத்தை,**
**கொழும்பு -10.**

திகதி: 2024.08.08

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

## விலைக்கோரலுக்கான அழைப்பின் திருத்தம்

### 04 எண்ணிக்கையான Echocardiography Machines வழங்குதல்

மேற்கூறிய விலைக்கோரலுக்கான அழைப்பு 2024.05.27ஆம் திகதிய தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட மேற்கூறிய பெறுகை தொடர்பானது.

| | உருப்படி | BES அலுவலகத்திற்குச் செலுத்த வேண்டிய மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | மதிப்பீட்டுச் செலவு (ரூபா) (மில்லியன்களில்) |
|---|---|---|---|
| 01 | 04 Nos. Echocardiography Machines | 20,000.00 | 120 |

1. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 2024.08.26ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதுடன் விலைமனுக்கள் இதே நாள் (2024.08.26) மு.ப. 10.00 மணிக்குத் திறக்கப்படும்.
2. விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் விலைமனுக்களைப் பரீட்சித்துப் பார்த்தல் என்பவற்றை 2024.08.12ஆம் திகதி முதல் 2024.08.26ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கொழும்பு -10, டி சேரம் பிளேஸ், இல. 27, உயிரியல் மருத்துவப் பொறியியல் சேவைகள் பிரிவின் பணிப்பாளரிடம் (தொலைபேசி: 011-2691916 தொலைநகல் 011-2698317) மேற்கொள்ளலாம்.
3. ஏனைய சகல விதிகள் மற்றும் நிபந்தனைகள் முன்னைய விளம்பரத்தில் தரப்பட்டுள்ளவாறு மாறாமல் அவ்வாறேயிருக்கும்.
4. பெறுகைக்கான மீளளிக்கப்படாத கட்டணத்தை ஒரு முறை மாத்திரமே செலுத்துதல் வேண்டும்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள்,**
**இல. 27, டி சேரம் பிளேஸ்,**
**கொழும்பு -10.**






## விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
நீர்ப்பாசன அமைச்சு
நீர்ப்பாசனத் திணைக்களம்

### தந்திரிமலை – கீழ் மல்வத்துஓயா பல்துறை அபிவிருத்தித் திட்டத்திற்கு கழுவிய / ஆற்று மணலை வழங்குவதற்கான பெறுகை

### தேசிய போட்டி ரீதியிலான விலைகோரல்

01. பின்வரும் வழங்கல்களுக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

**அட்டவணை இல. 01**

| விலைக் கோரல் இல. | வழங்கல் விபரங்கள் | அளவு (கியூப்) | மீளளிக்கப் படாத வைப்பு (ரூபா) | விலைக் கோரல் செல்லுபடி யாக வேண்டிய காலம் | விலைக் கோரல் பிணை முறித் தொகை (ரூபா) | பிணை முறி செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| IFB/ID/GOSL/NCB/2024/016 | தந்திரிமலை - கீழ் மல்வத்துஓயா பல்துறை அபிவிருத்தித் திட்டத்திற்கு கழுவிய / ஆற்று மணலை வழங்குவதற்கான பெறுகை | 6000 | 35,000.00 | 2024-12-02 வரை | 3,000,000.00 | 2024-12-30 வரை |

02. மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்கு தயவு செய்து 01ஆம் அட்டவணையைப் பார்க்கவும்) செலுத்தி மற்றும் நிறுவனக் கடிதத் தலைப்பில் (மூலப் பிரதி) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, 230ஆம் இலக்கத்திலுள்ள நீர்ப்பாசனத் திணைக்களம், 2ஆம் மாடி, அறை இல. 213, நீர்ப்பாசன பணிப்பாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) அலுவலகத்திலிருந்து 2024-08-12ஆம் திகதி முதல் 2024-09-02ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
03. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் விரும்பினால் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளும் முன் விலைமனுக்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மேலதிக தகவல்களை நீர்ப்பாசனப் பணிப்பாளரிடமிருந்து (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011-2582897 / 011-2582677.
04. பின்வரும் வகையில் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.
    திகதி: 2024-08-20
    நேரம்: மு.ப. 11.00
    இடம்: கொழும்பு-07, நீர்ப்பாசனத் திணைக்களம், 4ஆம் மாடி, குழு அறை
05. வழங்குநர் இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து சட்டபூர்வமான அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன் சட்டபூர்வமான அப்புறப்படுத்தல்களுக்கான ஏற்புடைய வரிகள் மற்றும் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.
06. 01ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ள பெறுமதிக்கான விலைமனுப் பிணைமுறியொன்று விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஏதாவது விலைமனு செல்லுபடியாகும் விலைமனுப் பிணை முறி இல்லாமல் இருந்தால் எவ்வித முன்னறிவித்தலுமின்றி பதிலளிக்காதவை எனக் கருதப்பட்டு நிராகரிக்கப்படும்.
07. விலைமனு ஆவணத்தின் சகல பக்கங்களிலும் விலைமனுதாரர் சிற்றொப்பமிட்டு அவரது முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
08. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்களை 2024-09-03ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னராகக் கிடைக்கும் வகையில், கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை 230ஆம் இலக்க நீர்ப்பாசனத் திணைக்களம், 3ஆம் மாடியிலுள்ள பிரதான நிதியிடல் அலுவலரின் 311ஆம் இலக்க அறையில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில், தலைவர், திணைக்கள பெறுகைக்குழு என முகவரியிட்டு மேற்படி முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024-09-03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
09. கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் வேலை விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கம் என்பவற்றை தயவு செய்து எழுதவும்.
10. சுய விருப்பத்தின் பேரில் சமுகமளிக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**பொறி. அஜித் குணசேக்கர,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,**
**நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07**

**2024-08-12ஆம் திகதி.**







# கேள்விமனுக்கான அழைப்பு (IFB)

## பொறியியல் சேவைகள் திணைக்களம் (மத்திய மாகாணம்)

## நிதி மூலம் : அரச நிதி (GOSL)

01. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுமான வேலைகளுக்காக, தகுதியும் தகைமையும் உள்ள கேள்விமனுதாரர்களிடம் இருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விமனுக்களை மத்திய மாகாண பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைப்புவிடுக்கிறார்.
02. கேள்விமனுக்கோரல் ஆனது தேசிய போட்டிக் கேள்விமனு (NCB) அடிப்படையில் நடைபெறும். மேலும் மத்திய மாகாண சபையில் பதிவு பெற்ற கேள்விமனுதாதர்களுக்கே பிராந்திய அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்.
03. தெரிவு செய்யப்பட்ட கேள்விமனுதாரர், தகுதி நீக்கம் செய்யப்பட்டோர் பட்டியலில் உள்வாங்கப் படாதவராக இருப்பதுடன் கட்டிடக் கட்டுமானத் துறையில் கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில், நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு செய்யப்பட்டிருந்தால் மட்டுமே ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதியை பெறுவார்.
04. ஒப்பந்தத்திற்கான தகுதியை பெறுவதற்கான தேவைப்பாடுகளானது, 4 ஆம் பகுதியில் உள்ள தகுதி தகவல் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (ஆவண ஆதாரங்கள் இணைக்கப்பட வேண்டும்) மேலும் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
05. ஆர்வமுள்ள கேள்விமனுதாரர்கள், மேலதிக தகவல்களைப் பிரதான பொறியியலாளர் (சிவில்) பொறியியல் சேவைகள் திணைக்களம் (தொ.பேசி. இல. 0812203931) பெற்றுக் கொள்ளலாம். மேலும் கேள்விமனுக்கான ஆவணங்களை பரீட்சிப்பதற்கு, வேலை நாட்களில் மு.ப 09.00 மணி முதல் பி.ப 03.00 மணி வரை பொறியியல் சேவைகள் திணைக்களம் இல. 230/3, S.W.R.D. பண்டாரநாயக்க மாவத்தை, கண்டி எனும் முகவரியை அணுகலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விமனுதாரர்கள், 2024.08.12 ஆம் திகதியில் இருந்து 2024.09.02 ஆம் திகதி வரை மு.ப 09.00 மணி முதல் பி.ப 03.00 மணி வரை ஆங்கில மொழியிலான கேள்விமனு ஆவணங்களின் முழுமையான தொகுப்பினை, பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம், பிரதி பணிப்பாளர் (நிதி) இடம் இருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ.3000.00 இனை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். பணக்கொடுப்பனவானது ரொக்கப்பண வைப்பாகவிருத்தல் வேண்டும்.
07. கேள்விமனுவானது இரு பிரதிகளில் 2024.09.03 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தாமதமான கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும். கேள்விமனுவானது, கலந்து கொள்ள விரும்பும் கேள்விமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விமனு முடிவடைந்தவுடன் விரைவில் திறக்கப்படும்.
08. கேள்விமனுவானது, கேள்விமனு சமர்ப்பித்ததிலிருந்து 77 நாட்கள் வரை செல்லுபடியாகும்.
09. அனைத்து கேள்விமனுக்களும் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கான பிணையுத்தரவாதத்துடன் 2024.12.18 திகதிக்குள் செல்லுபடியாகும் வகையில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இன்றேல் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர் (நிதி) இடம் இருந்து பெற்றுக் கொண்ட அத்தொகையிற்கான பண வைப்பு ரசீதினை (Receipt) இணைத்தல் வேண்டும்.
10. கேள்விமனுக்கு முன்னதான கூட்டமொன்று 2024.08.28 ஆம் திகதியன்று மு.ப 10.00 மணியளவில் பின்வரும் முகவரியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

    பொறியியல் சேவைகள் திணைக்களம் (மத்திய மாகாணம்)
    இல.230/3, S.W.R.D. பண்டாரநாயக்க மாவத்தை, கண்டி

11. மத்திய மாகாண பொறியியல் சேவைகள் திணைக்களமானது எந்தவொரு கேள்விமனுவினையும் ஏற்றுக் கொள்வதற்கும், நிராகரிப்பதற்குமான உரிமையைக் கொண்டுள்ளதுடன் இச்செயற்பாட்டை இரத்துச் செய்யவும், ஏற்றுக் கொள்வதற்கு முன்னராகவே கேள்விமனுதாதருக்கு எந்தவொரு கடப்பாட்டையும் சுமத்தாமல் எந்த நேரத்திலும் அனைத்து கேள்விமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையையும் கொண்டுள்ளது.

| | வேலைகள் | நிர்மாண ஆகு செலவு | நிர்மாண காலம் நாட்களில் | தேவைப் படும் தரம் (CIDA பதிவு) | மீளளிக்கப்படும் விலைமனுப்பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | விலை மனுப் பிணையின் பெறுமதி (ரூபாவில்) | விலைமனுப் பிணைக்கான ரொக்கப்பண வைப்பின் பெறுமதி (ரூபாவில்) |
| 01 | நுவரெலியா சிங்கள் ட்ரி வீதியிலுள்ள விடுமுறை பங்களாவின் சீரமைப்புப் பணி (கேள்விமனு இல. CPC/CS/11/06/06/04/01/2024) | 12,000,000.00 | 10 | C5 or C6 | 240,000.00 | 120,000.00 |
| 02 | நத்தரம்பொத்த தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் சீரமைப்பு மற்றும் பராமரிப்புப் பணி (கேள்விமனு இல. CPC/CS/11/06/06/04/ 02/2024) | 10,000,000.00 | 10 | C6 or C7 | 200,000.00 | 100,000.00 |
| 03 | கண்டி ஸ்ரீ நாத தேவாலயத்தின் பாதுகாப்பு மேற்கூரையமைப்பு பணி (கேள்விமனு இல. CPC/CS/11/06/06/04/ 03/2024) | 8,130,000.00 | 10 | C6 or C7 | 160,000.00 | 80,000.00 |
| 04 | மத்திய மாகாண ஆளுநர் செயலகத்தில் வாகனத் தரிப்பிடம் (Garage), பாதுகாவலர் அறை (Security hut) உள்ளிட்ட தற்போதுள்ள கட்டிடத்தின் விரிவாக்கப் பணி (கேள்விமனு இல. CPC/CS/11/06/ 06/04/04/2024) | 17,650,000.00 | 10 | C5 or C6 | 350,000.00 | 175,000.00 |

மேலே குறிப்பிடப்பட்ட முகவரி :

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு**
**பொறியியல் சேவைகள் திணைக்களம் (மத்திய மாகாணம்)**
**இல. 230/3, S.W.R.D. பண்டாரநாயக்க மாவத்தை, கண்டி**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## அக்குறணை பிரதேச சபைக் கட்டிடத்தின் கூரையை நிர்மாணித்தல்

## ஒப்பந்த இலக்கம்: CPC/APS/D01/01

அக்குறணை பிரதேச சபை பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் வேலையை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) பதிவு சகிதமான தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2024 ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் மாதம் 02ஆம் திகதி வரையில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. தேசிய போட்டி ரீதியில் விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் ஒப்பந்தக்காரர்களின் பிராந்திய முன்னுரிமை விலைமனுக்களை மதிப்பிடுகையில் கவனத்திற் கொள்ளப்படும். (2016/iii அ.நி.சு. பிரகாரம்)

| வேலையின் பெயர் | பொறியியலாளர் அளவுப்பத்திர பெறுமதி ரூபா மில்லியன் (வெட் மற்றும் தற்செயலான செலவுகள் இன்றி) | தேவையான CIDA தரம் மற்றும் துறை | நிர்மாணக் காலம் நாட்கள் | விலைக் கோரல் பிணை முறித் தொகை ரூபா | | விலைக் கோரல் ஆவணக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) ரூபா |
|---|---|---|---|---|---|---|
| | | | | வங்கிப் பிணை முறியானால் | ரொக்கப் பணமானால் | |
| அக்குறணை பிரதேச சபைக் கட்டிடத்தின் கூரையை நிர்மாணித்தல் (கூரைக்கு கூரைத்தகடு இடல் மற்றும் உருக்கு வேலைகள்) | 13.0 | C5/C6 (கட்டிடங்கள்) | 90 | 195,000.00 | 97,500.00 | 6,000.00 |

1. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த சீடா (CIDA) பதிவு சகிதம் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாத வெற்றிகரமான, தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விலைமனுதாரர்கள் விலைக்கோரலைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவர்.
2. விலைமனுக்களை மதிப்பிடுகையில் பின்வரும் தகைமைகள் கவனத்திற் கொள்ளப்படும்.
   i. கடந்த ஐந்து (05) வருடங்களினுள் மேற்கூறிய வேலைகளுக்குச் சமமான 2 வேலைகளை நிறைவேற்றியிருத்தல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு வேலையினதும் குறைந்தபட்ச ஒப்பந்தப் பெறுமதி 9.1 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும். மேலும் ஒவ்வொரு வேலைகளினதும் 70% ஒப்பந்தக் காலத்தினுள் முடிவுறுத்தப்பட்டுள்ளன என உறுதி செய்தல் வேண்டும்.
   ii. கடந்த ஐந்து (05) வருடங்களினுள் ஒரு வருடத்தில் 30 மில்லியன் ரூபாவிற்குச் சமமான புரள்வை பேணிக்கொண்டிருத்தல் வேண்டும்.
3. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியைக் கொண்ட சிவில் வேலைகளுக்கு 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்துகொள்ள வேண்டும். (இல. 100, டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10) பதிவுச் சான்றிதழை இணைத்தல் வேண்டும்.
4. பெறுகை மாதிரிப் படிவங்களை 2024 ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் மாதம் 02ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான கடமை நேரத்தினுள் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அந்த வேலைக்குரிய மீளளிக்கப்படும் விலைக்கோரல் வைப்புத் தொகை மற்றும் விலைக்கோரல் ஆவணக் கட்டணம் 6,000.00 ரூபாவை செயலாளர், அக்குறணை பிரதேச சபைக்குச் செலுத்தி மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அதேபோல் 2024-08-12ஆம் திகதி முதல் 2024-09-02ஆம் திகதி வரையில் இலவசமாக விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட இரு பிரதிகளுடனான விலைமனுக்களை குறித்த பெறுகைக் குழுவிற்கு 2024 செப்டெம்பர் மாதம் 03ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்களில் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அந்த மூன்று உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த வேலையின் பெயரைக் குறிப்பிட்டு முத்திரைக்குறி பொறித்து, பெறுகைக் குழுவின் தலைவர், அக்குறணை பிரதேச சபை, அலவத்துகொட எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். மேலதிக விபரங்களை 066-2244387 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
6. விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்களாகும் என்பதுடன் விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் 2024 செப்டெம்பர் 31ஆம் திகதி வரையாகவிருத்தல் வேண்டும்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2024 ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அக்குறணை பிரதேச சபை அலுவலக இடப்பரப்பில் இடம்பெறும்.
8. 2024 செப்டெம்பர் மாதம் 03ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அக்குறணை பிரதேச சபை, அலவத்துகொட அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
9. இந்த விலைக்கோரல், ஒப்பந்தத்தை வழங்குதல், பகுதியை வழங்குதல் மற்றும் இரத்துச் செய்யும் இறுதித் தீர்மானத்தை அக்குறணை பிரதேச சபையின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**அக்குறணை பிரதேச சபை,**
**அலவத்துகொட.**
**தொலைபேசி இல. 066-2244387**

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
OBSERVER adZ TRUSTED CLASSIFIED GUIDE it's what you want
தினகரன் வாரமஞ்சரி
Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)
Any Single Newspaper Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Two Newspapers Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Three Newspapers Rs. 1,330/-
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 2 828 114 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

# பெறுகை அறிவித்தல்

## சுகாதார அமைச்சு

## பொது வைத்தியசாலை (போதனா) - கேகாலை

## மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

01. கேகாலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளரினால் பின்வரும் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக இதன்பொருட்டு தகைமை வாய்ந்த இலங்கையில் மருத்துவ உபகரணங்களை விற்பனை செய்வதற்கான வியாபாரப் பதிவுடன் கூடிய நிறுவனங்களிடமிருந்து 2024-09-04ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொ. இல. | பொருள் | தேவையான அளவு | கேள்விப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | ஒப்பந்த இலக்கம் |
|---|---|---|---|---|
| 01 | Cytotoxie Isolator | 01 | 415,500.00 | FG2/ME/02/2024 |
| 02 | Phaco Machine | 01 | 600,000.00 | FG2/ME/03/2024 |

02. கேள்வி ஆவணங்களை 2024-08-12ஆம் திகதி முதல் 2024-09-03ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் இதன்பொருட்டு பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
    (அ) கேகாலை பொது வைத்தியசாலை பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்தல்
    (ஆ) இந்த வைத்தியசாலையின் சிறாப்பருக்கு ஒரு கேள்வி ஆவணத்திற்காக மீளளிக்கப்படாத கட்டணமாக 5000.00 ரூபா செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு
    (இ) வியாபாரப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய புகைப்படப் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல்
03. கேள்விப் படிவங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனத் தயாரித்து வெவ்வேறான உறைகளில் இட்டு மீண்டும் அவ்விரு உறைகளையும் தனியொரு உறையில் இட்டு முத்திரைக் குறியிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் உபகரணத்தின் பெயரைக் கட்டாயம் குறிப்பிட்டு 2024-09-04ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இந்த நிறுவனத்தின் கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடலாம்.
04. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்பட்ட உடனடுத்து அதாவது 2024-09-04ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரநிதியின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
05. கேள்வி ஆவணங்களை இந்த அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
06. இது தொடர்பான கேள்வி முன்னோடிக் கூட்டம் 2024-08-20ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.
07. இந்த பெறுகை தொடர்பில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
08. இது தொடர்பிலான மேலதிக தகவல்களை கேகாலை பொது வைத்தியசாலை கணக்காளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 035-2223463

**பணிப்பாளர்,**
**பொது வைத்தியசாலை,**
**கேகாலை.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மேல் மாகாண, பொருளாதார அபிவிருத்தி பணியகத்தின் கீழுள்ள வெஸ்ப்ரோ அலுவலக சுற்றுச்சூழல் சுகாதார பராமரிப்பு சேவைக்காக இரசாயன மற்றும் வன்பொருட்களின் வழங்கலுக்கான பெறுகை

## ஒப்பந்த இல.: EDBWP/FIN/Cleaning/2024/2

1. மேல் மாகாண, பொருளாதார அபிவிருத்தி பணியகத்தின் கீழுள்ள வெஸ்ப்ரோ அலுவலக சுற்றுச்சூழல் சுகாதார பராமரிப்பு சேவைக்காக இரசாயன மற்றும் வன்பொருட்களின் வழங்கலுக்காக புகழ்பெற்ற, அனுபவமுடைய, அங்கீகாரம் பெற்ற உள்ளூர் விலைமனுதாரர்களிடம் இருந்து மே.மா. பொருளாதார அபிவிருத்தி பணியகத்தின் பெறுகைக் குழு சார்பில் அதன் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. விலைமனுவின் அடிப்படை தகைமை அளவுகோல் மற்றும் தேவைகள்
   - விலைமனுதாரர் செல்லுபடியான வர்த்தகப் பதிவு ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும் (வரையறுக்கப்பட்ட பொது நிறுவனம், வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம், கூட்டாண்மை அல்லது ஏக உரிமையாளர்)
   - விலைமனுதாரர் இரசாயன/ வன்பொருள் வழங்கல் வர்த்தகத்தில் ஈடுபட்டதில் குறைந்தது 3 (மூன்று) ஆண்டுகளின் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவை பெற்றிருத்தல் வேண்டும். (விலைமனுக்கள் மூடப்பட்ட திகதிக்கு மூன்று ஆண்டுகள் கணக்கிடப்படுதல் வேண்டும்)
   - விலைமனுதாரர் இரசாயனம்/ வன்பொருள் உருப்படிகளின் வழங்கலில் தொடர்புடைய தரச் சான்றிதழ்கள்/ தரவுப் பட்டியல்களை வைத்திருத்தல் வேண்டும்.
4. பணமாக மாத்திரம் செலுத்த முடியுமான மீளளிக்கப்படாத கட்டணத்தின் அடிப்படையில் 2024 ஓகஸ்ட் 12 ஆம் திகதி தொடக்கம் 2024 ஓகஸ்ட் 30 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 இற்கு இடையிலான காலத்தில் ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான விலைமனு ஆவணத் தொகுதி ஒன்றை கீழுள்ள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். மேலும் முன்வைக்கப்படும் அனைத்து விலைமனுக்களும் கீழுள்ளவாறு வங்கி பிணை ஒன்றாக வழங்கும் விலைமனு பிணை ஒன்றுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

| வகை | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | விலைமனு பிணை (ரூபா) |
|---|---|---|
| விலைமனு ஆவணங்கள் (A) - 34 இரசாயனப் பொருட்கள் | 2,500.00 | 30,000.00 |
| விலைமனு ஆவணங்கள் (B) - 83 வன்பொருட்கள் | 2,500.00 | 30,000.00 |

5. அனைத்து விலைமனுக்களும் விலைமனு ஆவணங்களுடன் தரப்பட்ட வடிவத்தை பயன்படுத்தி வங்கி உத்தரவாதம் ஒன்றின் வடிவத்தில் விலைமனு பிணைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
6. ஒவ்வொரு ஒப்பந்தமும் வழங்குவதற்கு தேர்வு செய்யப்படும் உருப்படிகளுக்காக வங்கி உத்தரவாதம் ஒன்றின் வடிவத்தில் செயற்றிறன் பிணை முறி ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும் (ஒப்பந்தம் வழங்கப்படும் கடிதத்தில் செயற்றிறன் பிணை முறியின் பெறுமதி குறிப்பிடப்படும்)
7. விலைமனுவை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியில் இருந்து 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்களை தயாரிப்பது அல்லது சமர்ப்பிப்பதுடன் தொடர்புபட்டு விலைமனுதாரர்களால் ஏற்படும் எந்த ஒரு செலவு அல்லது எந்த ஒரு இழப்புகளுக்கும் தொழில் வழங்குநர் பொறுப்பில்லை.
9. வழங்கல் ஒப்பந்தத்தின்படி, ஒப்பந்தம் வழங்கப்பட்ட பின் 12 மாத காலத்திற்காக பொருட்கள் வாங்கப்படும்.
10. தேர்வு செய்யப்படும் ஒப்பந்ததாரர் விலைமனு ஆவணங்களில் முன்வைக்கப்படும் விலைகளில் வெஸ்ப்ரோ அலுவலக சுற்றுச்சூழல் சுகாதார பராமரிப்பு சேவையில் தேவையின்படி 12 மாத காலத்திற்காக குறித்த பொருட்களை வழங்குதல் வேண்டும். (பொருட்களின் தேவை அடிப்படையில் வெவ்வேறாக கொள்வனவுக் கோரல்கள் வழங்கப்படும்)
11. மின்னணு முறையில் அனுப்பப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். இரு பிரதிகளிலான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024 செப்டெம்பர் 3 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு கீழ் தரப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கொழும்பு 10, மாளிகாவத்த, ஜயதிலக்க பிளேஸ், இல. 151/4, மே.மா. பொருளாதார அபிவிருத்தி பணியகம் (மே.மா.), நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என வெவ்வேறாக இரு பிரதிகளில் முத்திரை இடப்பட்ட உறைகளில் இட்டு அந்த உறைகளை மீண்டும் முத்திரை இடப்பட்ட ஒற்றை உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் பெறுகை பெயரை குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதித்து கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர் தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்ட பின் அவை உடன் திறக்கப்படும்.
12. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மே.மா. பொருளாதார அபிவிருத்தி பணியக, நிதிப் பிரிவில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2024 ஓகஸ்ட் 12 ஆம் திகதி தொடக்கம் 2024 ஓகஸ்ட் 30 ஆம் திகதி வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
13. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு மேல் மாகாண பொருளாதார அபிவிருத்தி பணியகத்தில் அமைந்துள்ள கூட்ட அறையில் 2024 ஓகஸ்ட் 26 ஆம் திகதி பி.ப. 02.00 இற்கு இடம்பெறும்.

**மேல் குறிப்பிடப்பட்ட முகவரியானது:**
**உதவிப் பணிப்பாளர் (நிதி)**
**பொருளாதார அபிவிருத்தி பணியகம் (மே.ம.)**
**இல. 151/4, ஜயதிலக்க பிளேஸ்,**
**மாளிகாவத்தை, கொழும்பு 10**

**அவசர இலக்கம்: 070-1100343**
**தொலைபேசி: 0112-335014/ 0112-322306/ 0112-421215**
**தொலைநகல்: 0112-448992**
**மின்னஞ்சல்: adfinance@edbwp.com**

# மாகாண கிரிக்கெட்: அஸ்–ஸிறாஜ் வித்தி. சம்பியனாக தெரிவு



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அக்கரைப்பற்று அஸ்ஸிறாஜ் மகா வித்தியாலய கிரிக்கெட் அணி மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மூன்று தினங்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை (10) ஆரையம்பதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் அக்கரைப்பற்று அஸ்ஸிறாஜ் மகா வித்தியாலய அணியும் கல்குடா நா மகள் மகா வித்தியாலய அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய அஸ்ஸிறாஜ் அணி 57 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நா மகள் மகா வித்தியாலய அணி 25 ஓட்டங்களை மாத்திரமே பெற்று இறுதிப்போட்டியில் தோல்வியை சந்தித்தது.

# அமெரிக்க, சீன ஆதிக்கத்துடன் பாரிஸ் ஒலிம்பிக் போட்டி நிறைவு

## அடுத்து 2028 ஆம் ஆண்டு லொஸ் ஏஞ்சல்ஸில்



பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக நடைபெற்று வந்த 33 ஆவது ஒலிம்பிக் போட்டி கோலாகலமான நிறைவு விழாவுடன் நேற்று முடிவுக்கு வந்தது.

கடந்த ஜுலை 26 ஆம் திகதி அரம்பமான பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் 206 நாடுகளைச் சேர்ந்த 10,714 வீர, வீராங்கனைகள் பங்கேற்றிருந்தனர். வழக்கம்போல் அமெரிக்காவுடன் சீனாவும் பதக்கப் பட்டியலில் ஆதிக்கம் செலுத்தின. அதிக பதக்கங்களை வென்ற நாடாக அமெரிக்கா இடம்பெற்றதோடு 100க்கும் அதிகமான பதக்கங்களை வென்ற ஒரே நாடாகவும் அது உள்ளது.

இதில் அதிக தங்கப்பதக்கங்களை வென்ற நாடுகள் வரிசையில் சீனாவும் அமெரிக்காவும் சரிசமமாக போட்டியிட்டன. இதில் நேற்று ஒரு சில போட்டிகள் எஞ்சி இருந்த நிலையில் சீனா 39 தங்கப் பதக்கங்களுடன் முதலிடத்திலும் அமெரிக்கா 38 தங்கப் பதக்கங்களுடன் இரண்டாவது இடத்திலும் காணப்பட்டன.

இம்முறை ஒலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பில் 6 வீர, வீராங்கனைகள் பங்கேற்றபோதும் ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் அருண தர்ஷன இரண்டாவது சுற்றுவரை முன்னேறிய போதும் மற்ற அனைவரும் ஆரம்ப சுற்றுடனேயே வெளியேறினார். அருண தர்ஷன இரண்டாவது சுற்றில் தகுதி இழந்து வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

கடைசி நாளான நேற்று (11) தடகளம், கூடைப்பந்து, கைப்பந்து, கரப்பந்து, மல்யுத்தம் உட்பட 9 விளையாட்டுகளில் 13 தங்கப்பதக்கத்துக்கான போட்டிகள் இடம்பெற்றன.

போட்டிகள் முடிவடைந்ததும் நிறைவு விழா 80 ஆயிரம் பேர் அமரும் வசதி கொண்ட ஸ்டேட் டீ பிரான்ஸ் மைதானத்தில் இலங்கை நேரப்படி நேற்று நள்ளிரவில் நடைபெற்றது. நிறைவு விழாவையொட்டி வீர, வீராங்கனைகளின் அணிவகுப்பு இடம்பெற்றது.

விழாவையொட்டி கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றதோடு நூற்றுக்கணக்கான கலைஞர்கள் கலந்து கொண்டு இசை, ஆட்டம், பாட்டம் என இரண்டு மணி நேரம் நிறைவு கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

முடிவில் 2028 ஆம் ஆண்டு அடுத்த ஒலிம்பிக் போட்டியை நடத்தும் லொஸ் ஏஞ்சல்ஸ் (அமெரிக்கா) நகர மேயர் கரென் பாஸ்சிடம் சர்வதேச ஒலிம்பிக் குழுவின் கொடி இறக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டது. அப்போது அமெரிக்க நாட்டின் தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன் அமெரிக்க நாட்டு குழுவினரின் இசை நிகழ்ச்சியும் சில நிமிடங்கள் நடைபெற்றது. கடைசியாக ஒலிம்பிக் போட்டி நிறைவடைந்ததை குறிக்கும் வகையில் எறிந்து கொண்டிருந்த ஒலிம்பிக் தீபம் அணைக்கப்பட்டது.

# இங்கிலாந்து பயணத்தில் இலங்கை பயிற்சி குழாத்தில் பெல் இணைப்பு



எதிர்வரும் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இலங்கை குழாத்தின் உதவி பயிற்சியாளராக இங்கிலாந்து முன்னாள் வீரர் இயன் பெல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து சூழ்நிலையை பழகிக்கொள்வதற்கு உள்ளூர் நிபுணர் ஒருவரின் உதவி தேவை என்று இலங்கை அணியின் இடைக்கால பயிற்சியாளர் சனத் ஜயசூரிய கோரிக்கை விடுத்த நிலையிலேயே இயன் பெல்லின் நியமனம் இடம்பெற்றுள்ளது.

இயன் பெல் இணைக்கப்பட்டிருப்பது இங்கிலாந்து மண்ணில் சோபிப்பதற்கு எதிர்பார்த்திருக்கும் இலங்கை அணி இங்கிலாந்து ஆடுகளங்கள் மற்றும் காலநிலையை பழகிக் கொள்வதற்கு உதவும் என்று உதிர்பார்க்கப்படுகிறது. இந்த டெஸ்ட் தொடர் 2023–25 டெஸ்ட் சம்பியன்சிப் பருவத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து அணியின் முன்னணி துடுப்பட்ட வீரர்களில் ஒருவரான இயன் பெல் இங்கிலாந்து அணிக்காக 118 டெஸ்ட் மற்றும் 161 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ளார்.

# இலங்கை அணி இங்கிலாந்து பயணம்



இங்கிலாந்துக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடுவதற்காக இலங்கை அணி நேற்று (11) இங்கிலாந்தை நோக்கி பயணித்தது.

எதிர்வரும் ஒகஸ்ட் 21 ஆம் திகதி ஆரம்பமாகும் இந்த டெஸ்ட் தொடருக்காக ஏற்கனவே அணித் தலைவர் தனஞ்சய டி சில்வா, திமுத் கருணாரத்ன மற்றும் அஞ்சலோ மத்தியூஸ் உட்பட எட்டு வீரர்கள் இங்கிலாந்து சென்றிருக்கும் நிலையிலேயே டெஸ்ட் குழாத்தில் இடம்பெற்றிருக்கும் எஞ்சிய வீரர் நேற்று பயணத்தை மேற்கொண்டனர்.

முன்னதாக இலங்கை அணி எதிர்வரும் ஒகஸ்ட் 14 ஆம் திகதி ஆரம்பமாகும் நான்கு நாள் பயிற்சிப் போட்டி ஒன்றில் ஆடவுள்ளது. தொடர்ந்து மான்செஸ்டரில் நடைபெறும் முதல் டெஸ்ட் போட்டியை அடுத்து ஒகஸ்ட் 29 ஆம் திகதி லோட்ஸில் இரண்டாவது டெஸ்ட் போட்டி ஆரம்பமாகவுள்ளதோடு இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி செப்டெம்பர் 6 ஆம் திகதி ஓவலில் ஆரம்பமாகவுள்ளது.

# சர்வதேச செய்திகள்

# 100 பேரை கொன்ற பாடசாலை தாக்குதலின் பின் காசாவில் இஸ்ரேல் புதிய வெளியேற்ற உத்தரவு

## இரவோடு இரவாக மக்கள் ஓட்டம்: பேச்சுவார்த்தையிலும் சிக்கல்



காசாவின் தெற்கு நகரான கான் யூனிஸில் இஸ்ரேலின் வெளியேற்ற உத்தரவு விரிவுபடுத்தப்பட்ட நிலையில் அங்குள்ள மக்கள் செல் குண்டு வீச்சுகள் மற்றும் வெடிப்பு சத்தங்களுக்கு மத்தியில் இரவோடு இரவாக வெளியேற ஆரம்பித்துள்ளனர்.

கான் யூனிஸில் இருந்து காசாவில் ஆட்சியில் இருக்கும் ஹமாஸ் அமைப்பு ரொக்கெட் தாக்குதல்களை நடத்திய நிலையில் அந்தக் குழுவின் போராளிகளை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது.

காசா நகரில் இடம்பெயர்ந்த பலஸ்தீனர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் பாடசாலை ஒன்றின் மீது இஸ்ரேல் கடந்த சனிக்கிழமை நடத்திய வான் தாக்குதலில் 100க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதாக காசா சிவில் பாதுகாப்பு சேவை குறிப்பிட்டது. இந்தத் தாக்குதல் சர்வதேச அளவில் கண்டனத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் கட்டளையகம் ஒன்றை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியதாகவும் இதில் 19 போராளிகள் கொல்லப்பட்டதாகவும் இஸ்ரேல் கூறியதை அந்த இரு அமைப்புகளும் நிராகரித்துள்ளன.

தெற்கில் கான் யூனிஸ் நகரின் மத்திய, கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளை உள்ளக்கியதாக இஸ்ரேலின் புதிய வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கடந்த 11 மாதங்களாக நீடிக்கும் போரில் பெரும் பகுதியை உள்ளடக்கிய வெளியேற்ற உத்தரவாக இது உள்ளது. நகரின் கிழக்கு பகுதிக்கு டாங்கிகள் திரும்பி இரு நாட்களின் பின்னரே இந்த உத்தரவு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எக்ஸ் சமூகதளத்திலும் குடியிருப்பாளர்களுக்கு குறுஞ்செய்தி மற்றும் ஓடிய செய்தியாக இந்த உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது. 'உங்களது சொந்த பாதுகாப்புக்காக புதியதாக உருவாக்கப்பட்ட மனிதாபிமான வலயத்திற்கு உடன் வெளியேறிச் செல்லுங்கள். நீங்கள் இருக்கும் பகுதி அபாயகரமான போர் வலயமாக கருதப்படுகிறது' என்று அதில் கூறப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் சுமார் 30 ஹமாஸ் இராணுவ இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. இதில் இராணுவ உட்கட்டமைப்புகள், டாங்கி எதிர்ப்பு ஏவுகணை வீசும் நிலைகள் மற்றும் ஆயுதக் களஞ்சிய வசதிகள் உள்ளங்குவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கான் யூனிஸின் கிழக்கு பகுதியில் முன்னேறிய இஸ்ரேலிய துருப்புகள் மீது தமது போராளிகள் மோட்டார் குண்டுகளைக் கொண்டு தாக்குதல் நடத்தியதாக இஸ்; லாமிய ஜிஹாத் அமைப்பு குறிப்பிட்டுள்ளது. தொடர்ந்து நேற்று பின்னேரம் கான் யூனிஸின் மத்திய பகுதியில் உள்ள சந்தைக்கு அருகில் நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் நான்கு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக மருத்துவ வட்டாரம் தெரிவித்துள்ளது.

நகரின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல்களை அடுத்து அங்கு கறும்புகை வானை முட்டியது. இரு அடுக்குமாடி கட்டடங்களை இஸ்ரேல் தாக்கியதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காசாவின் 2.3 மில்லிய மக்கள்தொகையில் அதிகப் பெரும்பான்மையானவர்கள் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டிருப்பதோடு அந்த குறுகிய நிலப்பகுதி பொரும்பாலும் இடிபாடுகளாக மாற்றப்பட்டுள்ளது.

காசாவின் எந்த இடமும் பாதுகாப்பானதாக இல்லை என்று பலஸ்தீன மற்றும் ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். குடிமக்கள் அனுப்பப்பட்ட மேற்குக் கான் யூனிஸில் உள்ள அல் மவாசி போன்ற பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்ட பகுதிகளும் இஸ்ரேலிய படைகளால் பல தடவைகள் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இஸ்ரேலின் உத்தரவை அடுத்து நேற்று முன்தினம் இரவில் ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகள் மற்றும் தற்காலிக முகாம்களில் இருந்து மேற்குப் பக்கமாக மவாசி மற்றும் வடக்கு பக்கமாக டெயிர் அல் பலாவை நோக்கி தப்பிச் செல்ல ஆரம்பித்தனர். இந்தப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான மக்கள் அடைக்கலம் பெற்று நிரம்பி வழிகின்றனர்.



'நாம் சோர்வடைந்துள்ளோம். நான் மற்றும் எனது குடும்பத்தினர் தற்காலிக முகாம்களில் இருந்து வெளியேறிச் செல்வது இது 10 ஆவது முறையாகும்' என்று மேற்குக் கான் யூனிஸில் ஹமாத் வீட்டு தொகுதியில் இருந்து வெளியேறிய 28 வயது சக்கி முஹமது ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

'மக்கள் தமது உடைமைகள் மற்றும் குழந்தைகளை சுமந்தபடி புதிய எதிர்பார்ப்புகள் மற்றும் அச்சத்திற்கு மத்தியில் தெரியாத இடங்களை நோக்கி ஓட்டம் பிடித்து வருகின்றனர். ஏனென்றால் இங்கு எந்த இடமும் பாதுகாப்பானதாக இல்லை' என்று சாட் செயலி வழியாக பேசிய அவர் மேலும் குறிப்பிட்டார். 'நாம் மரணத்தில் இருந்து மரணத்தை நோக்கி ஓடி வருகிறோம்' என்றார்.

இதேவேளை காசா போரில் மற்றொரு பயங்கரத் தாக்குதலாக கடந்த சனிக்கிழமை அதிகாலையில் காசா நகரில் உள்ள அல் தபீ சமயப் பாடசாலை மற்றும் பள்ளிவாசல் மீது இஸ்ரேல் சரமாரி தாக்குதல்களை நடத்தியதை அடுத்து சடலங்கள் துண்டு துண்டாக சிதறிக்கப்பட்டுள்ளன.

எனினும் அண்மைய நாட்களில் இஸ்ரேலின் இவ்வாறான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

கடந்த ஜூலை 6 தொடக்கம் காசாவில் மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் குறைந்தது 16 பாடசாலைகள் இஸ்ரேலின் தாக்குதல்களுக்கு இலக்காகி 280இற்கு அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

'பெண்கள், சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் என அமைதியான மக்கள் வழக்கமான முறையில் அதிகாலை தொழுகையில் ஈடுபட்டிருந்தபோது திடீரென்று அவர்கள் மீது ஏவுகணை ஒன்று விழுந்துள்ளது' என்று தாக்குதல் இடம்பெற்ற பகுதிக்கு அருகில் வசித்து வந்த அபூ வசீம் என்பவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் குறிப்பிட்டுள்ளார்.

உடல்களை அடையாளம் காண முடியாத அளவுக்கு அவைகள் சிதைந்து காணப்படுவதாக அங்கிருக்கும் மற்றொருவர் குறிப்பிட்டுள்ளார். பாடசாலையின் இரு மாடிகளே நேரடியாக இலக்கு வைக்கப்பட்டிருப்பதாக காசா சிவில் பாதுகாப்பு நிறுவனத்தின் பேச்சாளர் மஹ்மூத் பசல் தெரிவித்துள்ளார்.

பெண்கள் மற்றும் சிறுவர்கள் தங்கி இருந்த கட்டடத்தின் மேல் மாடி மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் தொழுவதற்கு பயன்படுத்திய தரைத்தளம் ஆகியவையே தாக்குதலுக்கு இலக்காகி உள்ளன என்று அவர் கூறினார்.

எதிர்வரும் ஒகஸ்ட் 15 ஆம் திகதி காசா போர் நிறுத்த பேச்சுவார்த்தை ஒன்றுக்கு அமெரிக்கா, எகிப்து மற்றும் கட்டார் ஆகிய மத்தியஸ்தம் வகிக்கும் நாடுகள் விடுத்த அழைப்புக்கு இஸ்ரேல் இணக்கத்தை வெளியிட்ட நிலையிலேயே இந்த பயங்கர தாக்குதலை அது நடத்தியுள்ளது. இது பேச்சுவார்த்தையை மேலும் சிக்கலாக்கும் என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலை அடுத்தே காசாவில் போர் வெடித்ததோடு இதுவரை அங்கு கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை தற்போது 40,000ஐ நெருங்கியுள்ளது.

# இஸ்ரேலுக்கு அமெரிக்கா மேலும் ஆயுத உதவிகள்



காசா போர் நீடிக்கும் நிலையில் அமெரிக்க தயாரப்பு ஆயுதங்கள் மற்றும் இராணுவ உபகரணங்களுக்கு செலவு செய்வதற்காக இஸ்ரேலுக்கு மேலதிகமாக 3.5 பில்லியன் டொலர்களை அமெரிக்கா வழங்கவுள்ளது.

இஸ்ரேலுக்கு பல பில்லியன் டொலர்கள் பெறுதியான வெளிநாட்டு இராணுவ நிதியை விடுவிக்க அமெரிக்க நிர்வாகம் திட்டமிட்டுள்ளது என்று அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களம் கொங்கிரஸ் அவைக்கு அறிவித்துள்ளது.

கடந்த ஏப்ரலில் கொங்கிரஸினால் நிறைவேற்றப்பட்ட இஸ்ரேலுக்கான 14.5 பில்லியன் டொலர் கூடுதல் நிதி சட்டத்தில் இருந்து இந்த நிதி விடுவிக்கப்படுவதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிதியின் ஓர் அங்கம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் பலஸ்தீனர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதாக குற்றம்சாட்டப்படும் இஸ்ரேலிய இராணுவப் பிரிவுக்கு வழங்கப்படவுள்ளது. இந்த இராணுவப் பிரிவுக்கு அமெரிக்கா தடை விதித்திருந்த நிலையில் இதன் செயற்பாடுகள் திருப்தி அளிப்பதாக உள்ளது என்று அமெரிக்க இராஜாங்க திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒகஸ்ட் மாதம் 12ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# சுகாதார அமைச்சு

## Procurement of 50 Nos. Portable Ultrasound Scanners
ஒப்பந்த இல. BES/PE/Plan/2024/09

மற்றும்

## Supply, Delivery, Installation, Commissioning & Maintenance of 01 No. CT Scanner (128 Slices)
ஒப்பந்த இல. BES/PG/Plan/2024/03

1. கீழே குறிப்பிடப்பட்ட மருத்துவ சாதனங்களின் வழங்கலுக்கான முத்திரை பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கொழும்பு 10, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, இல. 26, மெடி ஹவுஸ் கட்டிடம், 2ஆம் மாடியிலுள்ள சுகாதார அமைச்சின் பெறுகைக் குழு **“A”** தலைவரினால் கீழே தரப்பட்டுள்ள முடிவுறுத்தல் திகதியில் மு. ப. 10.00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும்.

| | உருப்படி | கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் காலப்பகுதி | | முடிவுறுத்தல் திகதி | MOH அலுவலகத்தில் செலுத்த வேண்டிய மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) | மதிப்பீட்டுச் செலவு (ரூபா) (மில்லியன்) |
|---|---|---|---|---|---|---|
| | | இருந்து | வரை | | | |
| 1 | 50 Nos. Portable Ultrasound Scanners | 2024-08-12 | 2024-09-02 | 2024-09-03 | 35,000.00 | 250 |
| 2 | Supply, Delivery, Installation, Commissioning & Maintenance of 01 No. CT Scanner (128 Slices) | 2024-08-12 | 2024-09-02 | 2024-09-03 | 35,000.00 | 250 |

2. இலங்கை சந்தைக்கென முன்வைக்கப்பட்ட சாதனங்களைத் தயாரிப்பவர்களினால் ஏக நியமனம் பெற்ற பிரதிநிதியாக/ அங்கீகாரம்பெற்ற முகவராக உள்ளவர்கள் மட்டுமே இந்த விலை கூறலில் பங்குபற்றுவதற்கு தகுதியுடையவர்கள் ஆவர்.
3. முத்திரை பொறிக்கப்பட்ட முழுமையான நகல் பிரதி சகிதம் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணத் தொகுதியை மேற்குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் கொழும்பு -10, இல. 26, மெடி ஹவுஸ் கட்டிடம், 2ஆம் மாடி, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, சுகாதார அமைச்சு, மேலதிக செயலாளரிடமிருந்து (பெறுகைகள்) எந்தவொரு ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.

   (தொ. இல. 011-2112713, 2112715 - தொலைநகல்: 011-2112745)
4. கேள்வியின் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் கொழும்பு -10, இல. 26, மெடி ஹவுஸ் கட்டிடம், 2ஆம் மாடி, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, சுகாதார அமைச்சு, மேலதிக செயலாளரிடமிருந்து (பெறுகைகள்) அலுவலகத்தின் உடன் திறக்கப்படும்.
5. கேள்வி ஆவணங்களை கொழும்பு -10, இல. 26, மெடி ஹவுஸ் கட்டிடம், 2ஆம் மாடி, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, சுகாதார அமைச்சு, மேலதிக செயலாளரிடமிருந்து (பெறுகைகள்) அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. சகல கேள்விதாரர்களினாலும் 3,750,000.00 ரூபாவிற்கான கேள்விப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பிணை முறியானது முடிவுறுத்தல் திகதியிலிருந்து 2024-12-30ஆம் திகதி (119 நாட்கள்) வரையில் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் அது கொழும்பு-10, இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, சுகாதார அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.
7. மேலதிக தகவல்களை சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் (பெறுகைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல: 011-2112713.
8. கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று 2024-08-20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், சுகாதார அமைச்சு, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் / DDG அலுவலகத்தில் இடம்பெறும்.

**தலைவர்,**
**அமைச்சின் கொள்வனவுக் குழு “A”**
**சுகாதார அமைச்சு,**
**02ஆம் மாடி, இல. 26, மெடி ஹவுஸ் கட்டிடம்,**
**சங்கராஜ மாவத்தை,**
**கொழும்பு 10.**

# உயர்ந்த சம்பளத்துடன் கூடிய
# இஸ்ரேல் நிர்மாணத்துறையில் தொழில் வாய்ப்பு

இஸ்ரேல் அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைய இஸ்ரேல் நிர்மாணத்துறையில் கீழ் வரும் தொழில் வாய்ப்புகளுக்கு பரீட்சை கள் நடத்தப்படும்.

**அ.டொ. 1500/- விட அதிக சம்பளம்**

- ஷட்டரின் கார்பெண்டர்
- கம்பி கட்டுவோர்
- டயில் பிடிப்போர்
- சீமெந்து பூச்சு செய்வோர்

**வயது 25 - 44 இடைப்பட்ட**

நிர்மாணத்துறையில் மேற்குறிப்பிட்ட தொழில்கள் தொடர்பில் அனுபவம் வாய்ந்த ஆண் தொழிலாளர்கள் இந்த பரீட்சைக்காக நேரடியாக சமூகமளிக்க சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

இந்த தொழில் தொடர்பான ஆரம்பப் பரீட்சை
**ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வரை**
**காலை 8.00 முதல்**
மொரட்டுவ கட்டுபெத்த NAITA நிறுவனத்தில் நடைபெறும்.

ஆரம்பப் பரீட்சைக்காக தோற்றுவதற்கு 6000.00 அறவிடப்படும். அதற்காக தோற்றம் உத்தேசிக்கும் விண்ணப்பதாரர்கள் தொழிலுக்குத் தேவையான உபகரணங்கள்,பாதுகாப்பு உபகரணங்கள் (ஹெல்மெட், ப்ரவிஸ் மற்றும் கைக்கவசம்) மற்றும் வெளிநாட்டு கடவுச்சீட்டு என்பவற்றை எடுத்து வர வேண்டும்.

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்**
அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்பு
www.slbfe.lk

# கமத்தொழில் அமைச்சு

SAOP Smallholder Agribusiness & Resilience Project — IFAD Investing in rural people

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB 01)

**புத்தளம் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டிணைவுடன் சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழுதல் செயற்றிட்டம் (SARP)**

**IFAD Loan No: 2000003227**

1. சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழுதல் செயற்றிட்டத்தின் (SARP) செலவை நோக்கி விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திடம் (IFAD) இருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு, புத்தளம் மாவட்டத்திலுள்ள ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் சிறு நீர்ப்பாசன திட்டங்களை புனரமைப்பதற்கான ஒப்பந்தங்களின் கீழான கொடுப்பனவுகளுக்கு இந்த கடனின் பகுதியை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. அளவுப் பத்திர அடிப்படையில் ஒவ்வொரு மற்றும் அனைத்து திட்டங்களுக்காகவும் (ஒப்பந்தம்) ஒவ்வொன்றிற்கும் ஒரு விலைமனுவாக இருக்கும் வகையில் 09 சிறிய நீர்ப்பாசன திட்டத்தின் புனரமைப்பை நிறைவேற்றுதல் மற்றும் பூர்த்தி செய்வதற்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து தொழில் வழங்குநரான “புத்தளம் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள அலுவலகம்” (செயற்படுத்துதல்) முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன. கீழுள்ள அட்டவணையில் விபரங்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

| இல. | சுருக்கமான வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரிகள் தவிர்த்து) (மில்.) | குறைந்தபட்ச CIDA தரத் தேவைப்பாடு | நிர்மாணக் காலம் | விலைக் கோரல் பிணைத் தொகை (இல. ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | மகாகூரத்னஹேன குளத்தை புனரமைத்தல் | 11.08 மில். | C6 மற்றும் C5 நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்பு | 6 மாதங்கள் | 180,000.00 |
| 2 | சியம்பளவத்த மகா குளத்தை புனரமைத்தல் | 7.47 மில். | C7 மற்றும் C6 நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்பு | 6 மாதங்கள் | 120,000.00 |
| 3 | இல்லபத்துகஹ குளத்தை புனரமைத்தல் | 9.02 மில். | C7 மற்றும் C5 நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்பு | 6 மாதங்கள் | 140,000.00 |
| 4 | மஹதம்மன்னாவ குளத்தை புனரமைத்தல் | 5.33 மில் | C7 மற்றும் C6 நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்பு | 6 மாதங்கள் | 80,000.00 |
| 5 | மிரிஸ்யாய குளத்தை புனரமைத்தல் | 7.21 மில். | C7 மற்றும் C6 நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்பு | 6 மாதங்கள் | 110,000.00 |
| 6 | மெதகம இஹல குளத்தை புனரமைத்தல் | 8.79 மில். | C7 மற்றும் C6 நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்பு | 6 மாதங்கள் | 140,000.00 |
| 7 | நவதல்ல குளத்தை புனரமைத்தல் | 12.76 மில். | C6 மற்றும் C5 நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்பு | 6 மாதங்கள் | 200,000.00 |
| 8 | இஹல பத்தினிலமா குளத்தை புனரமைத்தல் | 9.33 மில். | C7 மற்றும் C6 நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்பு | 6 மாதங்கள் | 140,000.00 |
| 9 | குடா தம்மன்னாவ குளத்தை புனரமைத்தல் | 9.39 மில். | C7 மற்றும் C6 நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்பு | 6 மாதங்கள் | 140,000.00 |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) மூலம் விலைக்கோரல் நடத்தப்படும். ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான CIDA பதிவை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்திற்கான தகுதிக்கு தேவையான தகைமைகள் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது.

| இல. | சிறு நீர்ப்பாசன திட்டத்தின் பெயர் (குளங்கள்) | கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகளின் இருக்க வேண்டிய வருடாந்த சராசரி அளவு (மில்லியனில் இ.ரூபா) | கடந்த 5 ஆண்டுகளில் பின்வரும் பெறுமதிகளுக்குக் குறையாத இதற்கு நிகரான தன்மை மற்றும் சிக்கல் தன்மை கொண்ட ஆகக் குறைந்தது ஒரு ஒப்பந்த நிர்மாணத்தின் அனுபவம் (இந்த வேலையில் குறைந்தது 70 வீதம் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்) (மில்லியனில் இ.ரூபா) |
|---|---|---|---|
| 1 | மகாகூரத்னஹேன குளத்தை புனரமைத்தல் | 35 மில். | 11 மில். |
| 2 | சியம்பளவத்த மகா குளத்தை புனரமைத்தல் | 30 மில். | 10 மில். |
| 3 | இல்லபத்துகஹ குளத்தை புனரமைத்தல் | 30 மில். | 10 மில். |
| 4 | மஹதம்மன்னாவ குளத்தை புனரமைத்தல் | 18 மில். | 09 மில். |
| 5 | மிரிஸ்யாய குளத்தை புனரமைத்தல் | 30 மில். | 10 மில். |
| 6 | மெதகம இஹல குளத்தை புனரமைத்தல் | 30 மில். | 10 மில். |
| 7 | நவதல்ல குளத்தை புனரமைத்தல் | 36 மில். | 12 மில். |
| 8 | இஹல பத்தினிலமா குளத்தை புனரமைத்தல் | 30 மில். | 10 மில். |
| 9 | குடா தம்மன்னாவ குளத்தை புனரமைத்தல் | 30 மில். | 10 மில். |

| | |
|---|---|
| (ஒரு திட்டம்/ குளத்திற்கு) அவசியமான குறைந்தபட்ச உபகரணங்களை (சொந்தமானது, குத்தகை, வாடகை போன்றன) சரியான நேரத்தில் கையகப்படுத்துவதற்கான முன்மொழிவுகள் | அகழ்வு இயந்திரம் - 3, டிப்பர் - 2, இழுவை பெட்டிகளுடனான உழவு இயந்திரம் – 5, கொங்கிறீற் கலவை இயந்திரம் - 1 - Poker Vibrator 1 – 6 தொன்னுக்கு குறையாத Vibrating compactor - 1, தண்ணீர் பௌசர் - 1, D4E அல்லது அதற்கு மேல் டோசர் - 1 |
| (ஒரு திட்டம்/ குளத்திற்கு) தேவையான குறைந்தபட்ச ஆளணியினர் | 1. நீர்ப்பாசனத் துறையில் ஆகக் குறைந்தது 3 ஆண்டுகள் அனுபவத்துடன் BSc பொறி. பட்டம் அல்லது அதற்கு இணையான தகைமையை பெற்ற தகுதி வாய்ந்த வேலைத்தள பொறியியலாளர்.<br>2. நீர்ப்பாசனத் துறையுடன் ஏழு ஆண்டுகள் அனுபவத் தகைமையுடன் NCT அல்லது இரண்டு ஆண்டுகளுடன் NDT அல்லது அதற்கு இணையான தகைமையைக் கொண்ட தொழில்நுட்ப அதிகாரி.<br>3. நீர்ப்பாசன துறையில் ஆகக் குறைந்தது 5 ஆண்டுகள் வேலை அனுபவத்துடன் ஒரு வேலை மேற்பார்வையாளர் |

5. இந்த கேள்விகோரலில் பதிலிறுக்க விரும்பும் அனைத்து தகுதியுள்ள கேள்விதாரர்களும் பங்குபற்றலாம். கேள்விக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு வரையறைகளுக்கு உட்பட்டதாக மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு CIDA பதிவின் தகைமைத்தேவைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். ஆர்வமும் தகுதியுமுடைய விலைமனுதாரர்கள் சிலாபம், குருநாகல் வீதி, கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் புத்தளம் மாவட்ட அலுவலகத்திலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் எந்த ஒரு வேலை நாளிலும் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை அதே இடத்தில் விலைமனு ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம். (தொ.பே. 0322222596, மின்னஞ்சல்: put.agrarianacct@yahoo.com)
6. ஆர்வமுடைய விலைமனுதாரர்களை மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500.00 ரூபாவை செலுத்தியதன் பின் 2024 ஆகஸ்ட் 13ஆம் திகதி முதல் 2024 ஆகஸ்ட் 30ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை சிலாபம், குருநாகல் வீதி, கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் புத்தளம் மாவட்ட அலுவலகத்தின் உதவி ஆணையாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை சிலாபம், குருநாகல் வீதி, கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் புத்தளம் மாவட்ட அலுவலகத்தின் கணக்கியல் பிரிவு / காசாளருக்கு ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும் அல்லது சிலாபம், குருநாகல் வீதி, கமநல அபிவிருத்தித் திணைக்களம், உதவி ஆணையாளரின் பெயரில் வரையப்பட்ட அரசாங்க வங்கி வரைவாகவிருத்தல் வேண்டும்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024 ஆகஸ்ட் 22ஆம் திகதி சிலாபம், குருநாகல் வீதி, கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் புத்தளம் மாவட்ட அலுவலகத்தில் இடம்பெறும். இதில் பங்கேற்பது கட்டாயம் இல்லாதபோதிலும், விலைமனுதாரர்கள் இதில் பங்கேற்பதற்கு ஊக்குவிக்கப்படுவதோடு, விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்திற்கு முன்னர் விலைமனுதாரர்கள் வேலைத்தள விஜயமொன்றை சொந்தமாக ஏற்பாடு செய்தல் வேண்டும்.
8. விலைக்கோரல்கள் விலைமனு தரவு தாளில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு 23.1 என்ற கேள்விதாரர்களுக்கான அறிவுறுத்தல்களுக்கமைவான முறையில் 2024 செப்டெம்பர் 04ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பிந்தாமல் வழங்கப்பட்டுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதை கருத்தில் கொள்ளவும்.
9. தாமதமான விலைக்கோரல்கள் எச்சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதையும் விலைமனுதாரரின் எழுத்து மூலமான விண்ணப்பம் மற்றும் கிரயச் செலவில் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படுமென்பதையும் விலைமனுதாரர் அறிந்து கொள்ளவும். அனைத்து விலைக்கோரல்களுடனும் இங்கே மற்றும் விலைமனு தரவுத் தாளில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் விலைக்கோரல் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதி ஆணையாளர்,**
**கமநல அபிவிருத்தித் திணைக்கள புத்தளம் மாவட்ட அலுவலகம்,**
**குருநாகல் வீதி,**
**சிலாபம்.**

## காணி சுவீகரிப்புச் சட்டம் (அத்தியாயம் – 460) பிரிவு 39 அ (1)இன் கீழ் காணி சுவீகரிப்பு சட்டத்தினை இரத்துச் செய்தமை தொடர்பான அறிவித்தல்

காணி சுவீகரிப்பு சட்டத்தின் 38ஆம் பிரிவின் (அ) உப பிரிவின் கீழ் பிரகடனம் செய்யப்பட்ட 1861/6 இலக்கமுடைய மற்றும் 2014.05.05ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் அறிவித்தல் செய்யப்பட்ட 2014ஆம் இலக்க 94இல் 2014.05.05ஆம் திகதியிடப்பட்ட சரத்தின் ஆணையின்படி கீழ் குறிப்பிடப்படுகின்ற உப பிரிவில் மிக விபரமாக கூறப்பட்டுள்ள காணித்துண்டு இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு உரிமையான ஒன்றாகும்.

எனினும் கௌரவ சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜுட் ஹரின் பெர்னாண்டோ அவர்களினால் காணி சுவீகரிப்பு சட்டம் 39(1) பிரிவின் ஊடாக அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை கொண்டு மேற்படி இலக்கமுடைய 1861/6 மற்றும் 2014.05.05 அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2014ஆம் இலக்கம் 94இல் குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணை 1இல் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை மாத்திரம் 2395/27 மற்றும் 2024.07.31ஆம் திகதியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானியின் கீழ் மாற்றீடு செய்யப்படும் சட்டத்தின் கீழ் 39 அ(1) சரத்தின் கீழ் இத்தால் அறிவித்தல் செய்கிறேன்.

**அட்டவணை**

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவில், இல. 535 D. நுவரெலியா மத்திய கிராம உத்தியோகத்தர் பிரிவில், நுவரெலியா (பிரிவு இல. 7 நுவரெலியா மாநகர சபை எல்லைக்குள்) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட பி.பி.நு. 1840 2021.09.06ஆம் திகதிய ஆரம்ப வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட காணித்துண்டுகளின் எல்லைகள்.

1. துண்டு இல. 1 - ஒக்லி கொட்டேஜ் - விஸ்தீரணம் : 5.2639 ஹெக்டயார்

   **வடக்கு**: பி.பி.நு 216 இல் துண்டு 3 மற்றும் 1
   **கிழக்கு:** பி.பி.நு 216 இல் துண்டு 1, உவ 188106, உவ 221104, அரசு உரிமைகோரும் ஒக்லி தரிசு நிலம் பி.பி.நு. 986இல் துண்டு 1 மற்றும் அப்ப லேக் றோட்
   **தெற்கு:** அப்ப லேக் றோட்
   **மேற்கு:** அப்ப லேக் றோட் புரும் பீல்ட் மாவத்தை மற்றும் உவ 48027

2. துண்டு இல. 2 - ஒக்லி கொட்டேஜ் - விஸ்தீரணம்: 0.6542 ஹெக்டயார்
   **வடக்கு:** அப்ப லேக் றோட்
   **கிழக்கு:** அப்ப லேக் றோட் மற்றும் துண்டு 3
   **தெற்கு:** துண்டு 3 மற்றும் பாதை
   **மேற்கு**: பாதை மற்றும் உவ 48027

**டி.ஏ.பி. தனன்சூரிய,**
**பிரதேச செயலாளர்,**
**நுவரெலியா.**

2024.08.08ஆம் திகதி
**நுவரெலியா பிரதேச செயலக காரியாலயத்தில்**




## விலைமனுக்களுக்கான அழைப்பு

## சிவில் வேலைகள்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, மட்டக்களப்பு

1. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) முறைமூலம் விலைக்கேட்பு நடத்தப்படும். 04/2016 (iii) இன் பொது நிதி சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டவாறு இந்த பெறுகையின் கீழ் மேற்கொள்ளவிருக்கும் மதிப்பிடப்படும் பெறுமதி 5 மில். ரூபாவுக்கு (வெட் மற்றும் மற்ற வரிகள் தவிர்த்து) குறைவாக இருக்கும் வரை பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தரம் பொருந்தும்.
2. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் கட்டிட நிர்மாணத்தில் ICTAD (தற்போது CIDA) வின் அட்டவணை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுடைய விலைமனுதாரர் மட்டக்களப்பு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் வேலை நாட்களில் 15.00 மணி வரை அலுவலக நேரங்களில் மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
4. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகைமைக்குத் தேவையான தகுதியில் பின்வரும் அளவுகோல்களும் உள்ளடங்கும்,
   a) விலைமனுதாரர்கள் மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் இருந்து விலைமனு தொகையின் 30% இற்காக கடன் வசதியை சமர்ப்பித்தல் வேண்டும்.
   b) விலைமனுதாரர்கள் விலைமனு தொகையின் 70% இற்கு குறையாத கடந்த 3 ஆண்டுகளில் இதனையொத்த பண்புடைய குறைந்தது ஒரு ஒப்பந்தத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   c) இந்த ஒப்பந்தத்தில் மேற்கொள்ளப்படக்கூடிய எந்த ஒரு முற்கொடுப்பனவுகளையும் தவிர்த்து ஏனைய ஒப்பந்தக் கடப்பாடுகளின் திரவச் சொத்துகள் மற்றும்/ அல்லது கடன் வசதிகள் கேள்வியிடப்படக்கூடிய தொகையின் 30% இற்கு குறையாதிருத்தல் வேண்டும். விலைமனு திறக்கப்படும் திகதியில் இருந்து குறைந்தது 03 மாத காலத்தில் வங்கி ஒன்றில் இருந்து அத்தாட்சி ஆவணத்தை பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு அது தொழில் வழங்குநருக்கு நேரடியாக அனுப்பப்பட்டிருத்தல் வேண்டும்.
   d) ஊழியர்களில் NDT (சிவில்) அல்லது அதற்கு இணையான 3 ஆண்டுகள் அனுபவம் அல்லது 5 ஆண்டுகள் அனுபவத்துடன் NCT 01 தொழில்நுட்ப அதிகாரியை உள்ளடக்கி இருத்தல் வேண்டும்.
   e) நிரூபிக்கப்பட்ட ஆவணத்தை இணைத்த சான்றிதழுடன் CIDA பதிவுப் புத்தகத்தில் உள்ள ஒப்புதல்/ குறைந்தது ஒரு தொழில் வழங்குநரிடம் இருந்து கேள்வியிடக்கூடிய தொகை மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட அறிக்கைக்காக கடந்த 3 ஆண்டுகளுக்குள் இதனையொத்த பண்புகளுடன் மேற்கொள்ளப்பட்ட கட்டிடம் ஒன்றை நிர்மாணித்த அனுபவத்தை விலைமனுதாரர் பெற்றிருத்தல் வேண்டும்.
5. மீளளிக்கப்படாத கட்டணமாக 1,500,00 ரூபாவை செலுத்தி 15.00 மணி வரை அலுவலக நேரங்களில் 2024.08.12 ஆம் திகதி தொடக்கம் 2024.08.26 ஆம் திகதி வரை மட்டக்களப்பு, திருகோணமலை வீதி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை வாங்கலாம்.
6. 2024.08.27 ஆம் திகதி விலைமனு மூடப்பட்டதில் இருந்து 49 நாட்கள் வரை விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் 2024.10.15 ஆம் திகதி வரை செல்லுபடியான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் புகழ்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்ட அட்டவணை - 01 இல் குறிப்பிடப்பட்ட இலங்கை ரூபா தொகைக்காக மட்டக்களப்பு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பெயருக்கு வெளியிடப்பட்ட விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணையானது விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள வடிவத்தில் மற்றும் "நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதாக" இருத்தல் வேண்டும்.
8. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் பெறுகைக் குழு, தலைவர் பெயருக்கு இருத்தல் வேண்டும் என்பதோடு மட்டக்களப்பு, திருகோணமலை வீதி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அலுவலகத்திற்கு இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
9. விலைமனுக்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி 2024.08.28 ஆம் திகதி மு.ப. 10.00 என்பதோடு மூடப்படும் திகதிக்குப் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
10. விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்பதற்கு கோரப்படுகின்றனர்.
11. சுகாதார சேவைகள் திணைக்களத்தில் (கி.மா.) திருப்தியற்ற வகையில் பணிகளை மேற்கொண்ட அல்லது தவறான தகவல்களை சமர்ப்பித்த விலைமனுதாரர்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டு நடைமுறையில் நிராகரிக்கப்படுவர்.
12. பிராந்திய பெறுகைக் குழுவின் முடிவு இறுதி முடிவானதாகும். தமது சொந்த முடிவில் எந்த ஒரு ஒற்றை அல்லது அனைத்து விலைமனுக்களை நிராகரிப்பதற்கு பிராந்திய பெறுகைக் குழு அதிகாரம் பெற்றுள்ளது.

| அடையாள இல. | பணி விபரம் | நிர்மாணச் செலவு ரூபா (வெட் தவிர்த்து) | விலைமனு பிணை தொகை (ரூபா) | தேவையான ICTAD தரம் | பூர்த்தி செய்ய வேண்டிய நாட்காட்டி தினங்கள் |
|---|---|---|---|---|---|
| BT/RDHS/FIN/FH/CIVIL/27/MAIN/24 | ஆரையம்பதி மா.வைத்தியசாலையில் ஆண்கள் வாட்டின் சீரமைப்பு | 762,168.50 | 9,000.00 | C09 & C08 | 30 |
| BT/RDHS/FIN/FH/CIVIL/28/MAIN/24 | ஆரையம்பதி மா.வைத்தியசாலையில் புதிய வாட்டு வளாகத்தின் சிறு சீரமைப்பு | 846,212.10 | 10,000.00 | C09 & C08 | 30 |
| BT/RDHS/FIN/FH/CIVIL/29/MAIN/24 | ஆரையம்பதி மா.வைத்தியசாலையில் OPD வளாகத்திற்கான கூரையை சீரமைத்தல் | 845,774.95 | 10,000.00 | C09 & C08 | 30 |
| BT/RDHS/FIN/FH/CIVIL/30/MAIN/24 | காத்தான்குடி மா.வைத்தியசாலையில் கூரையை சீரமைத்தல் | 1,683,580.00 | 20,000.00 | C09 & C08 | 30 |
| BT/RDHS/FIN/FH/CIVIL/31/MAIN/24 | செட்டிப்பாலயம் மா.வைத்தியசாலையில் கூரை, சமையலறை மற்றும் பண்டகசாலையை சீரமைத்தல் | 1,269,510.20 | 15,000.00 | C09 & C08 | 30 |
| BT/RDHS/FIN/FH/CIVIL/32/MAIN/24 | வாகரை பிரதேச, MOH இல் (அம்மான்தவேலி, கட்டுமுறிவு) சுகாதார மத்திய நிலையங்களின் மேம்பாடு | 1,693,825.05 | 20,000.00 | C09 & C08 | 30 |
| BT/RDHS/FIN/FH/CIVIL/33/MAIN/24 | ஆரையம்பதி MOH இல் சிகிச்சை நிலையங்கள் மற்றும் MOH அலுவலகத்தின் புனரமைப்பு | 1,693,999.40 | 20,000.00 | C09 & C08 | 30 |
| BT/RDHS/FIN/FH/CIVIL/34/MAIN/24 | KPC, MOH இல் தியாவெடுவன், செம்மனோடை GHC இன் மேம்பாடு | 1,270,000.00 | 15,000.00 | C09 & C08 | 30 |
| BT/RDHS/FIN/FH/CIVIL/35/MAIN/24 | மட்டக்களப்பு, MOH இல் சின்னவூரணி, திரைமடு GHC இன் சீரமைப்பு | 1,694,000.00 | 20,000.00 | C09 & C08 | 30 |
| BT/RDHS/FIN/FH/CIVIL/36/MAIN/24 | களுவாஞ்சிகுடி MOH இல் துறைநீலாவணை, கல்லார் மருத்துவ நிலையங்களின் சீரமைப்பு | 2,107,751.97 | 25,000.00 | C08 & C07 | 30 |
| BT/RDHS/FIN/FH/CIVIL/37/MAIN/24 | செங்கலடி MOH இல் வாயில் வேலி, குழாய் வழியின் சீரமைப்பு | 914,305.07 | 10,800.00 | C09 & C08 | 30 |
| BT/RDHS/FIN/FH/CIVIL/38/MAIN/24 | கிரான், MOH இல் வேலி நிர்மாணம் | 1,270,000.00 | 15,000.00 | C09 & C08 | 30 |

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை,**
**மட்டக்களப்பு**
**2024.08.12**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

## சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்களை வழங்குவதற்கான கேள்வி

01. பின்வரும் சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்களை வழங்குவதற்காக 2024-08-29ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை தேசிய போட்டிரீதியிலான (NCB) கேள்வி கோரலின் கீழ் தகுதி மற்றும் ஆர்வமுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறியிடப்பட்ட கேள்விகள் நுகேகொடை, தலபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | உருப்படிகள் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத வைப்புக் கட்டணம் (ரூபா) | கேள்விப் பிணை முறித் தொகை |
|---|---|---|---|---|
| Q 470/24 | SPINAL NEEDLE - ANESTHESIA | Lot | 3,000.00 | கேள்வி ஆவணத்தின் பிரகாரம் |
| Q 471/24 | CVP CATHETER - ADULT | Lot | 3,000.00 | |
| Q 472/24 | TITANIUM LIGA CLIP-CTOT | Lot | 3,000.00 | |

பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்து ஆவலுள்ள தகுதி வாய்ந்த எந்த முகவரும் அல்லது கேள்விதாரரின் சார்பாக பெயரிடப்பட்ட நபரும் கொள்வனவு செய்த முழுமையான கேள்வி ஆவணங்களில் இரு நகல்களில் பொறியிடப்பட்ட கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை பணிப்பாளருக்கு எழுதப்பட்ட எழுத்து மூலமான ஒரு விண்ணப்பம்

(ii) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை கணக்காளருக்கு மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துதல்

(iii) வியாபாரப் பதிவுச் சான்றிதழின் ஒரு புகைப்படப்பிரதி

02. பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் (சமாகம் மெதுர) வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. வைத்தியசாலையால் வழங்கப்பட்ட படிவங்களில் மட்டுமே விண்ணப்பங்களை தயாரித்தல் வேண்டும். வைத்தியசாலையால் வழங்கப்படாத வேறு படிவங்களிலான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

04. வைத்தியசாலை வழங்கல்கள் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. 2024-08-14ஆம் திகதி முதல் 2024-08-28ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை வழங்கல்கள் அலுவலகத்திலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் 2024-08-29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரரின் பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

07. எந்தக் கேள்வியையும் அல்லது எல்லாக் கேள்விகளையும் நிராகரிக்கவோ/ கேள்வியின் எந்தப் பகுதியையும் ஏற்கவோ திணைக்கள கேள்வி குழுத் தலைவருக்கு சுய உரிமை உண்டு.

மேலதிக தகவல் : தொடர்பிலக்கம்: தொலைபேசி: 011-2778624, 0112778610 நீடிப்பு 3141
தொலைநகல் : 011-2778624
மின்னஞ்சல் : suppliceoffficesjgh@gmail.com

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய,**
**நுகேகொடை.**



## அறிவித்தல்

## வடமேல் மாகாண சபை

## மோட்டார் வாகன தகுதி சான்றிதழை வழங்கும் பொருட்டு கராஜ்களை அங்கீகரித்தல் – 2025

